

# தமிழரச

1982 75 காச

ஆண்டு 2013

ஐப்பசி 15









# வனவளம் பெருக...

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் **திரு. இராம. வீரப்பன்**



புதுடில்லியில் 18.10.1982ல் நடைபெற்ற வனத்துறை அமைச்சர்கள் மாநாட்டின் போது மாண்புமிகு தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்களுடன் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் உரையாற்றுகிறார். தமிழக அரசின் மாண்புமிகு சிறப்புப் பிரதிநிதி திரு மோகனரங்கம் அவர்களும் உடன் உள்ளார்.


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2013

துந்துபி — ஐப்பசி 15

மலர்: 13 இதழ்: 9

1-11-1982


தமிழ்நாட்டில் வனத்துறை மற்றும் வன விலங்குத் துறை நடவடிக்கைகள் பற்றிய கருத்துகளை வனத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் முன்வைக்க நான் விரும்புகிறேன்.

பருவ நிலைகளை ஒட்டியே எப்பொழுதும் மரங்கள் நடுவது அமைகிறது. தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவக்காற்று மழையை ஒட்டித்தான் பெரும்பாலும் மரக்கன்றுகள் நடப்படுகின்றன. எங்களது குறியளவு இடங்



களில் போதுமான அளவு மரக்கன்றுகளை நாங்கள் நட்டு உள்ளோம்.

தமிழ்நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் தென்மேற்குப் பருவமழை முற்றிலும் தவறிவிட்டதால், மரக்கன்றுகள் விநியோகிப்பதையும், நடுவதையும் பரந்த அளவில் மேற்கொள்ள இயலவில்லை. பொதுவாக, தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழையை ஒட்டித்தான் அதிக அளவில் மரங்கள் நடப்படுகின்றன. இடங்களைத் தெரிவுசெய்தல், நாற்றுகள் வளர்த்தல் போன்ற முன் ஏற்பாடுகள் அனைத்தும் முடிந்துவிட்டன. மரங்கள் நடுவதற்கான குறியீட்டை நாங்கள் வடகிழக்குப் பருவமழை முடிந்ததும் நிறைவேற்றி முடிப்போம்.

**குறியளவை நிறைவேற்றுதல்:**

தமிழ்நாட்டில் இதுவரை பொய்த்துள்ளது போல் மழை பொய்த்துப் போனால் மரம் நடும் குறியளவை நிறைவேற்றுவது மிகவும் கடினமாக இருக்கும். அதிகஅளவில் நட்டு விட்டு வெற்றியடையாமல் போவதைவிடக் குறைந்த அளவில் நட்டாலும், அது முழு வெற்றி அடைந்தால் அதுவே சிறந்ததாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. இதனால் நிதி ஒதுக்கீடு கூட மிச்சப்படும். குறியளவை அளவுக்கு மிஞ்சி வற்புறுத்துவது நல்லது அல்ல. குறியளவைவிட, பலன் தான் முக்கியம். எங்கள் பணியை அவ்வப்போது மதிப்பீடு செய்ய ஒரு முறையைத் தமிழகத்தில் பின்பற்றி வருகிறோம். உலக வங்கி, அமெரிக்க உதவி நிறுவனம் போன்ற அமைப்புகளிலிருந்து வந்த நிபுணர்கள் இந்த முறையை அண்மையில் ஆய்வு செய்துள்ளார்கள்.

பொதுமக்களுக்கு மரக்கன்றுகளை இலவசமாக விநியோகம் செய்வதையும் நான் ஆதரிக்கவில்லை. கன்றுகளை இலவசமாக விநியோகிப்பதால் ஒன்று அவை பயன்படுத்தப்படாமல் போய்விடுகின்றன. அல்லது அனுபவ சாத்தியமற்ற குறியளவை நிர்ணயிக்க உதவுகின்றன. தமிழகத்தில் ஏழைக்குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 500 கன்றுகள் இலவசமாகக் கொடுத்து, முதலாண்டு, இரண்டாவது ஆண்டுக்குப் பிறகு அவற்றை நல்ல முறையில் வளர்த்து வர ஊக்குவிப்புத் தொகை வழங்கும் திட்டம் அமலில் உள்ளது. இதில் எங்களது அனுபவம் என்னவென்றால், இதைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்வதில்லை. அதனால் மரக்கன்றுகள் குறைந்த விலையில் கொடுத்து அவை வெற்றிகரமாக வளர்க்கப்படுமேயானால் 2 ஆண்டுகளுக்குப் பிறகு வாங்கிய விலையுடன் ஊக்குவிப்புத் தொகையையும் சேர்த்துக் கொடுப்பது பற்றி நாங்கள் யோசித்து வருகிறோம். தமிழ்நாட்டில் நாங்கள் மரக்கன்றுகளை எவ்வளவு இடங்களில் நடுகிறோமோ அந்த இடங்களை வைத்துத் தான் எக்டேர் கணக்கை எடுத்துக் கொள்கிறோம். அப்படியில்லாமல் இவ்வளவு மரங்கள் விநியோகிக்கப்படுகின்றன - இவற்றில் 1 எக்டேருக்கு எத்தனை மரக் கன்றுகள் ஆகும் என்ற கணக்கோடு எக்டேர் கணக்கு எடுப்பதில்லை. எனவே குறைந்தவிலை வைத்து மரக்கன்றுகளைக் கொடுப்பதினால் வெறும் குறியளவை நிறைவேற்றுவதாக இல்லாமல் நல்ல பலன் இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

வனத்துறை மற்றும் வனவிலங்குகள் சம்பந்தமாக பிரதம அமைச்சர் அவர்கள் எங்களுடைய முதலமைச்சர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளபடி வழிமுறைகளை நிறைவேற்றிடத் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது. இது சம்பந்தமான விவரங்கள் குறித்து எங்கள் முதல்வர் அவர்கள், பிரதமர் அவர்களுக்கு விரைவில் கடிதம் எழுதுவார்.

வனவிலங்குகள் பாதுகாப்பு சம்பந்தமாகத் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். வனவிலங்குகளைப் பாதுகாப்பதில் பிரதமர் கொண்டுள்ள அக்கறையை நாடுநன்கு அறியும். இந்திய வனவிலங்கு வாரியத்தின் தலைவராக விளங்கும் முதல் பிரதமர் நம்முடைய பிரதமர் அவர்களே! பிரதமர் செயலகத்திலுள்ள சுற்றுப்புறச் சூழ்நிலைத்துறைக்கு, வனவிலங்கு பாதுகாப்பு அண்மையில் மாற்றப்பட்டுள்ளது. வனவிலங்கு போன்றவைபற்றிப் பிரதமர் அவர்கள் கொண்டுள்ள கொள்கைகளை மிகுந்த ஆர்வத்தோடும் பொறுப்போடும் தமிழக அரசு நிறைவேற்றி வருகிறது. வனவிலங்கு உய்விடங்களில் நாட்டிற்கு ஊறு செய்யக் கூடிய எந்தவிதத் திட்டத்தையும் நாம் ஒத்துக்கொள்வது இல்லை. பிரதமர் அவர்கள், முதல்வர் அவர்களுக்கு அண்மையில் எழுதியுள்ள கடிதத்திலும் இதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்தக் கொள்கையைத்தான் தமிழ்நாடு அரசு பின்பற்றி வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சிங்கவால் குரங்குகள் உய்விடப் பகுதியில், பச்சை ஆற்றின் குறுக்கே அணை ஒன்று கட்ட வேண்டும் என்று கூறப்பட்ட பொழுது அதற்குத் தமிழ்நாடு அரசு சம்மதிக்கவில்லை. உலகத்தில் இந்த ஒரு பகுதியில்தான் சிங்கவால் குரங்குகள் காணப்படுகின்றன. அவற்றைப் பாதுகாப்பதற்கு 1976 ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவரின் ஆட்சியில் இந்த உய்விடம் ஏற்படுத்தப்பட்டது.

வனவிலங்கு உய்விடப் பகுதியில் அணை கட்டப்படுவதை மறுத்துவிட்டதற்காக இந்திரா காங்கிரஸ் எம்.பி. ஒருவர், அதிலும் தமிழ்நாட்டில் திருநெல்வேலியைச் சார்ந்தவர், தமிழ்நாடு அரசைக் கண்டித்தார். தமிழக முதலமைச்சர் அவர்கள் மனிதர்களை விடக் குரங்குகளிடமே மிகவும் அக்கறை கொண்டுள்ளார் என்று அவர் கிண்டல் செய்தார். இந்திரா காங்கிரஸ் எம்.பி., ஒருவர் வனவிலங்குப் பாதுகாப்பு பற்றிய மத்திய அரசின் கொள்கையை அறியாமல் இருப்பதும், மத்திய அரசின் இந்தக் கொள்கையையும்பிரதமர் அவர்களின் ஆணைகளையும் செயற்படுத்தியதற்காகத் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களை மலிவான முறையில் கண்டித்ததும் துரதிருஷ்டவசமானதாகும்.

தமிழ்நாடுவனத்துறை சென்னை, கிண்டி தேசியப் பூங்காவில் குழந்தைகள் அரங்கில் முதலாவது அனைத்திந்திய வனவிலங்குகள் கண்காட்சியை 1982 அக்டோபர் முதல் தேதியிலிருந்து 10-ஆம் தேதி வரை நடத்தியது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் மேதகு ஆளுநர் அவர்கள் அதனைத் திறந்து வைத்தார்கள். சுமார் 3 லட்சம் மக்கள், பெரும்பாலும் குழந்தைகள் திரண்டு வந்து அக்கண்காட்சியைக் கண்டுகளித்தார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

1980 ஆம் ஆண்டு வனப் பாதுகாப்புச் சட்ட அமல் சம்பந்தமாக எனது கருத்துகளை 1982 ஆகஸ்ட் 7ஆம் தேதி புதுடில்லியில் நடைபெற்ற மத்திய வன வாரியத்தின்சிறப்புக் கூட்டத்தில் நான் ஏற்கனவே தெரிவித்துள்ளேன். சுலபமாக அமல்படுத்துவதற்குரிய வகையில் இச்சட்டம் விரிவானதாக இல்லை என்பதே எனது கருத்து. இந்தச் சட்ட அமல் சம்பந்தமாக, சுரங்கம் வெட்டுதல், சாலை போடுதல், பைப்லைன் மற்றும் மின் லைன்கள் போடுதல் பற்றியெல்லாம் அவ்வப்பொழுது பல வழிமுறைகளை மத்தியஅரசு தெரிவித்து வருகிறது. இதனால் இந்தச் சட்டத்தை அமலாக்குவது இன்னும் சிக்கலாகியுள்ளது.

எனவே (அ) தடைசெய்யப்பட்டுள்ள பல்வேறு நடவடிக்கைகள் (ஆ) மத்திய அரசின் அனுமதி பெற்ற பிறகே நிறைவேற்றப்படக்கூடிய நடவடிக்கைகள் (இ) மாநில அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்துவிட்டு நிறைவேற்றக்கூடிய நடவடிக்கைகள் ஆகியவற்றை இந்தச் சட்டம் தெளிவாக வரையறுத்துச் சொல்லவேண்டும் என்பது எனது கருத்து.

தமிழ்நாடு அரசு, மாநிலத்தில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் குடிநீர், சாலை, மின்சாரம் முதலிய வசதிகளைச் செய்துதரும் தன்னிறைவுத் திட்டத்தையும், பிரதமரின் 20 அம்சத் திட்டத்தையும் வேகமாக நிறைவேற்றி வருகிறது. சமுதாயத்தில் உள்ள பலவீனப் பிரிவினர் மற்றும் பழங்குடி மக்களை முன்னேற்றுவது பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின் முக்கிய அம்சமாகும். இதனை நிறைவேற்றுவதற்கு - சாலை, குடிநீர், மின்சாரப் போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கு 1980 ஆம் ஆண்டு வனப்பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், மத்திய அரசின் முன் அனுமதி பெற்றாகவேண்டும். இதனால் காலதாமதமாகிறது. மலைவாழ் மக்களும் மற்றவர்களும் ஏமாற்றமடைகிறார்கள். பிரதமர் அவர்களின் 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றிவைப்பதில் மாநில அரசு உண்மையான அக்கறை எடுத்துக் கொள்வதில்லை என்று அவர்கள் தவறாக நினைக்க இடம் ஏற்பட்டு விடுகிறது. இத்தகைய தாமதங்கள் ஏழை எளிய மற்றும் பழங்குடி மக்களிடையே வனப் பாதுகாப்பு சம்பந்தமாக வெறுப்பும் விரோத பாவமும் ஏற்பட வழிவகுக்கும். என்வே குறிப்பிட்ட காலகட்டத்தில் நிறைவேற்றி வைக்க வேண்டிய நல வளர்ச்சித் திட்டங்களுக்கு 1980ஆம் ஆண்டு வனப் பாதுகாப்புச் சட்டம் இடையூறாக இருக்கக்கூடாது என்று இதயப் பூர்வமாக நான் வேண்டிக்கொள்கிறேன்.





வனங்களை நல்ல முறையில் பாதுகாப்பதற்காகத் தமிழ்நாடு அரசு பல்வேறு சட்டங்களை நிறைவேற்றி இருக்கிறது. இந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் மிகுந்த இடர்ப்பாடுகளை நாங்கள் கண்டு வருகிறோம். சின்னச் சின்ன விஷயங்களில் கூடத் தனிப்பட்டவர்கள் நீதிமன்றங்களுக்குச் சென்று இடைக்காலத் தடையுத்தரவுகளை வாங்கிவிடுகிறார்கள். 1980 ஆம் ஆண்டு வனப்பாதுகாப்புச் சட்டம் சம்பந்தமாக இத்தகைய இடைக்காலத் தடையுத்தரவுகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. 'தனிப்பட்டவர்கள் மரங்களை வெட்டக்கூடாது' என்று அரசு ஆணை பிறப்பித்தால் அதற்கு இடைக்காலத் தடையுத்தரவை அவர்கள் வாங்கிவிடுகிறார்கள். வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் வரை இடைக்காலத் தடை அமலில் இருக்கிறது. அது விசாரணைக்கு வரும்பொழுது, மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டுவிடுகின்றன. எதற்காக இந்தச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டனவோ அந்தக் காரியங்களை இந்த நிலை நிறைவேற்றமுடியாமல் செய்துவிடுகிறது.

1982ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7ஆம் தேதி புதுடில்லியில் நடைபெற்ற மத்திய வன வாரியத்தின் சிறப்புக் கூட்டத்தில் வனம் மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலைத் துறை ஒன்றைத் தனியாக மத்திய அரசில் ஏற்படுத்த வேண்டுமென்றும், அதில் வன அலுவலர்களும் சுற்றுப்புறச் சூழ்நிலை நிபுணர்களும் இடம் பெறவேண்டுமென்றும், ஆலோசனை கூறினேன். மத்திய அரசில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள சுற்றுப் புறச் சூழ்நிலைத் துறைக்கு வனவிலங்குப் பாதுகாப்பு மாற்றப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. வனங்களும் வனவிலங்குகளும் ஒன்றை ஒன்று சார்ந்து இருப்பதால் வனங்களையும் சுற்றுப்புறச் சூழ்நிலைகளையும் ஒன்று சேர்த்து ஒரே நிறுவனத்தின் கீழ் கண்காணிக்கப்பட்டு ஒரே துறையாக ஆக்க, காலம் இப்பொழுது கனிந்து இருப்பதாக நான் கருதுகிறேன்.

இதனை இப்பொழுது செய்யாவிட்டால் கீழ்மட்டத்தில் இடையூறுகளும் இன்னல்களும் ஏற்பட்டுவிடக்கூடும் என நான் அஞ்சுகிறேன்.


தமிழ்நாடு வரவு செலவுத் திட்டத்தில் வனத்துறைக்கு 1982-83 ஆம் ஆண்டிற்கு நாங்கள் ரூ.23.82 கோடி ஒதுக்கியிருக்கின்றோம். வனத்துறையின் வருமானம் ரூ.16 கோடிதான். மற்ற தென்னிந்திய மாநிலங்களோடு ஒப்பிடும்பொழுது எங்கள் ஒதுக்கீடு அதிகமே. இருந்த போதிலும் வனத்துறையினர் தங்களது நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களில் மட்டும்தான் மரங்களை நட்டு வளர்க்கிறார்கள். அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் மின்சாரத்திட்டம் மற்றும் பாசனத் திட்டப் பகுதிகளிலும் மரம் வளர்ப்பதில்லை. மண்வளப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தைக் கருதி இந்தப் பகுதிகளிலும் மரங்களை வளர்க்க வேண்டியது மிகவும் அவசியம்.

மரங்களை நட்டு வளர்க்கும் பணியில் வனத்துறை மட்டுமல்லாது தேசிய நெடுஞ்சாலை, மத்திய பொதுப்பணித்துறை மற்றும் இரயில்வே ஆகியவையும் ஈடுபடவேண்டிய அவசியம் இன்றைக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே தேசிய நெடுஞ்சாலை, மத்திய பொதுப் பணித்துறை, இரயில்வே ஆகியவற்றின் வரவு செலவுத் திட்டங்களில், மரங்களை நட்டு வளர்ப்பதற்காக மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். அத்துடன் நீர்ப்பிடிப்பு மற்றும் மின் திட்டப் பகுதிகளில் ஏராளமான அளவில் மரங்களை நடுவதற்காக, மேற்கு மலைத்தொடர் வளர்ச்சித் திட்டம் போன்றதொரு திட்டத்தை உருவாக்கி, மாநிலங்களில் மின்சாரம் மற்றும் பாசனத் திட்டப் பகுதிகளில் காடுகளை வளர்க்க மத்திய உதவிக்கு வகை செய்யப்பட வேண்டும் எனவும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கூட்டத்துக்கான நிகழ்ச்சி நிரல் 1982 அக்டோபர் 14ஆம் தேதி மாலைதான் எங்களுக்குக் கிடைத்தது என்பதை நான் வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். இதனால் நிகழ்ச்சி நிரலைப் பார்த்து, இக்கூட்டத்திற்குத் தேவையான குறிப்புகளைத் தயாரித்துக் கொண்டுவர எங்களுக்கு நேரமில்லாமல் போயிற்று. மத்திய அரசு இனிமேல் இத்தகைய கூட்டங்களைக் கூட்டும்பொழுது நிகழ்ச்சி நிரலை மாநில அரசுகளுக்குக் குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்னதாக அனுப்பிவைத்தால் நலமாக இருக்கும். அப்பொழுது அவர்களுக்குத் தேவையான குறிப்புகளைத் தயாரித்துக் கொண்டு வந்து பயனுள்ள வகையில், விவாதங்களில் பங்குகொள்ளப் போதிய அவகாசமிருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**1982-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18-ஆம் தேதி புதுடில்லியில் நடைபெற்ற வனத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை மற்றும் வனத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.**



# தமிழகத்திற்கு 'குருப்ஸ்கயா' விருது!

மாண்புமிகு கல்வி அமைச்சர்

திரு. செ. அரங்கநாயகம்

மனிதனின் ஆற்றல்களைப் பெருக்கி அவற்றைவளப்படுத்திச் சமுதாயத்திற்குப் பயன்படச் செய்வதே கல்வியின் நோக்கமாகும்.

கல்வியில் செய்யும் முதலீடே பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்கி வருகின்றது. தமிழ்நாட்டில் பிறந்த எல்லோரும் கல்வி கற்று, பன்னரும் கலைஞானத்தால், பராக்கிரமத்தால், அன்பால் வாழ வேண்டுமென்ற நோக்கோடு பாடுபட்டுவரும் மாண்புமிகு புரட்சித் தலைவரின் தலைமையில் அமைந்த இவ்வரசு, கல்வி வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்தி வருகின்றது. 1955-56-ல் 11 கோடி ரூபாய் கல்வி வளர்ச்சிக்குச் செலவிடப்பட்டது. இன்று அது 291 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

கல்வியின் வளர்ச்சியில் இவ்வரசு தனிக் கவனம் செலுத்தி வந்ததன் பயனாக 6 முதல் 11 வயது மாணவர்களின் சேர்க்கை வீதம் இன்று 95 சதவீதத்தை எட்டியுள்ளது. சேர்ந்த மாணவர்கள் பள்ளியிலேயேதொடர்ந்து படிக்கும்படியான நிலையை உருவாக்குவது மிக அவசியம். தொடக்க நிலையில் பள்ளியை விட்டு நீங்குவோரின் சதவீதம் 52-லிருந்து தற்போது 30 சதவீதமாகக் குறைந்துள்ளது.

பெண்களின் வருகை தொடக்க நிலையில் கிட்டத்தட்ட 45 சதவீதத்தையும் தாண்டிவிட்டது. இது விரைவிலேயே மாணவர்களின் எண்ணிக்கையையும் மிஞ்சி விடும் என்கிற அளவுக்குப் பெண் கல்வி முன்னேற்றம் கண்டுள்ளது.

''வயிற்றுக்குச் சோறு இட வேண்டும்; இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்; பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்'' என்று பாடினார் பாரதியார். பசிக்கும் வயிறு, சோர்ந்த உடல், குழி விழுந்த கண்கள், பஞ்சடைக்கும் செவி இவைகள் உள்ள குழந்தைகள் வரலாற்றையும் கணிதத்தையும் கற்பது எப்படி? அவர்கள் உடல் வாட்டத்தைப் போக்கி உள்ளத்தின் திறனை உயர்த்துவதற்காக மாண்புமிகு முதல்வர்அவர்களால் இந்தப்பாரதி நூற்றாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ''சத்துணவுத் திட்டம்'' தமிழ்நாட்டில் அமைதியான ஒரு புரட்சிக்கு வித்திட்டுள்ளது.

சென்ற ஆண்டு செப்டம்பர் திங்கள் வரை 61,000 மாணவர்கள் அதிகமாகப் பள்ளியில் சேர்ந்தனர். இவ்வாண்டு 'சத்துணவுத் திட்டம்' துவக்கப்பட்டதிலிருந்து அதிகமாகச் சேர்ந்த குழந்தைகளின் எண்ணிக்கை 2,63,000-த்தையும் தாண்டிவிட்டது. இன்னும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு நலிவுற்ற சமுதாயத்திலிருந்து வந்துள்ள குழந்தைகள், பொலிவு உள்ளவர்களாய், கல்வியில் வலுவுள்ளவர்களாய் பல்வேறு துறைகளிலும் தலைசிறந்து நிற்கும் நிலை நிச்சயமாக உருவாகப்போகிறது.

இன்று இத்திட்டத்தினால் ஏற்படும் இன்னொரு சிறந்த விளைவு மேல் மட்டத்தில் வாழ்ந்த மழலைக் குழந்தைகளுக்கே கிட்டிய 'நாற்றங்கால்' (Nursury) பள்ளிப் படிப்பு எல்லாக் குழந்தைகளுக்கும் - குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து வரும் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் கிட்டியுள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளாகச் செயல்பட்டுவரும் மேல்நிலைக் கல்வி, தமிழ்நாட்டில் கல்வியில் ஒரு புரட்சியைச் செய்துள்ளது என்றால் மிகையாகாது.

புகுமுக வகுப்பு இருக்கும்போது சுமார் 78,000 மாணவர்களே கற்றுவந்த கல்வியை, இன்று கிட்டத்தட்ட இரண்டே முக்கால் லட்சம்மாணவர்கள் பயில்கின்றனர். அதுவும்தங்கள்ஊருக்கு அருகாமையிலுள்ள கிராமப்புற மேல்நிலைப் பள்ளிகளிலே இக்கல்வியைப் பயில்கின்றனர். அதுவும் மிகப் பெரும்பாலோர் தத்தம் தாய்மொழியிலேயே இவ் உயர் கல்வியைப் பெறுகின்றனர். கிட்டத்தட்ட 20 சதவீதத்திற்கும் அதிகமான மாணவர்கள் வாழ்க்கைக்குத் தேவையான தொழிற் கல்வியையும் பெறுகின்றனர். இன்று மேல்நிலைக் கல்வி பரவலாக்கப்பட்டு அது தாய்மொழியிலும் அளிக்கப்படுவதனுடைய ஒரு சிறந்த விளைவைத் தொழில்நுட்ப இயல் படிப்பில் சேர வரும் மாணவர்களின் கல்வித் தரத்தில் காண்கிறோம்.

தாழ்த்தப்பட்ட-பழங்குடி மக்களுக்கு 18 சதவீத இடங்கள்

ஒதுக்கப்பட்டு வருவது சுதந்தரம் கிடைத்த நாளிலிருந்தே பின்பற்றப்பட்டுவரும் முறை. ஆனால், மிகக் குறைந்த தகுதியுள்ளவர்களைக்கொண்டு கூட இந்த 18 சதவீத இடத்தை நிரப்ப முடியாத நிலை அண்மைக் காலம் வரை இருந்து வந்தது. இன்று அவர்களுக்குரிய இடங்கள் நிரப்பப்படுவது மட்டுமல்லாது அவர்கள் பெரும்பாலோர் 85 சதவீதத்திற்குக் குறையாத மதிப்பெண்களைப் பெற்றுள்ளார்கள் என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். இன்று ஆதி திராவிடப் பழங்குடி மக்கள் கல்வியில் மிகச் சிறந்த மதிப்பெண்களைப் பெற்று உயர் கல்வி பெறவேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன் அவர்களுக்காகவே 500 உயர்நிலைப் பள்ளிகளில் தனி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இது இவ்வாண்டு இன்னும் 300 பள்ளிகளுக்கு விரிவாக்கப்படவுள்ளது.

உயர் கல்வி நிலையிலும் இவ்வரசு பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி உள்ளதைத் தமிழக மக்கள் அறிவார்கள். அண்ணா பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம், தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆகிய புதிய பல்கலைக் கழகங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் தமிழ்நாடு உயர் கல்விக்கு வழங்கிய பரிசுகள் ஆகும்.

ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமமாக வாழவேண்டும் என்று கனவு கண்ட பாரதியின் கனவை நனவாக்குவதற்கான வழிமுறைகளைக் கண்டு அறிவதற்காக விரைவில் மகளிர்க்கான பல்கலைக் கழகமும் அமைய இருக்கின்றது. பல்கலைக் கழகங்கள் உயர் ஆராய்ச்சிகளைத் தமிழ்ச் சமுதாயம்-ஏன் பாரத சமுதாயமே பயன்படத் தக்க வகையில் நடத்தி, உயர் கல்வியின் தரத்தை உலகப் புகழ்பெற்ற பல்கலைக் கழகங்களுக்கு இணையாக இருக்கும்படி உயர்த்துவதற்காகவும் இப்புதிய பல்கலைக் கழகங்கள் பாடுபடுகின்றன.

அண்ணா பல்கலைக் கழகத்தில் நீர் வள ஆதாரங்கள், சுற்றுச் சூழல் பற்றிய படிப்பு, தொலை நுண் உணர் துறை, படிகங்களின் வளர்ச்சி, சக்தி ஆதாரங்கள் ஆகியவைகளைப் பற்றி உயர் கல்வி அளிப்பதற்கான மையங்கள் செயல்பட்டு வருகின்றன. பாரத கனரக மின்சார நிறுவனம், தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம், குடிநீர் வழங்கும் வாரியம், கல்பாக்கம் அணுமின் நிலையம் ஆகியவைகளின் ஒத்துழைப்புடனும் நிதி உதவியுடனும் பல்வேறு ஆராய்ச்சிகள் இப் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேபோல் அண்மையில் நிறுவப்பட்டுள்ள பாரதிதாசன் பல்கலைக் கழகம் நிருவாக மேலாண்மை இயலுக்காகவே புதிய நிறுவனம் ஒன்றை நிறுவ இருக்கின்றது. கோவையில் அமைந்துள்ள பாரதியார் பல்கலைக் கழகம் தமிழ்நாட்டிலுள்ள மூலிகைச் செடிகளின் மருத்துவ குணங்களை ஆராய்வதற்காகவும் கிராமப்புற வளர்ச்சிபற்றி ஆராய்ச்சி செய்வதற்காகவும் ஆனைமலை கேத்தேசால் மலை வாழ் மக்கள் பற்றிய ஆராய்ச்சிகளைச் செய்வதற்காகவும் உளவியல் கண்ணோட்டத்தில் பாரதியைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்காகவும் திட்டங்களைத் துவங்கிச் செயல்படுத்தி வருகின்றது. தமிழ்ப் பல்கலைக் கழகம் பஞ்ச பூதங்களின் நுட்பங்கள் கூறும் மேன்மைக் கலைகள் தமிழ்மொழியில் வேண்டும் என்ற நன்னோக்கோடும் புதிய கலைச் சொற்களை ஆக்குவதற்கும் புதிய துறைகளில் நூல்களை ஆக்குவதற்கும் திட்டமிட்டுள்ளது.



''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற கொள்கைப்படி இன்று உலகெங்கும் பரந்து கிடக்கும் தமிழ்ச் சமுதாயத்தின் கலை, பண்பாடு, ஒற்றுமை வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு பன்னாட்டுத் தமிழ் அறிஞர்களையும் தஞ்சைக்கு அழைத்து, கருத்தரங்கு நடத்தவும் ஏற்பாடு செய்துள்ளது.

ஆராய்ச்சி சமுதாய நோக்குடன் இருக்க வேண்டுமென்ற அண்மைக்காலக் கருத்தினை நூற்றிருபத்தைந்து ஆண்டுகளைத் தாண்டி நிற்கும் சென்னைப் பல்கலைக் கழகமும் புதிய புதிய துறைகளில் ஆய்வுகளை நடத்திச் செயற்படுத்த உள்ளது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் யூரியா மூலம் உரமிடுவதில் தழைச்சத்து வீணாவதைத் தடுக்க ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது.


இன்று தமிழகத்தில் பல்தொழில் பயிலகப் படிப்பு ( Polytechnic Education ) வியக்கத்தக்க அளவுக்கு வீறு நடைபோட்டு வந்துள்ளது. 1977 இல் 38 ஆக இருந்த பல்தொழில் பயிலகங்கள் இன்று 57 ஆக உயர்ந்துள்ளன. படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் 5,000 லிருந்து 8,500 ஆக உயர்ந்துள்ளது. மகளிருக்காகப் பல் தொழில் பயிலகங்கள் மட்டும் 3 லிருந்து 9 ஆக உயர்ந்துள்ளன. இப்பயிலகங்களில் வழிவழியாக வந்த பட்டயப் படிப்பைக் கற்றுக் கொடுக்காமல் பல்வேறு புதிய துறைகளிலும் படிப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இன்றைய வாழ்வின் பல்வேறு துறைகளிலும் புகுந்துள்ள பிளாஸ்டிக், இரப்பர் பற்றிய படிப்பிலிருந்து - துறைமுகங்களில் சரக்குகளை அனுப்பும் பெட்டகங்களைக் கையாளும் (Container Handling) படிப்பு வரை புதிய பல்தொழில் பயிலகங்களில் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

துள்ளித் திரிகின்ற பருவத்தில் பள்ளிக்குச் செல்ல வாய்ப்பு இல்லாத, வசதி இல்லாத, வயது வந்தோரும், எழுத்து அறிவைப் பெற வேண்டுமென்ற நன்னோக்கோடு, வயது வந்தோர் கல்வித் திட்டம் தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை செயல்பட்ட சுமார் 30,000 மையங்கள் மூலம்

இலட்சம் பேர் எழுத்தறிவு பெற்றுள்ளனர். இதில் 5¼ இலட்சம் பேர் பெண்கள் ஆவார்கள் என்பது சிறப்பாகும். மொத்தத்தில் ஏறத்தாழ பாதிப் பேர் தாழ்த்தப்பட்ட குடியைச் சேர்ந்தவர்கள்.

''கண் எனத் தகும் கல்வியை'' சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருக்கும் ஆதி திராவிட மக்களும், குறிப்பாகப் பெண்களும் இன்று தேடிப் பெறத் தொடங்கி விட்டார்கள் என்பது பெருமைக்குரிய ஒன்றாகும். தந்தைபெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் விரும்பிய சமுதாய மறுமலர்ச்சி இன்று மலர்ந்து வருகின்றது என்பதற்கு இவை எடுத்துக் காட்டுகள்.

இதனால்தான், ஐக்கிய நாட்டு அமைப்பில் 'யுனெஸ்கோ' பிரிவு சிறந்த முறையில் வயது வந்தோருக்கு எழுத்தறிவுப் பணியைப் பரப்புவதற்காக அளிக்கும் ''குருப்ஸ்கயா'' விருதினை இவ்வாண்டு தமிழ்நாடு அரசுக்கு அளித்துள்ளது. தமிழக அரசு தன்னிறைவுத் திட்டத்துடன் எழுத்தறிவுத் திட்டத்தையும், வயதுவந்தோர் கல்வித் திட்டத்தையும் இணைத்துப் பணியாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.




புதிய துறைகளை ஏற்படுத்தி கல்வி வளர்ச்சிக்கும் அதன் பயனாகச் சமுதாய முன்னேற்றத்திற்கும் பாடுபட்டு வருகின்றது. இக்கல்விப்பணி மாண்புமிகு புரட்சித் தலைவரின் தலைமையில் தொடரும், வளரும்; தமிழகம் தலைசிறந்து விளங்கும் என்பது உறுதி.

**(3.10.1982 அன்று சென்னை வானொலி நிலையத்தில் ஆற்றிய உரை)**




**மகிழ்ந்தேன்!**

அமரர் திரு. வி. க. வின் வாழ்க்கைக் குறிப்புகளும், படங்களும் தாங்கி வந்த தமிழரசு கண்டேன். அக மகிழ்ந்தேன்.

**—ச. பிரபாகரன்**
அம்மாபேட்டை.

**கருத்துப் பெட்டகம்**

'சமத்துவச் சமுதாய மலர்ச்சியே-விடுதலைத் திருநாளின் வெற்றி!' என்ற மாண்புமிகு முதல்வரின் உரைத் தொகுப்பு சிந்தையைத் தொட்டது. திரு. வி. க. பற்றிய செய்தி-படம் விளக்கம் நிறைத்த தொகுப்பு பாதுகாத்து வைக்க வேண்டிய கருத்துப் பெட்டகம்!

**—ச. புகழேந்தி,**
திருவையாறு.

**உதவி**

1—9—82 தமிழரசு இதழில் திரு. வி. க. வின் வாழ்க்கை வரலாற்றைப்பற்றியும், அவரைப்பற்றிய கருத்துக்களையும் அறிய உதவும் வகையில் வெளியிட்ட 'தமிழரசு'க்கு நன்றி.

**—கே. எம். லத்தேரி,**
ஷம்மி குமார்,
வேலூர்.

**நன்றி**

1—9—82 தமிழரசு இதழ் வாயிலாக 'தமிழ்த் தென்றல்' திரு. வி. க. பற்றி நிறையத் தெரிந்துகொண்டேன். மகிழ்ச்சி தமிழரசுக்கு நன்றி.

**—ஆர். இராஜேந்திரன்,**
கருவலூர்.

**நெஞ்சம் உருகியது!**

'மரம் வைத்தவன்' கதை படிக்க வேண்டிய ஒன்று. இது போன்ற தேசிய நலன் காக்கும் கதைகள் தமிழரசில் வர வேண்டும். படித்து நெஞ்சம் உருகியது. அறிஞர்கள் பொன்மொழிகள், அரசாணைகள் கல்வித்துறைச் செய்திகள் மேலும் வர வேண்டும்.

**—ஆர். ஜி. துரைராஜீ,**
கீழப்பழுவூர்.

**நல்ல கதை!**

1—10—82-ல் வெளியான தமிழரசில் 'மரம் வைத்தவன்' என்ற தலைப்பில் சிவசங்கரி எழுதிய கதை மிகவும் நன்றாக இருந்தது. கிராமிய நடையில் குடும்பநலம் பற்றி மறைமுகமாக எழுதிய பாங்கு பாமர மக்களுக்கும் தெள்ளத் தெளிவாக விளங்குமாறு இருந்தது.

**கா. பி. சோலைமலை,**
ராணிப்பேட்டை.

# காவிரி நீர்
# தமிழகத்திற்குப் பரம்பரை உரிமை

கி. பி. 12 ஆம் நூற்றாண்டிலும், 17-ஆம் நூற்றாண்டிலும் காவிரி நீர் தமிழகத்திற்கு வராமல் தடுத்து நிறுத்தப்பட்டது. அப்போதிருந்த தமிழ்நாட்டு அரசுகள் படை நடத்திச் சென்று தமிழகத்திற்குக் காவிரி நீரைக் கொண்டுவந்தன.

அந்த நிகழ்ச்சிகள் வரலாற்று ஆய்வுகள் மூலம் நமக்குத் தெரியவருகின்றன.

கி. பி. 1146 முதல் 1163 வரை சோழ நாட்டில் இரண்டாம் ராஜராஜ சோழன் ஆட்சி நடந்தது. அப்போது, போசள மன்னன் முதலாம் நரசிம்மன் மைசூரில் ஆட்சி செய்து வந்தான்.

முதலாம் நரசிம்மன், காவிரி நடுவே செயற்கை மலைகளை உருவாக்கி ஆற்றுப் போக்கை மாற்றினான். அதனால் தமிழ் நாட்டுக்குக் காவிரி நீர் வருவது தடைப்பட்டது. சோழ நாட்டில் கடும் வறட்சி ஏற்பட்டது. காவிரிக் கால்வாய்கள் தூர்ந்து போயின.

ஆகவே, இரண்டாம் ராஜராஜன் படையெடுத்துச் சென்று போசள நரசிம்மன் கட்டிய செயற்கை மலைகளை உடைத்துக் காவிரி நீரைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தான். சோழநாட்டின் பல பகுதிகளில் 'புதுக் காவிரி'கள் வெட்டப்பட்டன. படை நடத்திய செலவைச் சரிக்கட்ட 'காவிரிக்கரை விநியோகம்' என்ற வரியும் அப்போது விதிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிகளைத் 'தக்கயாகப் பரணி', 'ராஜராஜன் உலா', 'தொல்காப்பிய உரை' மேற்கோள் பாடல்' ஆகியவற்றின் மூலம் நாம் அறியலாம்.


கி.பி. 17-ஆம் நூற்றாண்டிலும், மைசூர் மன்னன் சிக்கதேவராசன் காலத்தில் காவிரிக்கு நீர்வராத நிலை ஏற்பட்டது, சில புதிய அணைகளால்.

தமிழ்நாட்டில் அந்நாளில் ஆட்சி புரிந்த மதுரை நாயக்க மரபைச் சேர்ந்த ராணி மங்கம்மாளும், தஞ்சை மராட்டிய மன்னன் சகசியும் தங்களுக்குள்ளிருந்த கருத்து வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டனர். மைசூருக்குத் தங்களது கூட்டுப் படையினை அனுப்பினர்.

ஆனால், வலிமையற்றிருந்த மைசூர் அணைகள் தமிழ்ப் படைகள் போகுமுன் உடைந்தன. காவிரி நீர் தமிழகம் வந்தது.

காவிரி நீர் தமிழருக்குப் பரம்பரை உரிமையுடையது என்பதை இதுபோன்ற பல வரலாற்று நிகழ்ச்சிகள் உறுதிப் படுத்துகின்றன!

—தமிழ்ப் பல்கலைக் கழகம் (தஞ்சாவூர்)
செய்தி வெளியீடு



# சுற்றுலா வளர்ச்சியில் நாம்

திரு ப. பா. கிருஷ்ணசாமி, இ.ஆ.ப.,
ஆணையர்-செயலர்,
செய்தி-சுற்றுலா (தமிழ்) பண்பாட்டுத் துறை.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது புறநானூற்றுப் பொன்மொழி. சுற்றுலா உணர்வுக்கும், உலகமெங்கும் இன்று வளர்ந்து விரிந்து வரும் சுற்றுலாத் துறைக்கும் அந்தப் பொன்மொழி மிகவும் பொருத்தமானதாகும்.

சுற்றுலாப் பயணிகளுக்கு ஏராளமான வாய்ப்புகளைத் தாராளமாக வழங்கி வருவதில் சிறந்த மாநிலமாகத் தமிழகம் திகழ்ந்து வருகிறது.

தமிழக அரசு சுற்றுலா வளர்ச்சிக்கு அளித்துவரும் முதன்மையினையும் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ள நிதி ஒதுக்கீடுகளிலிருந்தும் நமது வளர்ச்சியை நாம் அறியலாம். சுற்றுலாத் துறைக்கு 1975-76-ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு ரூ. 22.70 இலட்சம் தான். ஆனால் தற்போது இந்நிதி ஒதுக்கீடு ரூ. 1 கோடியைத் தாண்டி, நடப்பு ஆண்டில் அதாவது 1982-83-ல் ரூ. 140.40 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

பண்டைய தமிழர்களின் பண்பாட்டுச் செழுமையினையும், கலை வளர்த்த பல்லவர்களையும் அயல் நாட்டினர் அறிந்து மகிழ மாமல்லபுரத்தில் கடற்கரையருகில் அருங்காட்சியகம் ஒன்று ரூபாய் 40 இலட்சம் செலவில் அமைக்கத் தமிழக முதல்வர் அண்மையில் அடிக்கல் நாட்டியுள்ளார்.

சிற்பக் கலை, கோயிற் கட்டடக் கலையின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதாய் இந்தியத் துணைக் கண்டத்திலேயே இவ்வகையில் முதலாவதாக இக்காட்சியகம் அமையும்.

ரூபாய் 47 இலட்சம் செலவில் மாமல்லபுரத்தில் 'ஒலி-ஒளிக் காட்சி (Sow-Et-Lumiere) ஒன்று அமைக்கும் பொருட்டு, 1982-83-ல் ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வோரு மாவட்டத்திலும் உள்ளூர் மக்கள் சென்று வருவதற்கு ஏற்ற 40 இடங்களைத் தேர்ந்தெடுத்து, அவ்விடங்களில் தமிழ்நாட்டுப் போக்குவரத்துக் கழகங்களின் மிகை வருமானத்திலிருந்து அடிப்படை வசதிகளைப் பெருக்கும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் முதலில் 30 மாவட்ட உலாத்தலங்கள் மேம்படுத்தப்படும்.

சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தருவதில் இந்திய நாட்டில் ஓர் முன்னோடியாகத் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் விளங்குகிறது. இதன் சுற்றுலா வளர்ச்சி பயணத் திட்டங்கள் சிக்கனம் கருதியும், அளிக்கப்படும் வசதிகளும் பண்புமிகு பணியும் அனைவராலும் பாராட்டப்படுகின்றன. 10 ஆண்டுகளுக்கு முன் 399 படுக்கைகளுடன் கூடிய ஐந்து 'ஓட்டல் தமிழ் நாடு' கொண்டிருந்த சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தற்போது 1,334 படுக்கை வசதிகள் கொண்ட 15 ஓட்டல்களும், 3 இளைஞர் விடுதிகளும், 2 பெரு வழி ஓய்வு விடுதிகளும் கொண்டுள்ளது. மதுரை, கோயம்புத்தூரில் உள்ள 'நட்சத்திரத் தகுதி' (Star) உணவகங்கள் இதில் அடங்கும்.


பல்வேறு வரலாற்றுச் சுற்றுலா முக்கியத்துவத்தினைத் தமிழகம் பெற்றிருந்தும் கூட, இந்தியாவிற்கு வந்த 8 இலட்சத்திற்கும் மேலான வெளிநாட்டுப் பயணிகளில் சுமார் 2 லட்சம் பேர்தான் 1981-ம் ஆண்டு தமிழ் நாட்டுக்கு வந்தனர் என்பதைக் குறிப்பிடத்தான் வேண்டும். இந்தப் போக்கை மாற்ற உரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

இந்த அடிப்படையில் சிங்கப்பூர், ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பல்வேறு சுற்றுலாப் பயணங்களுக்கான பயணச் சீட்டுகளை விற்க முகவர்கள் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

தமிழகம் காண வருவோரை 'பயணிகளாக வரவேற்றுப் பாசம் மிகுந்த நண்பராக வழியனுப்புவோம்' என்ற உயரிய நோக்கத்தோடு செயலாற்றி வருகின்றோம்.

[சென்னை வானொலியில் (19-9-'82) ஆற்றிய உரையிலிருந்து]







மாமல்லபுரத்தில் இளைஞர் விடுதி

## ஆசிரியர் தினக் கவிதைப் போட்டி

ஆசிரியர் தினத்தையொட்டி (செப்டம்பர் 9) சென்னை மாவட்டப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்த கவிதைப் போட்டியில் பரிசுபெற்ற கவிதைகள் இங்கே இடம் பெறுகின்றன.

சென்னை மாவட்டத்தில் உள்ள அரசு அங்கீகாரம் பெற்ற துவக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் என இதில் 56 பேர் கலந்து கொண்டனர். முதற்பரிசு ரூ. 500, இரண்டாம் பரிசு ரூ. 300, மூன்றாம் பரிசு ரூ. 200, ஆறுதல் பரிசு ரூ. 100 வழங்கப்பட்டன.



## முதல்வரின் சத்துணவுத் திட்டம்

(முதல் பரிசு)

—கே இராமலிங்கம், எம்.ஏ.,எம்.எச்,இடி.,

அள்ளித் தருவதிலே அகமகிழும் வள்ளல்களின்
உள்ளத்தில் மட்டுமே உதித்துவரும் திட்டமிது.

ஆக்கமிகு சிந்தனை ஊற்றுதமிழ் நாடென்னும்
போக்கைப் பிறருக்குப் புலப்படுத்தும் திட்டமிது.

ஆடுமாடு மேய்க்கின்ற இளஞ்சிறார் பள்ளியினைத்
தேடுமாறு வைத்துவிட்ட திருப்புமுனைத் திட்டமிது.

பத்தையும் போக்குகிற பசிப்பேயின் அடிவயிற்றில்
கொத்தாக நெருப்பினையே, கொட்டுகிற திட்டமிது.

'யாரங்கே? வாழும் மனிதருக்குச் சோறிடுங்கள்'
பாரதியின் கட்டளைக்குப் பணிபுரியும் திட்டமிது.

சேய்பசி பொறுக்காமல் சிந்துகின்ற கண்ணீரில்
தாயினம் கரையாமல் தடுத்தாளும் திட்டமிது.

வருமுன்னர் காப்பதுதான், வல்லவர்கள் செய்கைஎனக்
குரலெழுப்பும் குறளுக்குச் செவிமடுக்கும் திட்டமிது.

'இளமை வறுமை, அனைத்திலும் கொடிதென்ற'
முதியதமிழ்க் கிழவி முறுவலிக்கும் திட்டமிது.

ஊட்ட உணவோடு, உணர்வுக்கு வள்ளுவமும்
வாட்டந் தவிர்த்துப்புது வாழ்வுதரும் திட்டமிது.

எல்லாரும் வாருங்கள் இயன்றவரை தாருங்கள்
சொல்லாரும் பிறவிப் பயனடையும் திட்டமிது.

(இரண்டாம் பரிசு)

—அ. கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.,

பிள்ளை வயிற்றினிலே பெருந்தீயாய்ப் பசியிருக்கக்
கல்வியில் நாட்டம் கணப்போதும் வந்திடுமோ?
இல்லாத குறைநீக்கும் எத்தனையோ திட்டங்கள்
கல்லாக் குறைபோக்கும் கனிவான திட்டங்கள்
எல்லாமும் தமிழகத்தை ஏற்றமுடன் நடத்திவர
எத்திசையும் போற்ற எடுத்தளித்தார் திட்டமிதை
சத்தான திட்டமிது ''சத்துணவுத் திட்டம்''
ஆரம்பப் பள்ளிமுதல் ஆறாம் வகுப்புவரை
அனைத்துச் சிறார்க்கும் அமுதமான சத்துணவு!
காய்ந்த சிறுவர்க்குக் காய்கறிகள் நல்லுணவு
ஆய்ந்த கனியுண்டு அகம்நிறைந்த கனிவோடு!
இருநூறு நாட்கள் இயல்பாய் உணவளித்த
ஒருமதிய உணவென்னும் திட்டமுண்டு முன்பு
ஆண்டு முழுமைக்கும் அமுதான சத்துணவை
அன்போடு அளித்திடவே ஆவன செய்திட்டார்!
பட்டி தொட்டி முதல்பரந்துவரும் பட்டணமும்
கட்டடங்கள் கட்டிக் கனிவாய்ச் சத்துணவை
இட்டுக் களித்தவரின் இனிய முகம்பார்த்து
கல்வி புகட்டியவர் கண்திறந்து வைத்திட்டார்!
கைம்பெண்கள் வாழ்வில் கைவினைக் கேற்றவுணவு
ஆக்கும் பொறுப்பதனை அவர்க்கே அளித்திட்டார்!
எத்திசையும் போற்றுமிச் சத்துணவுத் திட்டத்தை
இத்தருணம் நாம்பெற்றோம் ஏற்றமுடன் நடத்திடுவோம்!
நிதிநி றைந்தவர் நிதிக்குவை தாரீர்
நிதிகு றைந்தவர் மதிநலம் அருள்வீர்!
கல்விநம் தேசத்தின் கண்ணைத் திறப்பதென்பர்
கண்ணுக்கு ஒளியூட்டல் சத்துணவுத் திட்டமன்றோ?




(மூன்றாவது பரிசு)

—எல். தாண்டவமூர்த்தி

பாண்டவர் படைக்கு வேண்டிய மட்டும்
படையல் போட்ட பெருஞ்சோற் றுதியன்
மீண்டொரு பிறவி எடுத்துவந் தானோ?
மேக ராஜனாய் ஆளவந் தானோ?
பூண்டாய்ப் புழுவாய் ஏழையர் பெற்ற
பூந்தளிர் எல்லாம் பசிப்பிணி யாலே
ஆண்டாண் டுகளாய் அழுதகண் ணீரை
அழிக்கப் பிறந்த அமுத சுரபியோ!

கல்விக் கூடம் செல்வதைத் தடுக்கும்
கஞ்சிக் கில்லா நிலைமைகள் மாறும்;
பள்ளிக் கூடம் தோறும் படிக்கப்
பாலர்கள் கூட்டம் விரைந்தே போகும்!
எள்ளுக் குள்ளே எண்ணெயென் றிருக்கும்
ஏழை வீட்டுக் குழந்தைகள் திறமை
செல்வர் வீட்டுப் பிள்ளையின் மேலாய்ச்
சிறக்கத் திகழும் சத்துண வாலே!

புரதமும் தாதும் பொருந்திய காய்கறி
பொதிந்த பருப்புக் குழம்புச் சோறு
விரதம் இல்லை; விடுமுறை நாளும்
விருந்துண வோடு குறள்படிப் புண்டு!
சரிவிகி தத்தில் நிதமொரு வகையாய்ச்
சத்துண வதனைச் சுவையாய்த் தருவார்
பெருநிதிச் செலவில் பிள்ளைகள் வாழப்
பிறந்த திட்டம் இதைவாழ்த் துவமே!



(ஆறுதல் பரிசு)

—புலவர் அரு. சேகர், எம்.ஏ.,

சீத்தான திட்டமிது சத்துணவுத் திட்டம்
வித்தான சிறுவர்களின் நல்வாழ்வுத் திட்டம்
ஏழைகளின் இன்னல்களைக் களைந்தெறியும் திட்டம்
வாழைபோல் வம்சத்தை வளரவைக்கும் திட்டம்
சமபந்தி உணவளித்துக் குழந்தைகளின் உளத்தில்
இனவேறு பாட்டினையே தகர்த்தெறியும் திட்டம்
சத்தில்லா ஏழைகளின் குழந்தைகளைக் காக்கத்
தத்தெடுத்து வாழ்வளிக்கும் அரசினிந்தத் திட்டம்
தாய்ப்பாலை மறந்துவிட்ட வறுமையுற்ற குழந்தை
காய்வகைகள் கனிவகைகள் உண்டறிந்த தில்லை
பள்ளிவந்த மாணவனோ பசியினிலே வாடி
பள்ளிகொண்ட கதையிங்கே பலவுண்டு கோடி
பக்கத்துப் பிள்ளையெலாம் பலவகையாய் உண்ண,
வக்கற்ற நாயினைப்போல் வால்குழைத்து நிற்பர்
பாடத்தில் கவனமின்றிப் பக்கத்தைப் புரட்டி
கூடத்தில் மயங்கிடுவார் குசேல புத்திரர்கள்
சீர்காழிக் குளக்கரையில் சம்பந்தர் அழவே
பார்காக்கும் பரமனவன் ஞானப்பால் ஈந்து
ஒருமூன்று வயதினிலே உணவளிக்கும் முறையை
திருவூரின் கோயிலிலே தொடங்கியவன் வைத்தான்
பாலகர்க்குப் பகலுணவைச் சமைக்கின்ற பணியால்
நூலிழந்த கைம்பெண்கள் மறுவாழ்வு பெற்றார்
பள்ளிவேலை நாள்மட்டும் உணவுண்ட சிறுவர்
பள்ளியில்லா நாட்களிலும் மகிழ்ந்துண்டு வளர்வர்
செவியுணவைப் பெறவரவே வலுவில்லாச் சிறுவர்
செவிக்குணவு பெறுவதற்கு வழிவகுக்கும் திட்டம்
தானத்தில் சிறந்ததிந்த அன்னதானத் திட்டம்
வானம்வரை பாலவாடி புகழ்பரவும் திட்டம்
வறுமையுற்ற பாலகரின் நல்வாழ்வை எண்ணி
பெருந்தொகையைப் பசிநீக்கும் மருந்தாக அளிப்போம்
வருங்கால பாரதத்தை வளமாகப் படைக்க
வருங்காலச் சிற்பிகளை வலுவாக்க முயல்வோம்!




(ஆறுதல் பரிசு)

—மா. நாகரத்தினம்
—தமிழாசிரியை

நம்முடைய குழந்தைகள் நாட்டின் சொத்தென
எண்ணியே கொணர்ந்த எழில்மிகு திட்டம்!
வறுமை போக்க வந்த திட்டம்!
ஏழ்மை நீக்க எடுத்த திட்டம்!
அரசே ஏற்று நடத்தும் திட்டம்!
அன்பு அடக்கம் ஒழுக்கம் ஒற்றுமை
வளர வந்த வளமான திட்டம்!
வளமான உடலுளம் வழங்கவந்த திட்டம்!
பச்சைக் காயும் பருப்புடன் சோறும்
இச்சையுடன் வழங்கும் இனிய திட்டம்!
உருவிலா அரக்கன் வறுமை என்போன்
பிடியிலே அகப்பட்ட பிஞ்சு நெஞ்சங்கள்
ஆத்திரக் காரராய் வன்முறை யாளராய்
மாறாமல் காக்கவந்த மாண்புடைத் திட்டம்
அகல்விளக் காக ஆயிரம் காலம்
அணிநகை யாக ஆண்டுகள் தோறும்
புன்னகை பூத்துப் புதுமுகம் காட்டிச்
சின்னக் குழந்தைகள் சிரிப்புடன் வாழ
விழிப்புடன் உலகில் வளமுடன் வாழ
ஒளியாக வந்த ஓங்குபுகழ்த் திட்டம்!
பூவிரி மணம்போல் புத்தமுதச் சுவைபோல்
காவிரி நீர்போல் கடல்காணும் மணல்போல்
இலவச சத்துணவுத் திட்டமிது வாழ்க!
இமயம்போ லென்றும் இணையற்று வாழ்க!!

# ஒரே கல்லில் ஒரு கொத்து மாங்காய்



திரு பி. ஆர். பிந்துமாதவன்,
அரசு துணைச் செயலர், இ.ஆ.ப.,
ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை.

**சாண எரிவாயு!**
**முகம் சுளிக்க வேண்டாம்.**

அது உங்களின் நன்மைக்காக-சிறப்பாக உங்கள் இல்லத்தரசிகளின் அன்றாட வாழ்க்கை வசதிக்காகவே உருவாக்கப்பட்டது. எனவே, இது ஒவ்வோர் இல்லத்தரசிக்கும் இன்றியமையாததாகும்.

குறைந்தது மூன்று மாடுகள், சமையலறையையொட்டி சிறிய திறந்தவெளி, த்ண்ணீர் வசதி இருந்தாலே போதும் சாண எரிவாயு அமைப்பதற்கு.

இதனால் என்னென்ன நன்மைகள்?

புகை சூழ்ந்த, இருள்படர்ந்த ஒட்டடைகள் நிரம்பிய சமையலறை பழங்கதையாகி, சாண எரிவாயுவால் இலகுவாக திறமையாக குறைந்த நேரத்தில் துப்புரவான சமையல் செய்ய முடிகிறது. விறகுகளையும், மழைக்காலங்களில் ஈர விறகுகளையும் கொண்டு சமையல் செய்து கண்களைக் கசக்கிக் கொண்டு தவிக்க வேண்டியதில்லை. இதனால் பெண்களின் சமையல் நேரம் வெகுவாகக் குறைந்து விடுவதால் அவர்கள் தங்களுடைய எஞ்சிய நேரத்தை, தோழிகளுடன் இனிமையாகக் கழிக்கலாம். ஆக்கப் பணிகளில் ஈடுபட்டு சமூகப்பணியாற்றலாம். பேரும், புகழும் பெறலாம்.

தோட்டத்தைச் சுற்றியும், சமையலறையிலும், ஈக்கள் கொசுக்கள் மொய்த்து சுகாதாரக் கேடுகள் விளைவதில்லை. சாண எரிவாயுவினால் வீட்டிற்குமட்டுமின்றி, நாட்டிற்கும் தொண்டாற்றும் பெரும் பேறு உங்களை மறைமுகமாகத் தேடி வருகிறது.

விறகுக்காக மரங்களைவெட்டி வீழ்த்தி, தட்ப வெப்ப நிலைகளுக்குப் பெரும் கேடு விளைவது தவிர்க்கப்படுவதுடன், நாட்டின் இயற்கை வளம் பெரிதும் போற்றிப் பாதுகாக்கப்படுகிறது.

சாண எரிவாயு அமைப்பதற்குத் தொடக்கத்தில் முதலீடு சற்று அதிகமே என்றாலும், அரசு மானியமும் வங்கிகள் அளிக்கும் கடனுதவியும் இணைந்து உங்களுடைய செலவைக் குறைத்து எரிவாயுவை அமைக்கத் துணை செய்கிறது. இவ்வெரி வாயுவினால் கிடைக்கும் நன்மைகளைப் பொருளாதார அடிப்படையிலே சில ஆண்டுகளுக்குப் பின்னர் கணக்கிட்டால் சாண எரிவாயுவிற்குச் செலவிட்ட தொகை நமக்குத் திரும்ப கிடைத்து விடுவதுடன், வரும் ஆண்டுகளில் அது நமக்கு இலவசமாகவே அமைந்து விடுகிறது.

சாண எரிவாயுவைக் கொண்டு சமையல் செய்வது மட்டுமின்றி விளக்குகள் எரிக்கலாம். இயந்திரங்கள் இயக்கலாம்; நீரிறைக்கலாம்.

இவற்றினை விளக்கும் முறையில் திரு கே. கண்ணுசாமி அவர்களின் தோட்டத்திற்கும் வீட்டிற்கும் நாம் இப்போது செல்கிறோம்.

பெரியார் மாவட்டம், அம்மாப் பேட்டை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சிங்கம்பேட்டையில் இவர் வசிக்கிறார். இவருடைய வீட்டில் 14 மாதங்களுக்கு முன்பாகவே சாண எரிவாயு நிறுவப்பட்டு விட்டது. மொத்தச் செலவான ரூ. 8,000-ல் ரூ. 1,500ஐ மானியமாகப் பெற்றுக் கொண்டார். இவர் 20 மாடுகளின் சாணத்தைக் கரைத்துப் பயன்படுத்துகிறார்.

இவருடைய குடும்பம் 14 பேர்களைக் கொண்ட கூட்டுக் குடும்பம் எனலாம். அங்கு ஒரு சக்தியுள்ள கரும்புச்சாறு பிழியும் இயந்திரமும் இயங்குகிறது. 2 விளக்குகள் இரவைப் பகலாக்குகின்றன. இயந்திரம் மட்டுமே நாளொன்றுக்கு 2 மணி நேரம் வீதம் மாதத்திற்கு 20 நாட்கள் வேலை செய்கிறது.

திரு கண்ணுசாமி கூறுகிறார்: 'மழைக்காலம், பண்டிகை நாட்கள் போன்ற நாட்கள்தவிர ஏனைய நாட்களில் எங்கள் குடும்பத்திற்குத் தேவையான எரிவாயு தொடர்ந்து கிடைக்கிறது. நாங்கள் விறகுகளையோ மண்ணெண்ணெய்யையோ சமையலுக்குப் பயன்படுத்துவதே இல்லை. தவிர எங்கள் வீட்டில் வெந்நீருக்காக மின்கருவிகளோ சமையல் எரிவாயுவோ கிடையாது. சாண எரிவாயுவையே முழுதும் நம்புகிறோம். இதனால் எங்களுக்கு எரிபொருளைப் பொறுத்தமட்டில் மாதத்திற்கு ரூ. 240 மிச்சமாகிறது. அதனுடன் துப்புரவாகச் சமையல் செய்ய முடிகிறது. தவிர எங்கள் வயலிலும், தோட்டத்திலும், உள்ள கருவேல மரம், வேப்ப மரம், ஊஞ்சமரம், போன்றவற்றை வெட்டிச் சாய்த்து, பாழடிக்காமல் இருக்க முடிகிறது''

திரு கண்ணுசாமி அவர்களின் கணக்குப்படிப் பார்த்தால் ரூ. 8,000இல் அரசு மானியம் ரூ. 1,500 போக-எஞ்சிய ரூ. 6,500 அவருக்கு 27 மாதங்களில்திரும்பக் கிடைத்து விடுகிறது. பின்னர் சாண எரிவாயுவிற்குச் செய்த முதலீடு சரிக்கட்டப்பட்டுப் பல்லாண்டுகளுக்குத் தொடர்ந்து செலவேதுமின்றி நன்மையே கிடைக்கிறது.

மைய அரசினால் கொணரப்பட்டுள்ள, இத்திட்டத்தை, தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயலாற்றுகிறது. கடந்த ஈராண்டுகளுக்கு மட்டும் தமிழகத்திற்கு 6,500 சாண 'எரிவாயு அமைப்புகள் ஒதுக்கப்பட்டன. வட்டார வளர்ச்சி அலுவலர்கள்-ஊர் நல அலுவலர்கள் ஆகியோரின்மூலமாக இத்திட்டம் பரவலாகச் செயல்படுத்தப்படுகிறது.

**இதனை உங்கள் இல்லத்திலே அமைத்துத் தரவும், மானியம் அளிக்கவும் உங்களுக்காகஅவர்கள் என்றும் காத்திருக்கிறார்கள்.**

**இவர்களின் உதவியை நீங்களும் ஏன் பெற்று, பயனடையக் கூடாது?**

# கண்கவர் காஞ்சீனா

நமது நாட்டுப் பட்டாடையின் பெருமையினைப் பாரே அறியும். காஞ்சிபுரத்தின் பட்டுச்சேலைகளின் பெருமை கடல் கடந்தும் போற்றப்படுகிறது. "காஞ்சிபுரம் சென்றால் காலாட்டிப் பிழைக்கலாம்" என்று ஒரு பழமொழி உண்டு. இதிலிருந்து காஞ்சிபுரத்தின் நெசவுத் தொழிலின் சிறப்பு நமக்குப் புலனாகிறது.

பட்டுக்குப் புகழ்பெற்ற தமிழகத்தில் வண்ணமும் வனப்பும் நிறைந்த ''காஞ்சீனா'' என்ற புதுரகப்பட்டுச் சேலைகளின் அறிமுக விழா சென்னை கன்னிமரா ஓட்டலில் 21-8-82 அன்று சீரும் சிறப்புமாக நடைபெற்றது. மாண்புமிகு கல்வி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் குத்துவிளக்கேற்றி அறிமுகம் செய்து வைத்தார்.

**காஞ்சீனாவின் சிறப்பு**

சீனமக்கள் குடியரசிலிருந்து, மத்திய பட்டு நிறுவனத்தினரால் இறக்குமதி செய்யப்பட்ட பட்டு நூலைப் பாநூலாகவும், பாரம்பரிய மிக்க தமிழ்நாட்டுப் பட்டு நூலை ஊடு நூலாகவும் கொண்டு காஞ்சீபுரம், ஆரணி, சேலம், கும்பகோணம் ஆகிய இடங்களில் தயாரிக்கப்பட்டது, 'காஞ்சீனா' பட்டுச்சேலை. வண்ணத்திலும், வனப்பிலும் மக்களின் எண்ணத்திலும் புதியதோர் சாதனையை ஏற்படுத்தக் கூடியது. வழக்கத்திலிருந்து மாறுபட்ட இந்தக் கலப்பு நெசவின் விளைவால், ஒரு வியத்தகு சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. காஞ்சீனா சேலையைத்தொட்டுப் பார்த்தால் ஒருவித இனிமை, வண்ணத்தில் ஒரு புதுச்சேர்க்கை உயரிய கட்டமைப்பு. இதுவே புதுவகைப் பட்டுச் சேலையின் தனிச்சிறப்பு.

மாண்புமிகு கல்வி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் பேசுகையில், ''இந்தியா முழுவதிலும் நெசவுத் தொழிலை நம்பி வாழ்கிற மக்களின் எண்ணிக்கை 40 இலட்சத்தையும் தாண்டி விட்டது.

''நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் துயரங்களைத் துடைப்பதோடு, கைத்தறித் துறையில் அபிவிருத்தியையும் வாங்குவோரின் ஆவலையும் நிறைவு செய்கிற வகையில் இத்தகைய புதியரகங்களை, கோஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்தி வருகிறது. இந்திய அரசின் மூலம் சீனாவிலிருந்து 250 டன் பட்டு நூல் இறக்குமதி செய்யப்பட்டதில், தமிழகத்திற்கு மட்டும் 90 டன் பட்டுநூல் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் 32 டன் பட்டு நூலைப் பயன்படுத்தி, 65 இலட்டம் ரூபாய் மதிப்புள்ள பட்டுச் சேலைகள் 'கோ-ஆப்டெக்ஸ்'' நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளன.

**அட்டை சொல்லும் — கட்டுரை**

இந்த 'காஞ்சீனா' பட்டுச் சேலைகளுக்கான வடிவமைப்புகள் காஞ்சிபுரத்திலுள்ள மத்திய அரசின் நெசவாளர் சேவா நிலையமும், சென்னையிலுள்ள 'கோ] ஆப்டெக்ஸ்' வடிவமைப்பு நிலையமும் இணைந்து அமைத்துக் கொடுத்துள்ளன. முதலில், சென்னை மாநகரிலுள்ள 'கோ-ஆப்டெக்ஸ்' விற்பனை நிலையங்களிலும் படிப்படியாக மாவட்ட தலைநகரங்களிலுள்ள 'கோ-ஆப்டெக்ஸ்' விற்பனை நிலையங்களிலும் ''காஞ்சீனா'' பட்டுச் சேலைகள் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்படும். தீபாவளி நேரத்தில் அனைத்து 'கோ—ஆப்டெக்ஸ்' விற்பனை நிலையங்களிலும் ''காஞ்சீனா பட்டுச் சேலை''கள் விற்பனைக்கு வந்துவிடும்'' என்று குறிப்பிட்டார்.

கைத்தறி ஆலோசனைக் குழுத் தலைவர் அனகாபுத்தூர் திரு. இராமலிங்கம்எம்.எல்.சி.அவர்கள் பேசுகையில், ''சீனாவிலிருந்து பட்டு நூல் தமிழகத்திற்கு இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. கர்நாடகத்திலிருந்து வாங்கப்பட்ட பட்டு நூலின் விலை உயர்வு பெற்று ஒரு கிலோ ரூ 400லிருந்து ரூபாய் 700 வரை உயர்ந்துவிட்டதால் அதிலிருந்து தயாரிக்கப்பட்ட பட்டுச்சேலைகளின் விலை சாதாரண மக்களால் வாங்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் பட்டுச்சேலைகளின் விற்பனையும் குறைந்து, இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் மிகுந்த துயரத்திற்கு ஆளானார்கள்.

''இந்தப்பிரச்சனையைத் தீர்க்க 80 பேர்கள் கொண்ட தூதுக் குழுவினர் எனது தலைமையில் டெல்லி சென்று இந்தியப் பிரதமரைச் சந்தித்து, சீனாவிலிருந்து பட்டு நூல் இறக்குமதி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியுள்ளோம். நமது பிரதமர் அவர்கள் எங்களது நியாயமான கோரிக்கையை மிகுந்த பரிவுடனும், அனுதாபத்துடனும் ஏற்று துரித நடவடிக்கை எடுத்தார்கள். பிறகு சீனாவிலிருந்து பட்டுநூல் இறக்குமதி செய்யப்பட்டது. இறக்குமதியினால் கர்நாடகத்தில் ஒரு கிலோ பட்டு நூலின் விலை 700 ரூபாயிலிருந்து ரூ. 400 ஆகக் குறைந்துவிட்டது. பட்டுத் தொழிலுக்கு ஏற்பட்டிருந்த கச்சாப்பட்டுப் பற்றாக்குறைக்கு ஒரு நிவாரணம் தேடித்தந்தது மத்திய அரசு'' என்று குறிப்பிட்டார்.

கைத்தறித் துறை இயக்குநர் திரு. கோபாலகிருஷ்ணகாந்தி அவர்கள் தமது வரவேற்புரையில், ''பட்டுச் சேலைக்குப் பெயர் பெற்ற பாரத நாட்டில் வாரணாசி, காஞ்சிபுரம், ஆரணி, சேலம், தர்மாபுரம் ஆகிய பட்டுச் சேலைகள் மக்கள் பழக்கத்தில் வந்து, காலம் காலமாகப் பெண்கள் விரும்பி அணிந்து வருகின்றனர். இத்தகைய சேலைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல் 'காஞ்சீனா' அமைந்துள்ளது'' என்றார்.

ஒரு ஆண்டுக்கு 200 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 1981 தீபாவளியின் போது மட்டும் 31.94 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறிப் பட்டுச் சேலைத்துணிகள் விற்பனையாகியுள்ளன.

1982 தீபாவளிக்கு 'கோ—ஆப்டெக்ஸ்' நிறுவனம் 50 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறி - பட்டுத் துணிகளை விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**நிகழ்ச்சித்தொகுப்பு**

**ஜி. ஆனந்தன்**



மன்னர்கள் உல்லாசமாக வீற்றிருப்பது ''கொலுவிருத்தல்'' என்று சொல்லப்பட்டது. மக்கள் நெஞ்சில் நிலைத்து நிற்கும் தலைவர்கள் 'மக்கள் உள்ளங்களில் கொலுவிருக்கிறார்கள்' என்று சொல்லப்படுகின்றனர். மன்னர்கள் கொலுவிருக்கும் போது பாடப்படும் ஸ்ரீராகத்திற்கு மற்றொரு பெயர்: கொலுராகம்.

# நெஞ்சில் கொலுவிருக்கும் பொம்மைக் கொலு

சென்னை ராஜாஜி மண்டபத்தின் நெடிய படிக்கட்டுகளில் ஏறி உள்கூடத்தை அடைகிறோம்.

பாயும் புலிகள் நம்மைப் பயமுறுத்துகின்றன.

வேங்கை நிகர்த்த வேட்டை நாய் ஒன்று அமர்ந்திருக்கிறது.

அதன் அருகே அமைதியே வடிவமான அண்ணல் காந்தி அடிகள்.

புத்தராக மாறிய சித்தார்த்தர் போதனை செய்து கொண்டிருக்கிறார்.

மாதவிப் பொன் மயிலாள் அணிமணிகள் அணிந்து நம்மை வரவேற்கிறாள்.

ராதையும் கண்ணனும் மோக மயக்கத்தில் மயங்கியிருக்கின்றனர்.

புத்தரும், அண்ணலும், பூவை மாதவியும் ஒரே இடத்தில் எப்படி அமர்ந்திருக்க முடியும் என்ற எண்ணம் ஏற்படுகிறதல்லவா! அவர்கள் எல்லாரும் பொம்மை வடிவில் காட்சியளித்தால் ஒரே இடத்தில்-ஒரே சமயத்தில்-இடம் பெறுவது வியப்பில்லையே!

ராஜாஜி மண்டபத்தில் அக்டோபர் 13 ஆம் நாளிலிருந்து 19ஆம் நாள் வரை பூம்புகார் நிறுவனமும், மைய அரசின் கைவினைப் பொருள் கழகத்தின் வளர்ச்சி ஆணையர் அலுவலகமும் இணைந்து நடத்திய பொம்மைக் (கொலு) கண்காட்சியில் தான் மேற்சொன்ன அதிசயம் நடந்தது.

தமிழ்நாடு, ஆந்திரம், கருநாடகம், பாண்டிச்சேரி ஆகிய நான்கு மாநிலங்களும் இதில் கலந்து கொண்டன. ஏறக்குறைய 1.5 லட்ச ரூபாய் மதிப்புள்ள பொம்மைகள், கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன. 50 காசிலிருந்து 1,200 ரூபாய் விலை வரையில் பொம்மைகள் கிடைத்தன.

பொம்மைகளில்தான் எத்தனை வகைகள்? களிமண், பொம்மை, காகிதப் பொம்மை, பீங்கான் பொம்மை, மரப்பொம்மை, பிளாஸ்டர் ஆப் பாரிஸ் பொம்மை துணி பொம்மை இப்படிப் பல்வேறு வகைகள் கண்காட்சியில் நிறைந்திருந்தன. ஒயரினால் செய்யப்பட்ட பொம்மைகளும் வந்திருந்தன. அனைத்தும், சிறுவர்களை மட்டுமல்ல பெரியவர்களையும் கவர்ந்தன.

ஆந்திர மாநில அரங்கமான (லெபக்சியில்) மிக இலேசான போன்கி மரத்தால் செய்யப்பட்ட பொம்மைகள் பார்வையாளர்களை வசப்படுத்தின. பறவைகள், பழங்கள் விலங்குகள் இன்னும் பற்பல விதமான பொம்மைகள் அதிலாபாத் மாவட்டத்திலிருந்து வந்திருந்தன.

மரத்தாலான ஒரு பெண்ணின் உருவத்துக்குள் 5 பொம்மைகள் ஒன்றுக்குள் ஒன்றாக இடம் பெற்றிருந்தன. இந்த 'ஒரு பொம்மையில் ஆறு பொம்மை' எனப்படும் இதன் விலை ரூ. 8.95.

வெள்ளை உலோகம் என்று சொல்லப்படும் அலுமினியத்தாலான பொம்மைகளும் பார்வையாளர்களைக் கவர்ந்தன. ஒயரினால் செய்யப்பட்ட சிறு பொம்மைகள் ரூ. 1.75க்குக்கிடைத்தது. வாழ்த்து அட்டைகளிலும் இந்த ஒயர் பொம்மையை வைத்து விற்பனை செய்வது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

மற்றொரு வியப்புச் செய்தி ஆந்திர மாநிலத்தில் களிமண் பொம்மையே கிடையாதாம்! மரத்தையும் அலுமினியத்தையும் பயன்படுத்தித்தான் அங்கு பொம்மைகள் செய்கிறார்கள்.

கருநாடக மாநில அரசின் கைவினைப் பொருள் வளர்ச்சிக்

தமிழ்ப்பித்தன்



கழகத்தின் அரங்கமான 'காவேரி' யில் மரப் பொம்மைகள் புது வகை அமைப்பில்-பளபளப்பாகக் காட்சி அளித்தன. பலவித வடி வங்களில் குங்குமச் சிமிழ்கள் மங்கையரைப் பெரிதும் கவர்ந் தன. கிளி, புறா போன்ற பறவைகள், யானை, குதிரை போன்ற விலங்குகள் - பவுடர் டப்பாக்கள் - பென்சில் ஸ்டாண்டுகள், ராட்டினம் போன்ற வகைகள் காண்போரின் கண்களைக் கவர்ந்தன. மரத் தாலான சங்கிலித் திரைச்சீலை இந்த அரங்கின் தனிச்சிறப்பு மிக்க கலைப்பொருளாகும். கரு நாடக மாநிலத்தின் தயாரிப்புகள் மேற்கு ஐரோப்பாவுக்கும் அமெரிக்க நாட்டிற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

பாண்டிச்சேரியிலிருந்து வந்தி ருந்த பொம்மைகளில் 'பொங்கல் விழாக் காட்சி செட்', மனத்தில் நிலைத்தது.

சுவரில் மாட்டப்படும் வகை யில் அமைந்துள்ள முதியவர்- மூதாட்டி பொம்மைகள் மகிழ்ச்சி யுடன் காட்சியளித்தன. அவர் களது மகிழ்ச்சி பார்ப்பவர்களை யும் பரவசப்படுத்தியது.

''முதியவர்களே உற்சாகத் துடன் இருக்கும்போது இளை ஞர்கள் இன்னும் உற்சாகத்துடன் இருக்க வேண்டும். எதற்கும் கவலைப்படக்கூடாது என்னும் தத்துவத்தை முதியவர் பொம் மைகள் தெரிவிக்கின்றன''— என்று அரங்கில் இருந்த விற் பனையாளர் விளக்கம் சொன் னார். புதுமை, பொம்மையில் மட்டுமில்லை, விளக்கத்திலும் இருக்கிறது என்பதை உணர முடிந்தது.


தமிழ்நாட்டு அரங்குகளில் காணப்பட்ட தவழ்நிலைக் கண்ணன், சுப்பிரமணியர் மற் றும் பல்வேறு தெய்வங்களின் பொம்மைகள் அனைவரையும் பரவசப்படுத்தின.

''பொம்மைதான் சார்! இருந் தாலும், உயிருள்ள உருவம் மாதிரியே இருக்குது'' - பார்வை யாளரில் ஒருவர் -தன் அருகில் நின்று கொண்டிருந்த மற்றொரு பார்வையாளரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

''நானும் ரெண்டு மணி நேரமா இங்கேயே சுத்திக்கிட்டி ருக்கிறேன்! இதை விட்டுப்போக மனசே வரலீங்க!'' - பின்னவர், முன்னவரிடம் சொல்லிக்கொண் டிருந்தார்.









தமிழ்நாடு அரசின் நிறுவனமான 'டாசெல்' பீங்கான் பொருள் விற்பனை அரங்கில் வகைவகை யான பொம்மைகள் இடம் பெற்றிருந்தன. அன்னத்தின் மீதமர்ந்த ரதி -படகு மங்கை- புதுமணமக்கள் - ஐயப்பன்-நர்த் தன விநாயகர் - திருவள்ளுவர் அனைவரும் இடம் பிடித்திருந் தார்கள். பீங்கான் பொம்மை களின் பளபளப்பும் -தரமும்- செய்முறை நேர்த்தியும் பார்வை யாளர்களை மீண்டும் மீண்டும் வரவழைத்துக் கொண்டிருந்தன. பொம்மைகளின் விலையும் அதிக மல்ல, எளிதில் வாங்கக்கூடிய வகையில்தான் இருந்தது. மேற்கு வங்கத்திலிருந்து வந்திருந்த, புத்தர், நடராஜர், அனுமார் மற்றும் மாடர்ன் ஆர்ட்பொம்மை களில் காணப்பட்ட வண்ணம் புதுமையாக இருந்தது, பார்வை யாளர்களின் பார்வையை இழுக் கும் வகையில் அமைந்திருந்தது. ஆண்களும், பெண்களும் போட்டி போட்டுக்கொண்டு பொம்மை களை விலைக்கு வாங்கினர். வாங்கிய பொம்மைகளை வீதி யோகிக்கும் இடத்தில் கூடியிருந்த மக்கள் கூட்டம், பொம்மையின் விற்பனையின் அளவை நமக்கு எடுத்துரைத்தது.

மொத்தத்தில் பொம்மைக் கொலு, படித்தவர்களையும் படிக்காதவர்களையும் கவர்ந் தது. ஏழைகளையும் செல்வந்தர் களையும் ஈர்த்தது. ஆடவரை யும், பெண்டிரையும் தன் வயப் படுத்தியது. கொலுவில் வைப்ப தற்காக மட்டுமல்ல, இல்லத்தை அலங்காரம் செய்வதற்கும் கலை நயம்மிக்க பொம்மைகள் உதவும் என்பதைக் கண்காட்சி மெய்ப் பித்தது.

# ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

ஆங்கிலேய அரசு 1928ஆம் ஆண்டில் அப்போது இந்திய விவசாயி தான் விளைவித்த விளை பொருட்களை விற்பனை செய்வதில் பல தொல்லைகளுக்கு உள்ளாகி தனது பொருட்களுக்கு நல்ல விலை பெற முடியாமல் இடைத் தரகர்கள் தொந்தரவுக்கு ஆளாகி வந்ததைப்பார்த்து விவசாயிகளின் வாழ்க்கையினை செம்மைப்படுத்தி, சீர் செய்ய வேண்டும் என்ற நோக்குடன் ''ராயல் கமிஷன்'' என்ற குழு அமைத்தது. இந்திய விவசாயத்தில் பல அம்சங்களைத் தீர ஆராய்ந்து அதன் மேம்பாட்டிற்கான வழிவகைகளைச் சிபாரிசு செய்யும்படி அக்குழுவிடம் கோரியது. விவசாயிகளின் விளை பொருள் விற்பனையில் உள்ள அவல நிலையினைப் போக்க ராயல் கமிஷன் சிபாரிசு செய்தது தான் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்.

**விற்பனைக் குழுக்கள்:**

தமிழ்நாட்டில் ஆரம்பத்தில் 1933ஆம் ஆண்டு சென்னை வர்த்தக விளை பொருள் சட்டப்படியும், பின்பு 1959ஆம் ஆண்டின் தமிழ்நாடு விளைபொருள் விற்பனைச் சட்டத்தின் கீழ் மாவட்டங்களில் விளைபொருள் விற்பனையை நெறிப்படுத்தி நடத்த விற்பனைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இந்த விற்பனைக் குழுக்களின் முக்கிய நோக்கம் ஆங்காங்கே ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் நிறுவி, நிர்வகித்து வருவது. மாவட்ட விற்பனைக் குழுக்களில் 18 அங்கத்தினர்கள். இதில் விவசாயிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு 18 பேரில் ஒன்பது பேர்கள் விவசாயப் பிரதிநிதிகள். வியாபாரிகள் சார்பாக நான்கு பேர்கள். கூட்டுறவு நிறுவனங்களின் பிரதிநிதியாக ஒருவர். அரசால் நியமனம் செய்யப்படும் உறுப்பினர் 4 பேர். குறிப்பிட்ட மாவட்டத்தில் உள்ள உதவி வேளாண்மை இயக்குநர் (வர்த்தகம்) ஒருவர்.



இக்குழு அரசால் அறிவிக்கப்பட்ட வேளாண்மை விளை பொருட்கள் விற்பனையை நெறிப்படுத்துகின்றது. இக்குழுவிடமிருந்து மாவட்டத்தில் உள்ள வியாபாரிகள், விளைபொருட்களைப் பதனிடுவோர், எடை போடும் எடையாளர்கள், ஆகியவர்கள் உரிமம் பெற்றே அவர்தம் தொழிலைச் செய்ய வேண்டும். அறிக்கையிடப்பட்ட விளை பொருட்களை அம்மாவட்டத்திற்குள் விற்றாலோ, வாங்கினாலோ வியாபாரிகள், விற்பனைக் குழுவிற்குக் குறிப்பிட்ட தொகையை விற்பனைக் கட்டணமாகச் செலுத்த வேண்டும்.

இக்குழு வேளாண் பெருமக்கள் நலனைப் பிரதானமாகக் கருத்தில் கொண்டு ஆங்காங்கே ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மாவட்டம் முழுவதிலும் ஏற்படுத்துகிறது.

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்:**

விவசாயிகள் தாங்கள் விளைவித்த விளை பொருட்களை இடைத் தரகர்களினின்றி நேரடியாக வியாபாரிகளிடம் சட்ட நியதிகளுக்குட்பட்டு விற்பனை செய்வதற்கு வசதியாக மாவட்ட அளவில் செயல்பட்டு வரும் விற்பனைக் குழுக்களால் நிறுவப்பட்டவைதான் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள். இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் தமிழ்நாட்டில் முதன் முதலில் 1933ஆம் ஆண்டு சென்னை வர்த்தக விளைபொருட்கள் சட்டத்தின்படி ஆரம்பிக்கப்பட்டன. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் விவசாயிகள் - வியாபாரிகள் ஆகிய இருசாராருக்கு நன்மை பயப்பவையாக இருக்கின்றன.


ஒழுங்குமுறைக் கூடங்கள் நடைமுறை பற்றி இங்கு பார்ப்போம்.

ஒரு மாவட்டத்தில் ஒரு விளை பொருளை அதிகமாக விளைவித்து அனைவரும் உண்ணவோ விற்பனைக்கு எடுத்துச் செல்லவோ இருக்கும் விளை பொருளின் வியாபாரத்தை ஒழுங்குமுறைப்படுத்த அனைவரின் கருத்துக்களைப் பெற்று அரசு ஆணையால் அறிவிக்கப்படுகிறது. இதற்கு 'அறிவிக்கப்பட்ட பொருள் என்று சொல்லலாம். இதனை வாங்குவோரும், விற்போரும் இந்த விற்பனைச் சட்டத்தின் உட்பிரிவின் அறிவுரைக்குக் கட்டுப்பட்டவர்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் விளைபொருள் விற்பனை ஆகும் நிலவரத்திற்குத் தகுந்தாற்போல் விளைபொருளின் விற்பனை அறிவிக்கப்படுகிறது. அப்படிச் செய்யும்போது அந்த மாவட்டத்தில் விற்பனை செய்வதும், வெளியில் கொண்டு செல்வதும் மாவட்ட விற்பனைக் குழுவின் அலுவலர்களால் கண்காணிக்கப்படும். அக்குழுப் பகுதிக்குப் பெயர்தான் ''அறிவிக்கப்பட்ட பகுதி''. அந்த அறிவிக்கப்பட்ட பகுதி அங்கு நிறுவ உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் கட்டுப்பாட்டிற்குள் வரும் அறிவிக்கப்பட்ட பகுதியில் உள்ள வியாபாரிகள், எடையாளர்கள் உரிமம் பெற வேண்டும். மேலும் அவர்கள் கணக்குக் காட்டவும் அதற்குண்டான விற்பனைத் தொகையைக் கட்டவும் கட்டுப்படுத்தப்பட்ட பகுதியாகும்.

அறிவிக்கப்பட்ட பகுதியில் விற்பனைக் குழுக்களால் விவசாயிகள் கொண்டுவரும் விளை பொருள்களை விற்க ஏற்படுத்தப்படும் இடமே ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் என்பது, இங்கு காய வைக்க தளம், ஏலக் கொட்டகைக் கிடங்கு, நிர்வாக அலுவலகம், மனிதரும்-மாடும் களைப்பாற இடம், குடிநீரும் கழிவறைகளும் அமைத்து வசதிகள் ஆகியவை செய்யப்படும்.





ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நடக்கும் விற்பனை சீர்படுத்தப்பட்டது ஆகும். இந்த அமைப்பு விளைபொருள்களைக் கொண்டு வரும் விவசாயிகளுக்கும், கொள்முதல் செய்ய வரும் உரிமம் பெற்ற வியாபாரிகளுக்கும் இடையில் கண்காணித்து உதவிகள் செய்து, நன்மைகள் செய்யப்படுகிறது.

**எடை போடல்**

விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் விளைபொருட்களை எவ்வளவாக இருந்தாலும் எப்பொழுது வேண்டுமானாலும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டு வந்து விற்கலாம். உடனே அல்லது இருப்பு வைத்து, விலை ஏற்றம் பெற்ற காலத்திலோ விற்கலாம். விவசாயிகள் பொருள்களைக்கொண்டு வரவோ, விற்கவோ எந்தவிதக் கட்டுப்பாடும் கிடையாது.

விவசாயிகள் கொண்டு வரும் விளைபொருட்கள் சாக்குகளில் அடுக்கி வைக்கப்படும், பின்பு உரிமம் பெற்ற எடையாளர்கள் அவர்கள் கூலியாள் உதவியோடு பொருட்களை விற்பனைக் குழுவின் சாக்குகளுக்கு மாற்றுவார்கள். அடுத்து அத்தாட்சி பெற்ற அல்லது ஆய்வு செய்யப்பட்ட எடைக் கற்களையும் காசுகளையும் கொண்டு எடைபோட்டு வைப்பார்கள்.

ஒழுங்குமுறை விற்பனைக்கூட அலுவலரோ அல்லது அனுமதி பெற்றவரோ சிட்டாவில் மூட்டைகள் எண்ணிக்கை, எடை விற்பவர் பெயர் விலாசம் குறித்துக் கொள்வார். இந்தச் சமயத்தில் ஒவ்வொருவர் விளைபொருளுக்கும் வரிசை எண் (Lot No.) கொடுக்கப்பட்டு வரிசை ( Lot Stick ) எண்ணுள்ள குச்சிகள் வரிசையாக அமைக்கப்பட்டுள்ள மூட்டைகளில் முதல் மூட்டையில் பொருத்தி வைக்கப்படும். அதே எண்ணுள்ள வில்லை ஒன்று ( Token ) விளைபொருளின் சொந்தக்காரரான விவசாயிடம் கொடுக்கப்படும்.


ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பெரும்பாலும் ரகசிய ஏல முறையில் விற்பனை நடக்கிறது.

வெளியூர் ,உள்ளூர் வியாபாரிகள் ஒவ்வொருவரும் ஏலச்சீட்டு பெற்று ஒருவர்பின் ஒருவராக 'லாட் எண்' கொடுக்கப்பட்ட விளைபொருள்களைப் பார்வையிட்டு விலை குறித்து, ஏலப் பெட்டிகளில் ஏலச்சீட்டுகளைப் போடுவார்கள்.

குறித்த நேரம் முடிந்தவுடன் ஏலத்தில் பங்கு கொண்ட வியாபாரிகள் விற்பனைக் கூடக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கூடுவார்கள். கண்காணிப்பாளர் ஏலப் பெட்டிகளைத் திறந்து ஏலச் சீட்டுகளை எடுத்து அனைவரது பட்டியலையும் பார்த்து ஒவ்வொரு குறித்த எண்ணுள்ள விளைபொருளுக்கும் அதிகவிலை கேட்டவர் யார் என்று தெரிந்து அவருக்கே அந்த விளைபொருள்களை வாங்கத் தகுதி பெற்றவர் என்று அறிவிக்கப்படும். அந்த லாட் எண்ணும்விளை பொருளின் விலையும் ஒலிபெருக்கியில் குழுமியுள்ள விற்பனை செய்ய வந்த விவசாயிகளுக்கு அறிவிக்கப்படும். இவ்விலை நிலவரத்தைத் தெரிந்து கொண்ட விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை அன்றைய விலைக்கு விற்க விரும்பவில்லை என்று விற்பனைக்கூட அலுவலர்களுக்குத் தெரிவித்துவிட்டால் போட்டியிலிருந்து தங்கள் விளைபொருட்களைத் திரும்ப எடுத்துக் கொள்ளலாம். இச்செய்தி அதிக விலை கேட்ட வியாபாரிகளுக்கும் தெரிவிக்கப்படும்.

இவர்கள் அடுத்த நாள் போட்டியிலோ அல்லது இரண்டு, மூன்று நாட்கள் கழித்தோ போட்டியில் கலந்து கொள்ளலாம். அப்படி திரும்ப எடுத்துக் கொள்ளும் விளைபொருள்களுக்கு எடை போட கூலித் தொகையும், கழிவுமான தேய்வுக் கூலியும் கண்காணிப்பாளருக்குக் கொடுத்து விட வேண்டும். ஆனால் போட்டியில் விற்கச் சம்மதம் அளித்தால் அவர்களிடம் எந்தவிதக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. பின்னர் வரும் போட்டிகளில் கலந்து கொள்ளும் வகையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூட கிட்டங்கிகளில் விளைபொருட்களை இலவசமாக விட்டுச் செல்லலாம். அவைகளுக்கு எந்தவிதக் குறைபாடும் ஏற்படாமல் திருப்பி கொடுக்கப்படும்.

அன்றைய விலையை ஏற்று தம் விளைபொருட்களை விற்பனை செய்ய விருப்பப்படும் விவசாயிகள் தங்களிடம் இருக்கும் 'டோக்கன்'களைக் கொடுத்துக் கண்காணிப்பாளர் கொடுக்கும் ஏல விற்பனைச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ள வேண்டும். ஏல விற்பனைச் சீட்டை விவசாயிகள் பத்திரமாக வைத்துக்






கொள்ள வேண்டும். இந்த ஏல விற்பனைச் சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டவர்களுக்குத் தெரியும்படியாக வியாபாரியின் முகவரியும் விற்பனையாகும் விளைபொருளின் அளவும், எடையும் அதற்கு அன்றைய விலையும் மொத்த தொகையும் தமிழிலேயே குறிக்கப்பட்டிருக்கும். ஏல விற்பனைச் சீட்டுக்கள் இரண்டு கொடுக்கப்படும். அவற்றில் ஒன்று விற்பனையாளருக்கும் மற்றொன்று கொள்முதல் செய்வோருக்கும் உரியது.

ஒவ்வொரு வியாபாரியும் தாங்கள் கொள்முதல் செய்ய ஒதுக்கப்பட்ட விளைபொருளுக்கு வேண்டிய பணத்தோடு தனித்தனியாக அறைகளில் காத்திருப்பார்கள். ஒவ்வொரு விவசாயி தங்களிடம் உள்ள ஏல விற்பனை சீட்டுக்களைப் பணம் பட்டுவாடா செய்யக் காத்திருக்கும் அறைக்குச் சென்று சேர வேண்டிய பணத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பிறகு விவசாயிகள் தாங்கள் கொண்டுவந்த சாக்குகளில், வாங்கிய இடுபொருள்களை ஏற்றிச் செல்ல வேண்டும். இதோடு இவர்களுடைய ஈடுபாடு முடிந்துவிடும்.

ஒவ்வொரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலேயும், வரத்திற்குத் தகுந்தாற்போல் ஒரு கண்காணிப்பாளரின் தலைமையில் ஒன்று அல்லது இரண்டு மேற்பார்வையாளர்கள் இருப்பார்கள். இவர்களுக்கு உதவியாக எழுத்தர்கள் கணக்கு எழுதவும், விற்பனைக் கட்டணம் வசூல் செய்யவும் இருப்பார்கள். இவர்தான் ஒவ்வொரு ஏலக் கொட்டகையிலும் எல்லாம் சரிவர நடக்கின்றதா என்று பார்ப்பதில் இருந்து விளைபொருட்கள் வெளியில் சுமுகமாகச் சேர வேண்டியவருக்குச் செல்கின்றதா என்று பார்க்கிறார்கள்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மூலம் உற்பத்தியாளர்களான விவசாயிகள் வாங்குபவர்களான வியாபாரிகள் ஆகிய இரு சாராரும் அடையும் நன்மைகள்:

உற்பத்தியாளர்களான விவசாயிகள் பெறும் தன்மை சரி



யான எடை, தரத்திற்கேற்ற போட்டி விலை, உடனடியாகப் பணம், எவ்விதப் பிடித்தமும் இல்லை. இலவச சேவை.

**வாங்குபவர்களான வியாபாரிகள் பெறும் நன்மை**

தேவைக்கேற்ற பொருள்களை ஒரே இடத்தில் வாங்க வாய்ப்பு. தரமான பொருளைத் தேர்ந்தெடுக்கும் வசதி, குறைந்த மேற்செலவில் அதிகப் பொருட்கள் வாங்க வசதி, தரகர் உதவியில்லாமல் நேரிடையாக வாங்க, வசதி.

எனவே எல்லா விவசாயப் பெருமக்களும் தங்கள் விளைபொருட்களை அவர்கள் கிராமங்களுக்கு அருகாமையில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குக் கொண்டு சென்று நல்ல பயன் பெறலாம்.

**தகவல் :**

**திரு எஸ். கே. முருகையன்**

**பி. எஸ்ஸி. (வே).**



## வளரும் சிறுசேமிப்புத் திட்டங்கள்

மானூர் ஊராட்சி ஒன்றியம் பேட்டை பகுதியில் சிறுசேமிப்புத் திட்ட வளரும் மாத சேமிப்புக் கணக்குகள் தீவிர வசூல் முகாம் 27.8.82 அன்று ஆணையாளர் அவர்கள் தலைமையில் ஊர்நல அலுவலர்கள் விரிவாக்க அலுவலர்கள் தீவிர வசூல் முகாம் நடத்தினர்.

பேட்டை கூட்டுறவு நூற்பாலையில் மட்டும் 14[illegible] கணக்குகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டன. வளர்ச்சிப் பணியாளர்கள் மில் தொழிலாளர்களைச் சந்தித்து விளக்கம் கூறினார்கள். எல்லாத் தொழிலாளர்களும் ஆர்வத்துடன் கணக்குகள் ஆரம்பிக்க முன் வந்தனர்.



# தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் புதிய கட்டடம்

சென்னை நுங்கம்பாக்கம் கல்லூரிச் சாலையிலுள்ள, பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலக வளாகத்தில், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்திற்கென ரூ. 60 இலட்சம் செலவில் புதிய 3 மாடிக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இந்தக் கட்டடத்தின் திறப்பு விழா 14-9-82 அன்று சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.

விழாவுக்குத் தமிழகக் கல்வித் துறைஆணையர் மற்றும் செயலாளர் திரு எஸ். ராமதாஸ் இ. ஆ.ப அவர்கள் தலைமை வகித்தார். தந்தை பெரியார் திருவுருவப் படத்தைப் பள்ளிக் கல்வி இயக்குநர் டாக்டர் கே. வேங்கட சுப்பிரமணியம் அவர்களும், பேரறிஞர் அண்ணா திருவுருவப் படத்தைக் கல்லூரிக் கல்வி இயக்குநர் ( பொறுப்பு ) திரு கா. மீனாட்சிசுந்தரம் அவர்களும் திறந்துவைத்து உரையாற்றினர். செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு எஸ். டி. காசிராஜன் இ. ஆ. ப., அவர்களும், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சி. கே. கரியாலி இ. ஆ. ப., அவர்களும் சிறப்புரையாற்றினர்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் சார்பில், அதன் மேலாண்மை இயக்குநர் திரு. டி. கே. சீனிவாசன் ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையை முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு அளித்து உரையாற்றினார். திரு நா. ஆலப்பிள்ளை அவர்கள் வரவேற்றார்.

புதிய கட்டடத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் பேசுகையில்-

-''மலிவு விலையில் மாணவ-மாணவியர்களுக்குப் புத்தகங்களையும், நோட்டுகளையும் வழங்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் துவக்கப்பட்டு, இப்போது குறை எதுவுமில்லாமல் சீரோடும் சிறப்போடும் வீறு நடை போட்டு வருகிறது.

''சிறு தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்ட அரசு, தனியார் அச்சகத்திற்கு புத்தகங்களையும் நோட்டுகளையும் அச்சடிக்க வாய்ப்பினை நல்கியுள்ளது. அதனால், இந்த ஆண்டில் பாடநூல் விற்பனையில் எந்தவிதத் குறைபாடுகள் இல்லாமல் பார்த்துக் கொண்டுள்ளோம்.

''இனி புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுகின்ற பொறுப்பை, பாடநூல் நிறுவனம் வைத்துக் கொள்ளும். ஆனால், ஆசிரியர்களை வைத்துப் புத்தகங்களைத் தயாரிக்கிற பொறுப்பைக் கல்வித் துறையிடமே விட உத்தேசித்து இருக்கிறோம். அறிவை வளர்க்கும் நூலை யார் எழுதினாலும், யார் வெளியிட்டாலும் அதனை அரசு பாடப் புத்தமாக வைக்கத் தயங்காது'' என்று குறிப்பிட்டார்.

இணை இயக்குநர் திரு ம. சாம்பசிவம் அவர்கள் நன்றி கூறினார். தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நல்லதொரு பல்கலைக் கழகம் என்று கூறினால் அது மிகையாகாது.

நிகழ்ச்சித்தொகுப்பு **ஜி. ஆனந்தன்**

## ஈழ்லாப் பணிகளின் வழிவமே
# பாட நூல் நிறுவனம்

பாடநூல்களை நாட்டுடைமையாக்கும் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதல் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரை தமிழ் மொழிப் பாடநூல்களும் மூன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை ஆங்கில மொழிப் பாடநூல்களும் இந்நிறுவனத்தால் வெளியிடப்படுகின்றன. பிற பாடங்களுக்கான பாடநூல்கள் முதல் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரை தமிழிலும் 6முதல் 12ஆம் வகுப்பு வரை ஆங்கிலத்திலும் வெளியிடப்படுகின்றன.

இம்மாநிலத்தின் மொழிவழிச் சிறுபான்மை மாணவர்களின் நலனை முன்னிட்டு இப்பாடநூல்கள் முதல் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை மலையாளம், கன்னடம், தெலுங்கு, உருது ஆகிய மொழிகளிலும் வெளியிடப்படுகின்றன. சிறுபான்மை மொழியினரின் மொழி

பாடநூல்களும் மேல்நிலைக்கல்வி பாடநூல்களுடன் சிலவும் பிற மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்பட்டு இந்நிறுவனத்தால் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிறுவனம் வெளியிட்டுள்ள தமிழ், ஆங்கிலம், வரலாற்றுப் பாடநூல்கள் தேசிய ஒருமைப்பாட்டுக் கண்ணோட்டத்தில் மதிப்பீட்டாய்வு செய்யப்பட்டு வருகின்றன. தமிழ், ஆங்கிலம், கணக்கு, அறிவியல், வரலாறு, புவியியல் உள்ளிட்ட 20 பாடங்களுக்கு 315 தலைப்புகளில், பள்ளிப் பாடநூல்கள் இந்நிறுவனத்தால் வெளியிடப்படுகின்றன. இப்படி வெளியிடப்பட்ட நூல்களின் மதிப்பு சுமார் ரூ. 5கோடியாகும்.

கலை, அறிவியல், தொழில் நுட்பப் பாடப் பிரிவுகளில் இதுவரை 900-க்கும் மேற்பட்ட பாடநூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்ச் சுருக்கெழுத்து அகராதி தமிழ்-தமிழ் அகரமுதலி, தமிழ்ச் சொற்பிறப்பியல்அகரமுதலி போன்ற பல சிறப்பு வெளியீடுகளையும் பழஞ்சுவடிப் பதிப்புகளையும் இந்நிறுவனம் வெளியிட்டு வருகிறது. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர்இயக்ககத்தின் நகல் நூல்களை அச்சிடும் பொறுப்பையும் இந்நிறுவனமே வகித்து வருகிறது.

இந்நூல்களைத் தனியார் அச்சகங்களிலேயே நிறுவனம் அச்சிட்டுக் கொள்கிறது. சென்னையிலும் சிவகாசி, மதுரை, சேலம் போன்ற வெளியூர்களிலுமுள்ள 112 அச்சகங்கள் இப்பணிக்கு என்று நிறுவனத்தில் பதிவு செய்துகொண்டிருக்கின்றன.

பாடநூல்கள் கூட்டுறவுத் துறையின் வாயிலாக விற்பனை செய்யப்படுகின்றன. உரிய காலத்தில் தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள மாணவர்களின் கையில் பாடநூல்கள் கிடைக்கச் செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது. பயனுள்ள வகையில் குறிப்பேடுகள் உரிய காலத்திலும் உரிய இடத்திலும் மாணவர்களுக்கு கிடைக்கச் செய்யவும், பெறப்படும் தாள்களைச் சேமித்தும், குறிப்பேடுகள் தயாரித்து வழங்கும்பொருட்டும் சென்னை, மதுரை, சேலம், கோவை, கும்பகோணம், திருநெல்வேலி போன்ற இடங்களில் இந்நிறுவனம் வட்டாரக் கிடங்குகளை அமைத்துள்ளது. இதன் மூலம் வேலை வாய்ப்பு பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை சுமார் 4,000 ஆகும். கூலியாக வழங்கப்பட்ட தொகை கடந்த ஏப்ரல் வரை ரூபாய் இரண்டு கோடிக்கும் அதிகமாகும்.



குறிப்பேடுகளைத் தமிழ்நாடு முழுவதும் வழங்குவதற்கு ஒரு கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டின்படி கூட்டுறவுத் துறைப் பதிவாளரால் தெரிந்தெடுக்கப்பட்ட 84 கூட்டுறவு நிறுவனங்கள் செயல்படுகின்றன. 81-82ஆம் கல்வி ஆண்டிற்கு ரூ 4.02 கோடி மதிப்புள்ளகுறிப்பேடுகளும், 82-83ஆம் கல்வி ஆண்டிற்கு ரூ. 3.90 கோடி மதிப்புள்ள குறிப்பேடுகளும் வழங்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்குக் குறிப்பேடுகள் சென்று சேர்வதுதான் குறிக்கோள் என்பதால், தமிழகத்திலுள்ள எல்லா பள்ளி தலைமையாசிரியர்களும் கல்வித் துறை அலுவலர்களும், ஆங்காங்கே அமைந்துள்ள இந்நிறுவனக் கிடங்குகளிலிருந்து குறிப்பேடுகள் தேவையை நேரிடையாகவே பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

பள்ளிகள் தங்கள் தேவைக்கேற்ப குறிப்பேடுகளைப் பெற்றுக் கொள்வதில் பண நெருக்கடிதான் காரணமாய் அமைவதை நம் அனுபவத்தின் வாயிலாக அறிய முடிகிறது. மாணவர் கூட்டுறவு அமைப்புகளுக்குப் பங்குத்தொகையாக வழங்க, தற்போது ரூ. 10 லட்சம் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

தமிழக மாணவர்களுக்குப் போதுமான அளவு குறிப்பேடுகள் கிடைக்கவும் வழங்குமிடங்களில் வைக்கப்பட வேண்டிய சிறு கையிருப்புக்குமாகச் சேர்த்து சாதாரணமாக 8,000 டன் தாள் ஆண்டு முழுமைக்கும் தேவைப்படுகிறது. இந்நிலையில் 1981-82ஆம் ஆண்டில் 5,000 டன் தாள் மட்டும் இந்நிறுவனத்தால் பெறப்பட்டது. இதைக்கொண்டு 1981-82இல் 63 சதவிகிதம் மாணவர் தேவையை மட்டுமே இந்நிறுவனம் இட்டு நிரப்ப இயலும்.

ஏற்கெனவே எடுத்துச் சொல்லப்பட்டதுபோல் இந்நிறுவனத் தயாரிப்பான குறிப்பேடுகள் மிகவும் தரமுள்ளவையாகையால், அண்டை மாநிலங்களுக்குக் கடத்திச் செல்லும் போக்கும், அதிக விலைக்கு விற்கும் போக்கும் மலிந்து காணப்படுகின்றன. இதை தடுக்க, அரசு ''அவசியப் பண்டங்களின் சட்டத்தை'' குறிப்பேடுகளுக்கும் பொருந்துமாறு அண்மையில் ஆணை பிறப்பித்துள்ளது.

இந்நிறுவனத்தின் அடிப்படைக் குறிக்கோள் பொதுக் கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதேயாகும்.

1 முதல் 3ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுள் மதிய உணவுத் திட்டத்தால் பயனடையும் மாணவர்களுக்கு இலவசமாக ரூ. 1 கோடி மதிப்புள்ள பாடநூல்களை இந்நிறுவனம் வழங்குகிறது.

பள்ளி ஆசிரியர்களுக்காகப் பணியிடைப் பயிற்சிக்காக மேல்நிலைக் கல்வி பயிற்றுவிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பட்டதாரி ஆசிரியர்கள் பட்டமேற்படிப்புக் கல்வி கற்க ரூ. 5 இலட்சமும் வட்டியில்லாக் கடனாக இந்நிறுவனம் பள்ளிக் கல்வி இயக்குநர் வாயிலாக வழங்கியுள்ளது. ஆண்டுதோறும் ஆசிரியர் நாளில் ஆசிரியர் நல நிதிக்கு ரூ. 10 ஆயிரம் வழங்குகிறது.

போதிய கட்டட வசதி இல்லாத அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டி வழங்கும் வகையில் மாநிலத்தில் 9 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இப்பள்ளிகளுக்கு ரூ. 28.14 இலட்சம் செலவில் கட்டடம் கட்ட 81-82ஆம் ஆண்டில் நிறுவனம் நிதி வழங்கியுள்ளது.

1971-72ல் 41 ஆக இருந்த பணியாளர் எண்ணிக்கை இன்று 184 ஆக உயர்ந்து உள்ளது.

10 ஆண்டுகளுக்கு முன்பு இந்த நிறுவனத்தின் மொத்த வருமானம் ரூ. 61.19 இலட்சங்களாகவும் மொத்தச் செலவு ரூ. 39.19 இலட்சங்களாகவும் இருந்தன. ஆனால் இப்போது மொத்த வருமானம் ரூ-1234.57 இலடசங்களாகவும் மொத்தச் செலவு கணிசமாக ரூ-1117.97 இலட்சங்களாகவும் உயர்ந்துள்ளது.

# நோய் தீர்க்கும் வெற்றிலை

ஏ. ஆர். என். துரைராஜ்,
ஆர்.ஐ.எம்.பி.

நம் முன்னோர்கள் கால காலமாகவும் அனுபவ ரீதியாகவும் பல மூலிகைகளின் சிறப்பையும் பெருமையையும் உணர்ந்திருந்தார்கள். பிணி தீர்க்கும் பல மூலிகைகளைக் கொண்டு, நாமே செய்முறையில் தயாரித்து நல்ல பயனை அடைந்து அவைகளிலிருந்தே, நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் அடைந்து வந்தனர்.

நோய் அற்றும் மூலிகைகளில் சஞ்சீவிபோல் திகழ்வது வெற்றிலை.

இந்திய நாட்டில்வெப்ப பாகத்திலும், சதுப்புள்ள இடங்களிலும் வெற்றிலை வளர்க்கப்படுகிறது. இந்த இலை நிறத்திலும், மணத்திலும், கார்ப்புச் சுவையாலும், மற்றும் மிகுந்த மணமும், காரமும் கறுப்பு நிறமும் இல்லாத ஒன்று ''வெற்றிலை''

''கம்மாறு வெற்றிலை''யை எடுத்துக் கொண்டால், அது கருமையும், காரமும் மிகுந்தது.

''கருப்பூர வெற்றிலை''யை எடுத்துக் கொண்டால், கருப்பூர மணமும் சிறு காரமுமுடையது.

பொதுவாகச் சுவையை நோக்குங்கால், கார்ப்பு, விறுவிறுப்பு, வெப்பம், தன்மை உள்ள இலைகளைக் காணலாம்.

**தத்துவ ரீதியாகப் பயன் படுத்தும் முறை:**

வெற்றிலையைத் தாம்பூலமாகச் செயல்படுத்தும்போது, முக்கியமாக வெற்றிலையின் காம்பு, நுனி, நடுநரம்பு, பின்புறத்தில் அமைந்துள்ள தோல் இவற்றை நீக்கியே செயல்பட வேண்டும். பிறகு சுண்ணாம்பு வைத்த இலையைப் போட்டுவிடுவதுண்டு.

**வெற்றிலை, பாக்குப் போடும் நியதிகள்:**

பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு இவைகளை ஒன்றாக மெல்லும்போது, அதில் முதலில் ஊறிய முதல்நீர் நஞ்சு. இரண்டாவது நீர் மிகுபயித்தியம்தரும். மூன்றாவது நீர் அமிர்தம். நான்காவது நீர் அதி இனிப்பு. ஐந்தாவது நீர் பித்ததோஷம், அக்கினி மாந்தம், பாண்டுநோய் ஆகியவற்றை வரவழைக்கும்.

மேலே கண்ட நியதிகளுக்குரிய செய்யுள் காண்க:

அடைகாய் தின்ப தில்லூறு முதல்நீர் நஞ்சாம்
அதிபித்தம் இரண்டாவ தூறு நீரே
கடையமிர்த முன்னாவ தூறு நீர்தான்
கனமதுர நான்காவ தூறு மந்நீர்
மடையெனவே ஐந்தாறிற் சுரந்துள் ஊறி
வருநீர்களைச் சுகித்து மனங் கொண்டுண்டால்
தடையுறாப் பித்தமொடு மந் நோயும்
தளர்பாண்டு நோயுண்டாந் தரஞ்சொன்னோமே

தாம்பூலம் போடும் கால நியதிகள்

காலையில் பாக்கை அதிகமாகச் சேர்க்கில், தாராளமாய் மலம் போகும், பகலில் சுண்ணாம்பு அதிகப்படுத்த நல்ல பசி எடுக்கும். மாலையில் வெற்றிலையை அதிகப்படுத்த வாயில் மணம் வீசும் என்ற கால நியதிகளுக்கு, முன்னோர்கள் அளித்த செய்யுள்.

காலை பிளவகங் கட்டுச்சி நீறதிகம்
மாலையிலையதிக மாயருந்திய -வேல் விழியே!
காலை மலங்கழியுங் கட்டுச்சி தீபனமாம்
மாலை மணங்குலவும் வாய்.

**கம்மாறு வெற்றிலை:**


அ. கம்மாறு வெற்றிலையைத் தாம்பூலத்திற்குச் சதா உபயோகித்து வந்தால், கபம், கோழை ஆகிய இவை நீங்கும். சீதளம் பிரிக்கும். இவ்வெற்றிலையைப் பிட்டவியல் செய்து பிறகு சாறுபிழிந்து கஸ்தூரி, கோரோசனம் சேர்த்துச் சிசுவுக்கு ஊற்றுவது உண்டு.

ஆ. இதை நெருப்பனலில் வதக்கிக் கசக்கிப் பிழிந்தெடுத்த சாற்றில் கஸ்தூரி, கோரோசனை முதலியவை சம்பந்தப்பட்ட மாத்திரையில் சேர்த்துக் குழந்தைகள் அல்லது பெரியவர்களுக்காயினும் கொடுக்க, அது, சீதளம் சம்பந்தமான ரோகத்தை விரைவில் சாந்தப்படுத்தும்.

மேலே கண்ட பதத்துக்குச் செய்யுள் வருமாறு

ஏட்டிலொன்று கிட்டினீ ரேறஞ் சிரோபார
மாட்டிவிடு சந்தி மாந்தமொடு நாட்டிற்
பரியகுரற் கம்மல்வலி பண்டியுப்பி சம்போ
மரியகம் மாறுவெற் றிலை

**சித்த மருத்துவம், பழந்தமிழ் மருத்துவம், நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செய்யும் மருத்துவம்!**



## தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஏழு இந்திய மொழி ஆராய்ச்சியாளர்கள்

தஞ்சாவூரில் நிறுவப்பட்டுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தமிழ் நூல்களைப் பிற இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கவும் பிற இந்திய மொழிகளிலுள்ள நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்கும் திட்டத்தின் கீழ் மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஒரியா, வங்காளி, அஸ்ஸாமி, பஞ்சாபி, குஜராத்தி, மராத்தி, உருது, காஷ்மீரி, ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்ற உயர் நிலை ஆராய்ச்சி மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் காஷ்மிரி, இந்தி, குஜராத்தி, உருது ஆகிய உயர் நிலை ஆராய்ச்சியாளர்களுக்கான தமிழ் வகுப்பு அக்டோபர் முதல் நாள் அன்று துவங்கப்பட்டது. ஏனைய மொழி ஆராய்ச்சியாளர்கள் விரைவில் பணியில் வந்து சேருவர்.

**தீரும் வியாதிகள்:**

1. குரல் கம்மல், தொண்டையடைப்பு, முலைவீக்கம், நுரையீரல் நோய், இருமல், கடின சுவாசம், தலைபாரம், காதுகுத்தல், சீதளம், கோழைக்கட்டு, செரியாமை, வயிற்றுவலி, தீப்பட்ட இரணம் ஆகியவை தீரும்; தாம்பத்திய உறவில் நீட்டிப்புக் கிடைக்கும்.

**நோய் தீர்க்கும் முறையும் பயன்படுத்தும் முறையும்:**

1. வெற்றிலையையும், சாம்பிராணிப் பதங்கத்தையும் மென்று சுவைக்கும்படி செய்தால், தொண்டையடைப்பு, குரல் கம்மல் இவை நீங்கும்.

2. பால் சுரக்கவும், பால்கட்டி உண்டாவதைக் குணப்படுத்தவும் முலை வீக்கத்தைக் கரைக்கவும் வெற்றிலையைத் தணலில் வாட்டி அடுக்கடுக்காக வைத்துக் கட்டலாம்.

3. வெற்றிலைச் சாற்றுடன் இஞ்சிச் சாற்றையும் சேர்த்து, நுரையீரல் சம்பந்தமான நோய் நீங்குவதற்கு அருந்தலாம்.

4. வெற்றிலையை நல்லெண்ணெய்யில் நனைத்து, விளக்கில் வாட்டி மார்பின் மேல் வைக்க இருமல், மூச்சு, கடின சுவாசம் சிசுக்களுக்கு ஏற்படும் இருமல் ஆகியவை விலகும் (அல்லது) வெற்றிலைச் சாற்றுடன் சுண்ணாம்பு சேர்த்துத் தொண்டை தடவ குணம் ஆகும்.

5. வெற்றிலையைச் சாறெடுத்துக் காதில் 2-3 துளிகள் விட, தலைபாரம், காது குத்தல் ஆகியவை குணம் காணலாம்.

6. தீப்பட்ட இரணம் மீது வெற்றிலையை வைத்துக் கட்ட நாளடைவில் குணம் ஆகும்.

7. வெற்றிலைச் சாற்றில் கொஞ்சம் கோரோசனம் சேர்த்துக் கொடுக்கும் பட்சத்தில் கோழைக்கட்டு, இருமல், மூச்சுத் திணறல் குணம் காணலாம்.

8. வெற்றிலையுடன் 4 அல்லது 5 மிளகு சேர்த்துக் குடிநீரில் கொடுக்க சிறுவர்களுக்குக் காணும் செரியாமை குணமாகும்.

9. பாடகர்களின் தொண்டை ஒலி பெற, வெற்றிலையினுடைய வேரைச் சுவைத்து வரவேண்டும்.

10. தாம்பூலத்துடன் ஏலம், கிராம்பு, வால்மிளகு, சாதிக்காய், சாதிபத்திரி, சுக்கு, காய்ச்சுக்கட்டி ஆகியவற்றைத் தகுந்தபடி பிரயோகிக்க, மலம்சுத்தி ஆகும். கிருமி, கபம், தாகம், பல் நோய் ஆகியவை நீங்கும். மற்றும் தாம்பத்திய உறவில் நீட்டிப்பும், தாது விருத்தியும் ஏற்படும்.

11. தாம்பூலத்தின் வாயிலாக நுண்ணறிவு, தருமசிந்தனை ஏற்பட அனுபவ ரீதியாக வாய்ப்பு உண்டு.

12. சொத்துத் தகராறு, அடிதடி சம்பவங்கள் மற்றும் பொதுவாக ஒரு பிரச்சினை (சபைக்கு) பஞ்சாயத்துக்கு உட்படும் நேரத்தில், பஞ்சாயத்துக்கு ஏற்பாடு செய்யும் தலைவர் அவர்கள் எல்லாரும் உணவுஅருந்தி, பிறகு வாதி, பிரதி வாதிகளும் சேர்ந்து தாம்பூலம் போட்டபிறகு, பிரச்சினை சுமுகமாகத் தீரும். எனவே, தாம்பூலத்திற்குச் சாந்தமும், பொறுமையும் தரும் தன்மை உண்டு என்பது அனுபவ ரீதி.

நோய் தீர்க்கும் வெற்றிலையில் சர்பத் செய்யலாம். இந்த சர்பத் மூலம், தாது புஷ்டி, இரத்த சுத்தி முதலியவை உண்டாகும்.

**உபயோக முறை:**

சுமார் 300 வெற்றிலையைக் கொண்டு வந்து, முதலில் சுத்தமாகத் தண்ணீரில் அலசி எடுத்துக் கொள்ளுங்கள். பிறகு அதை உரலில் போட்டு 1 படி தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து, கால்படி ஆகும்வரை சுண்டக் காய்ச்சி, காய்ச்சியதை வடிகட்டி வைத்துக் கொண்டு, அதில் சர்க்கரையை சுமார் 15 பலம் போட்டு தேன் பதமாகக் காய்ச்சவும். பதம் வரும்போது இறக்கிக் கொள்ளவும். பிறகு குங்குமப் பூ, சாதிப் பத்திரி, ஏலக்காய் விதை வகைக்கு சுமார் ¾ தோலா, கிராம்பு ½ தோலா இவற்றை எல்லாம் சூரணம் செய்து அம்மியில் வைத்துப் பன்னீர் விட்டு மெழுகுப் பதமாக அரைத்துப் போட்டுக் கலக்கிப் பிறகு இறக்கி ஆறவிட்டு ஒரு பாட்டிலில் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள். தேவையானபோது 2 தேக்கரண்டி வீதம் கொடுத்துவர, மனதுக்கு ஆர்வமும், பலமும் வருவதற்கும் தாதுபுஷ்டி, ரத்த சுத்தி ஆகியவற்றிற்கு வழிகோலும்.

**தாம்பூலம் போடக்கூடாதவர்கள்:**

ரத்தகாசம், ரத்தபித்தம், வறண்ட கண்கள், கண் வீக்கம் உள்ளவர்கள், க்ஷயம், தலைநோய், சந்நி வாதம், மூர்ச்சை மற்றும் வெறி உள்ளவர்கள், இவற்றால் துன்பப்படுவோர்கள் தாம்பூலம் போடாமல் இருப்பது உத்தமம்.

இவ்வாறு, வெற்றிலை அரியதொரு மருத்துவப் பொருளாகத் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை.

# மானாவாரி சாகுபடிகள்

தமிழ்நாட்டின் நிகர சாகுபடி பரப்பளவான 62.23 இலட்சம் எக்டேர்களில், 32.48 இலட்சம் எக்டேர்கள் மானாவாரி சாகுபடி பரப்பளவாகும். இது நிகர சாகுபடி பரப்பளவில் 52 சதவிகிதமாகும்.

மானாவாரி நிலங்களில் சிறு தானியங்கள், பயறு வகைகள், நிலக்கடலை மற்றும் பருத்தி அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

மானாவாரி நிலங்களில் உற்பத்தித்திறன் 115 சதவிகிதம் மட்டுமே உள்ளது. மானாவாரி சாகுபடியில் இடுபொருள்கள் மற்றும் சாகுபடி முறைகளில் சரிவர கவனம் செலுத்தப்படுவதில்லை. எனவே உற்பத்தியும் மிகக் குறைவாகவே உள்ளது. இதற்கான முக்கியமான காரணங்களாவன.

1. மண்வளமும் மழை நீர் சரிவர தேக்கப்படாமல் இருப்பது.
2. நில நிர்வாகம் சரிவர செய்யப்படாமல் இருப்பது.
3. பயிர் நிர்வாகம் மற்றும் குறிப்பிட்ட விஸ்தீரணத்தில் தேவையான பயிர் எண்ணிக்கை இருத்தல் ஆகியவற்றில் போதிய கவனமின்மை.
4. சரியான பயிர் சுழற்சி மற்றும் தகுந்த இரகங்களைப் பயன்படுத்தாமல் இருத்தல்.
5. தகுந்த போதுமான அளவு உரம் இடாமல் இருத்தல்.
6. பின் செய்நேர்த்திசெய்யாதிருத்தல்.

மேற் குறிப்பிடப்பட்டுள்ள குறைகளை நிவர்த்தி செய்ய புதிய நுட்பங்கள் விஞ்ஞான அடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப்புதிய நுட்பங்களை வேளாண் பெருமக்கள் கையாண்டு அதிக மகசூல் பெறலாம்.

## மண்வளப்பாதுகாப்பும் ஈரம் காத்தலும்

மானாவாரியில் மழை நீரால் அதிக அளவும் மண் அரிப்பு ஏற்பட்டு மண் அரிப்பு அதிகமாக உள்ளது. இதனால் இந்நிலங்களில் சாகுபடி ஆகும் பயிர்கள், வளர்ச்சியின் போது ஈரம் இல்லாததால், பயிர் வாட்டம் அடைந்து மகசூல் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

இக்குறையினை நிவர்த்தி செய்ய கீழ்வரும் முறைகளைக் கையாளவேண்டும்.

### சரிவுக்குக் குறுக்கே உழுதல்

இதனால் பெய்யும் மழைநீர் வடிந்து பள்ளத்தைநோக்கி ஓடி விடாமல் அந்த நிலத்திலேயே ஈர்க்கப்படுகிறது. கடைசி உழவு சரிவுக்குக் குறுக்காக இருத்தல் அவசியம்.

### ஆழச்சால் அகலப் பாத்திகள் அமைத்தல்

150 செ.மீ. அகலமுள்ள பாத்திகளும், 30 செ.மீ. அகலம் 15 செ.மீ. ஆழமுள்ள சால்களும் அமைப்பதன் மூலம் மழைநீர் பாதுகாக்கப்படுகிறது.

### சம உயர வரப்புகள் அமைத்தல்

சமஉயர வரப்புகளைச் சாகுபடிப் பருவத்திற்குமுன் அமைப்பதால் நிலத்தில் விழும் மழை நீர் மற்றும் மேல் மண் கரைந்தோடி விடாது காக்கமுடியும்.

### பண்ணைக்குட்டைகள் அமைத்தல்

பண்ணையில் மிகத் தாழ்ந்த இடங்களில் சிறிய குட்டை வெட்டுவதால், அதிகமாக ஓடிவரும் நீர் குட்டைகளில் சேமிக்கப்பட்டு பிற்காலத்தில் பயிருக்கு மிகவும் அவசியமான நேரங்களில் பயன்படுகிறது.

### மண்ணைக் கிளறி விடுதல்

பயிர் வளர்ந்து வரும்போது, உள் ஈரத்தைக் காத்திட, களை எடுக்கும்போது மேலாக மண்ணைக்கிளறி விடவேண்டும்.

## நில நிர்வாகம்

### நிலத்தைச் சமன் படுத்துதல்


நிலத்தை ஒரே சீராகச் சமன் படுத்துவதால் மழைநீர் நிலத்தில் உட்புக மிகவும் ஏதுவாகும். இத்துடன் நிலத்திற்குத் தொழுஉரம், கம்போஸ்ட் குப்பை உரம் ஆண்டுதோறும் இடுவதால் மழைநீர் நிலத்தின் உட்புக மிகவும் உதவியாக இருக்கும்.

### கண்மாய் வண்டல் இடுதல்

கண்மாய் வண்டலை மானாவாரி நிலங்களில் இட்டு சாகுபடி செய்வதால், மண்ணின் நீரை நிறுத்திவைக்கும் தன்மை அதிகரிக்கிறது.

கரிசல் மண் பகுதிகளில் கோடை உழவும், மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை ஆழ உழுவதும், தொழு உரமிடுவதும் சிறந்த பலன் அளிக்கும்.

ஆழச்சால் அகலப் பாத்திகள்





செம்மண் பகுதிகளில் சம உயர வரப்புகள் அமைத்தல் மற்றும் படிப்படியாக வரப்புகள் அமைத்தல் ஆகியவை ஏற்றவை களாகும்.

## பயிர் நிர்வாகம்

### வரிசையில் விதைப்பு

பயிர்களை வரிசையில் விதைப் பதால், களை எடுக்கவும் ஊடு சாகுபடி செய்யவும் எளிது.

### சரியான பயிர் எண்ணிக்கை

மானாவாரி சாகுபடியில் ஒரு குறிப்பிட்ட பரப்பளவில் சரியான பயிர் எண்ணிக்கை இருத்தல் அவசியமாகும். உதாரணமாக சோளப் பயிர் ஒரு ஏக்கருக்கு 58,000 இருத்தல் வேண்டும், உளுந்து ஒரு ஏக்கருக்கு 1,30,700 எண்ணிக்கை இருத்தல் வேண் டும். இவ்வாறு சிபாரிசு செய்யப் படும் அளவு பயிர் எண்ணிக்கை இருக்கும் வண்ணம் விதைப்பது சாலச் சிறந்ததாகும்.

### பயிர் சுழற்சியில் பயறு வகை

பயறு வகைகளை மானாவாரி நிலங்களில் தனிப் பயிராகவோ அல்லது ஊடுபயிராகவோ சாகு படி செய்வதால் பயறு வகை களின் வேர் முடிச்சுகள் மூலம் காற்றிலுள்ள தழைச்சத்து கிர கிக்கப்பட்டு நிலவளம் மேம்படும்.

## குறுகியகால உயர்விளைச்சல் இரகங்கள் சாகுபடி செய்தல்

குறுகிய கால உயர் விளைச் சல் இரகங்களை மானாவாரி நிலங்களில் சாகுபடி செய்து உற் பத்தியைப் பெருக்கலாம். உதா ரணமாக, 90 நாட்கள் வயது டைய கோவில்பட்டி நெட்டை சோளம், 80 நாட்கள் வயது டைய கே.எம்.2 கம்பு 80 நாட் கள் வயதுடைய டி.எம்.வி. 3 எள், 65 நாட்கள் வயதுடைய கே.எம். உளுந்து, கே.எம். 1 காராமணி ஆகியவை மானாவாரி நிலங்களுக்கு ஏற்றவையாகும்.

### மானாவாரி இருபோக சாகுபடி

பருவமழை சாதகமாக உள்ள இடங்களில் மானாவாரி நிலங்களில், இருபோக சாகுபடி செய்வதால் கூடுதல் வருமானம் கிடைக்கும். இது மாவட்டங்கள் தோறும் மாறுபடும். பொதுவாக மானாவாரியின் முக்கியப் பயிர் களான சோளம், கம்பு, நிலக் கடலை, பருத்தி ஆகியவற்றை அறுவடை செய்ததற்குப் பின் ராகி, பயறுவகைகள், சூரிய காந்தி பயிர்கள் சாகுபடி செய் யப்படுகின்றன. தமிழக வேளாண் மைத்துறையின் சிபாரிசுகளின்படி மாவட்டத்திற்கு ஏற்ற பயிரினைச் சாகுபடி செய்து கூடுதல் மகசூல் பெறலாம்.



### விதை நேர்த்தி

விதை மூலம் பரவும் நோய் களைக் கட்டுப்படுத்த விதை நேர்த்தி அவசியம். செலவும் மிகவும் குறைவாகும். விதைப்ப தற்கு முன் விதை நேர்த்தி செய்து 24 மணி நேரம் வைத் திருந்து விதைக்கவேண்டும்.

### நுண்ணுயிர் கலவை சேர்த்தல்


பயறு வகைகளை, விதை நேர்த்தி செய்யப்பட்டதற்குப் பின், ஒரு நாள் கழித்து ஒரு ஏக்கருக்குத் தேவையான விதை யுடன் ஒரு பொட்டலம் நுண்ணு யிர்க் கலவை கலந்து 15 நிமி டம் நிழலில் உலர வைத்து விதைப்பதால் கூடுதல் மகசூல் கிடைக்கிறது.

### இரசாயன உரம்

மானாவாரி நிலங்களில், நம் விவசாயிகளில் பெரும்பாலோர் இரசாயன உரமிடுவதில்லை. மானாவாரி சோளம், கம்பு, ராகி ஆகிய பயிர்களுக்கு இராசயன உரமிடுவதால் அதிக மகசூல் கிடைக்கிறது. மண் பரிசோதனை சிபாரிசுகளின் படி உரமிடுவது நல்லது. அல்லது அடியுரமாக 16 கிலோ தழைச்சத்து மற்றும் 8 கிலோ மணிச்சத்து, ஒரு ஏக்க ருக்கு இட வேண்டும்.

### நுண்ணூட்டச்சத்து இடுதல்

நிலக்கடலை சாகுபடிக்கு நுண் ணூட்டச்சத்து 5 கிலோ ஒரு ஏக் கருக்கு இடுவதால் நல்ல பலன் கிடைக்கிறது. எள் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு இரண்டு கிலோ மாங்க னீஸ் சல்பேட் இடுவது கூடுதல் மகசூல் தரும்.



**ஊட்டம் ஏற்றிய தொழுஉரம் இடுதல்**

மக்கிய தொழு உரம் 300 கிலோவுடன், 4 கிலோ மணிச் சத்து, 18 கிலோ சாம்பல்சத்துக் களைத் தரவல்ல உரத்தைக் கலந்து ஒரு மாத காலத்திற்குக் காற்றுப் புகாவண்ணம் குழியில் வைத்து மண்ணால் மூடிவிட வேண்டும். பின்பு நிலக்கடலைக் குப் பரிந்துரைசெய்யப்பட்ட 14 கிலோ தழைச்சத்தினை அளிக் கும் 9 கிலோ யூரியாவுடன்ஊட்ட மேற்றிய தொழுஉரத்தை இடுவ தால் சிறந்த பலன் கிடைக்கிறது.

**ஜிப்சம் இடுதல்**

நிலக்கடலைப் பயிருக்கு 45 நாள் ஏக்கருக்கு 80 கிலோ ஜிப் சம் இட்டு மண் அணைக்க வேண் டும். இதனால் தரமான காய் களும், அதிக மகசூலும் பெற முடியும்.

**உழவு மற்றும் விதைப்புக் கருவி களை உபயோகித்தல்**

விதை விதைக்கும் விதைப்புக் கருவிகள் கொண்டு விதைப்ப தால் விதைகள் சரியான ஆழத் தில் விழுந்து, வரிசையாகவும், சரியான பயிர் எண்ணிக்கை இருப்பதற்கும் ஏதுவாகிறது.

**காடுகள் அமைத்தல்**

மானாவாரி செம்மண், கரி சல் மற்றும் மணற்பாங்கான நிலங்களில் மரங்களை வளர்ப்ப தும், அதிகப் பலன் தருகிறது. மழை ஆரம்பிக்கும் முன் 45 செ.மீ. நீளம் 45 செ.மீ. அகலம் மற்றும் 45 செ.மீ. ஆழமுள்ள குழிகளை வெட்டி, சிறிது காலம் ஆறப்போட வேண்டும். பின்னர் குழிகளில், மேல் மண், மற்றும் தொழு உரம் இட்டு, 5 கிராம் பி.எச்.சி. 10 சதவீதம் இடவேண்டும்.


நன்றாக வளர்ந்த நாற்றுக் களை நட்டு சுற்றிலும் பாத்தி அமைத்து மழைநீர் தேங்கும்படி செய்ய வேண்டும். தைல மரம், சவுக்கு, சூபாபுல், வேப்ப மரம் புங்க மரம், மூங்கில் ஆகியவற் றினை 5 மீட்டர் அளவுக்கு இரு புறமும் இடைவெளி விட்டு நடு வது சிறந்த பலனை அளிக்கும். மானாவாரி பயறுவகைகளைச் சாகுபடி செய்யும் விவசாயி களுக்கு மத்திய மற்றும் மாநில அரசு சலுகைகள்:

1. பயறு வகைப்பயிர்களைத் தாக்கும் பூச்சிகளைக்கட்டு படுத்த பூச்சி மருந்துகள் 50 மானியவிலையில் வழங் கப்படும்.

2. பயறு சாகுபடியில் ஒட்டு மொத்தமாக பூச்சி மருந்து அடிப்பதற்கு ஏக்கருக்கு ரூ. 6 மானியம் வழங்கப் படும்.

3. பயறு சாகுபடி நுணுக்கங் களில் 36,800 விவசாயி களுக்குப் பயிற்சி மற்றும் போக்குவரத்துச் செலவாக தலா ரூ. 140 வழங்கப்படு கிறது.

4. நிலக்கடலையைத் தாக் கும் சிவப்பு கம்பளிப்புழு வைக் கட்டுப்படுத்த ஒட்டு மொத்தமாக மருந்தடிப் பதற்கு ஏக்கருக்கு ரூ. 6- மானியம் அளிக்கப்படு கிறது.



## சிறிய பத்திரிகைகளுக்குச் சலுகைகள்

**1982-83** ஆம் ஆண்டுக்கான பத்திரிகைக் காகித ஒதுக்கீட்டுக் கொள்கையை மத்திய செய்தி-ஒலிபரப்பு அமைச்சகம் அறிவித் துள்ளது.


சிறிய மற்றும் நடுத்தரப் பத் திரிகைகளுக்குப் பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. 1982இல் வெளியான சராசரி பக்கங்கள் அடிப்படையில் பத்திரிகைக் காகி தம் வழங்கப்படும். கடந்த ஆண் டில் 1979ல் வெளியான சராசரி பக்கங்கள் அடிப்படையில் காகி தம் ஒதுக்கப்பட்டது.

முந்நூறு டன்களுக்கும் குறை வாகப் பத்திரிகைக் காகிதம் பெறத் தகுதியுள்ள சிறிய நடுத் தரப் பத்திரிகைகள், உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பத்தி ரிகைக் காகிதத்தைப் பெறலாம். எனினும், உள்நாட்டுக் காகித உற்பத்தி அதிகரித்துள்ளதன் காரணமாக, அதிகபட்ச பத்தி ரிகைக் காகிதம் பெறும் பத்திரி கைகள், குறைந்தது 40 சதவீத உள்நாட்டுக் காகிதத்தைப் பெற் றுக் கொள்ள வேண்டும்.

புதிதாகப் பத்திரிகைக் காகி தத்துக்கு மனுச் செய்வோர் கிரா மப்புற வங்கிகளிலிருந்தும், இது சம்பந்தமான பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். முன்ன தாக புதிய பத்திரிகைகள் ஷெட் யூல்டு வங்கிகளிடமிருந்து மட் டுமே பத்திரங்களைப் பெற்று வந்தன.

விண்ணப்பப் படிவங்களின் மாதிரிகள் புதுடில்லி, பம்பாய், கல்கத்தா மற்றும் சென்னைப் பத்திரிகைப் பதிவாளர் அலுவல கங்களிலிருந்தும், பத்திரிகைத் தகவல் அலுவலகங்களிலிருந்தும், மாநில செய்தி விளம்பர இயக்கு நர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

மனுக்களை அனுப்புவதற்கான கடைசித்தேதி 30.11.82.



# இவர்கள் இருக்கட்டும்

காளத்திநாதன்

உருக்காலையின் உச்சநிலை பதவி. மூலதனம் நூறு கோடி ரூபாய். வேலை செய்வோர் நாலாயிரம் பேர். நாளைக்கு நாற்பதாயிரம் பிரச்னை. ஒவ்வொரு வினாடியும், பெட்ரோலியும் பொருளைவிட மதிப்பு வாய்ந்தது. எந்தப் பிரச்னை எப்படியிருந்தாலும், காலை 11 மணியிலிருந்து 11.27 வரை பேட்டி காண வருகிறவர்களைப் பார்க்கத் தவறுவதில்லை பொது மேலாளர் இளங்கோ.

பத்தாயிரத்துக்குக் குறையாமல் சம்பளம். பங்களா. சொந்த உபயோகத்துக்கு இரண்டு கார். அவசியப்பட்டால் ஆலைக்குச் சொந்தமான பதினெட்டு வாகனங்களில் எதையும் பயன்படுத்திக் கொள்ளலாம். சர்வ வல்லமை, சகலமும் பொது மேலாளர் விருப்பப்படிதான்.

வழக்கத்திற்கு அதிகமான பேட்டியாளர்கள் அன்று பேட்டிக்காகச் சீட்டுகளை அனுப்பிவிட்டுக் காத்துக் கிடந்தார்கள். பொது மேலாளரின் உதவியாளர் சீட்டுகளைப் பெற்று, தரம் பிரித்து, முதலில் யார், பிறகு யார், அடுத்து யார், கடைசியில் யார் என்று அடுக்கி வைத்திருந்தார்.

இளங்கோ அந்தச் சீட்டுகளை வாங்கிப் படித்துப் பார்த்தார். உதவியாளர் கடைசியாக வைத்திருந்த சீட்டையெடுத்துக் கொடுத்து, ''இவரை முதலில் அனுப்புங்கள்'' என்றார்.

உதவியாளருக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''சார், முக்கியமானவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்...'' என்று இழுத்தார் தயக்கத்துடன்.

''யார் யார் என்று சொல்லுங்கள் பார்ப்போம்...''

''மிஸ்டர் மில்டன், இண்டர் நேஷனல் டிஸ்ட்ரிபூட்டர்..மூன்று கோடி ரூபாய் ஒப்பந்தம்பற்றிப் பேச வேண்டுமாம்.''

''அடுத்து?''




''பப்ளிசிட்டி பிரபாகர். விளம்பர டிசைன்கள் கொண்டு வந்திருக்கிறார்.''

''பிறகு?''

''லயன்ஸ், ரோட்டரி, ஜேசீஸ் சேர்ந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் கூட்டாக எடுத்திருக்கும் புராஜக்ட் ஒன்றை, நீங்கள் ஆரம்பித்து வைக்க வேண்டுமாம்''

''இவர்களெல்லாம் இருக்கட்டும். இந்த ஆளைக் கூப்பிடுங்கள...''

''சார் இவரையா? கிருஷ்ணமூர்த்தி இந்த உருக்காலையில் வேலை பார்த்து ஓய்வு பெற்றவர். உதவிக்கு வந்திருக்கிறார். உடம்பு சரியில்லையாம். அவருடைய பிள்ளைகள் யாரும் அவரைக் கவனிப்பதில்லையாம். இதற்கெல்லாம் நாம் என்ன சார் செய்ய முடியும்?''

''கிருஷ்ணமூர்த்தி போன்றவர்கள் உருக்குலைந்து உழைத்ததால்தான் இன்று உருக்காலை உயர்ந்து நிற்கிறது. அவருடைய பிள்ளைகளைப்போல நன்றி மறந்தவர்கள் அல்ல நாம் என்பதை நிரூபிக்க வேண்டும். முதலில் அவருக்கு உதவி செய்து அனுப்புவோம். அவரது உள்ளம் வாழ்த்தினால், இந்த ஆலை தானாக வளர்ந்துவிடும். அவரை முதலில் அனுப்புங்கள்.''

# உழவர்களின் பொருளாதாரம் உயர்ந்திட...

உலக வங்கியின் உதவியுடன் 'பயிற்சி மற்றும் தொடர்பு வழித் திட்டம்' தமிழ்நாட்டில் செங்கல்பட்டு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தர்மபுரி, கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் மதுரை மாவட்டங்களில் 1.9.81 முதல் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

இரண்டாவது கட்டமாக, வட ஆர்க்காடு, தென்ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, சேலம், பெரியார், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலும் 1.7.1982 முதல் இந்தத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய விரிவாக்கத் திட்டத்தின்படி, வேளாண்மைப் பணியாளர்கள், வேளாண்மைப் பணியினை மட்டும் முழு நேரமும் செயல்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

முன்பு, வேளாண்மை விரிவாக்கக் களப்பணியாளர்கள் 2,000 முதல் 4,000 வேளாண் குடும்பத்தினரை அணுக வேண்டியிருக்கிறது. இதனால் தொடர்புகள் அடிக்கடி ஏற்பட வாய்ப்புகள் குறைவாக இருந்தன. ஆனால், புதிய திட்டத்தின்படி இரண்டு முதல் நான்கு தொடர்ச்சியான கிராமங்களில் சுமார் 800 விவசாய குடும்பங்களை அடிக்கடி தொடர்பு கொள்ளும் வகையில் வேளாண்மை விரிவாக்கப்பணி அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தகுந்ததாகும். குறிப்பிட்ட நாட்களில், விவசாயிகளை விரிவாக்கப்பணியாளர்கள் தொடர்பு கொள்ளும் வகையில் ஒவ்வொரு விரிவாக்கப்பணியாளரின் எல்லையிலுள்ள கிராமங்கள் எட்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஆறு முதல் எட்டு களப்பணியாளர்களின் பணியை மேற்பார்வையிட ஒரு வேளாண்மை அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒரு உதவி வேளாண்மை இயக்குநர் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. இவரது மேற்பார்வையில் 6 முதல் 8 வேளாண்மை அலுவலர்கள் உள்ளனர். உதவி வேளாண்மை இயக்குனர் அலுவலகத்தில் உழவியல், பயிர்ப் பாதுகாப்பு, தகவல், மற்றும் பயிற்சி ஆகியவற்றிற்கான நிபுணர்களும் பணியாற்றுகின்றனர். மாவட்ட ஆளவில் இணை வேளாண்மை இயக்குநர் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத்திட்டத்தின்படி, மாதந்தோறும் வேளாண் பல்கலைக் கழக நிபுணர்கள், வேளாண்மைத் துறை அலுவலர்கள் கலந்து கொள்ளும் கருத்தரங்கு நடத்தப்படுகிறது. புதிய கண்டுபிடிப்புகள், சாகுபடி முறைகள் ஆகியவை விவாதிக்கப்பட்டு மாவட்டத்திற்கு ஏற்ற முறையில் புதிய முறைகள் முடிவு செய்யப்படுகின்றன.

பின்பு, மாதம் இருமுறை புதிய சாகுபடி முறைகள் பற்றிய பயிற்சி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் கிராம விரிவாக்கப் பணியாளர்களுக்கு மாவட்ட வேளாண்மை அலுவலர்கள், நிபுணர்கள் மூலம் அளிக்கப்படுகின்றன.

இரு வாரத்திற்கு ஒரு முறை நிர்ணயிக்கப்பட்ட கிழமைகளில் நிர்ணயிக்கப்பட்ட கிராமங்களுக்கு விரிவாக்கப் பணியாளர்கள் சென்று வேளாண் பெருமக்களை சந்தித்து புதிய சாகுபடி முறைகளை அவர்கள் மேற்கொள்ள ஆலோசனைகள் வழங்குகின்றனர். விவசாயிகளின் முறைகளையும், அறிந்து, அடுத்தமுறை செல்லும்போது குறைகளை நிவர்த்தி செய்யும் வழிமுறைகளும் சொல்லப்படுகின்றன.

விவசாயிகளுக்கு தேவையான விதை, உரம், பூச்சி மருந்துகள் ஆகியவை உரிய காலத்தில் கிடைத்திடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**பயிற்சி மற்றும் தொடர்பு வழத் திட்டத்தின நோக்கங்கள் :**

1. விளைச்சல் திறனை அதிகப்படுத்துவது.
2. உழவர்களுக்குத் தொழில் நுட்பங்களை எடுத்துரைப்பது.
3. விரிவாக்கப் பணியாளர்களுக்கு முறையான பயிற்சி அளிப்பது.
4. ஆராய்ச்சியின் முடிவுகளை உழவர்களுக்கு எடுத்துரைப்பது.
5. உழவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவது.

இந்தத் திட்டத்தில் தமிழக விவசாயிகள் தொடர்ந்து பங்கு கொண்டு பயன்பெறலாம்.

*பயிற்சி வழித் தொடர்பு*



# நூல் நயம்

### சொல்லரங்கம்

**ஆசிரியர்:** முத்து எத்திராசன்

**வெளியீடு:** சேகர் பதிப்பகம்
60, பெரியார் தெரு,
எம். ஜி. ஆர். நகர்
சென்னை—600 078.

**விலை: ரூ. 8 பக்கங்கள்: 144**

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்று தொல்காப்பியம் கூறுகிறது. என்றாலும் பல சொற்களின் பொருள்கள் மாறுபட வழங்கப்படுகின்றன. அத்தகைய சொற்கள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றின் உண்மைப் பொருளை அகச்சான்றுகளுடனும் புறச்சான்றுகளுடனும் நூலாசிரியர் விளக்கியிருப்பது பாராட்டுக்குரியது.

ஓரை, அண்ணல் மொக்குள், பல்பறைத் தொகுதி, பண்ணை, கருஞாயிறு போன்ற சொற்களின் மெய்ப் பொருளை மிக நுண்மையாக எடுத்துக் காட்டி சுவை ததும்பும் வகையிலே சொல்லாய்வு செய்திருக்கிறார் நூலாசிரியர்.

காஞ்சி நகருக்குக் கச்சி என்னும் பெயரே முதன் முதலில் சூட்டப்பட்டிருந்தது என்பதைச் சான்றுகளுடன் தெளிவாக்கியுள்ளமை பாராட்டுக்குரியது. பழமொழிகள் தரும் செய்திகளையும் பழமொழிகள் உணர்த்தும் வரலாற்றையும் எளிய, இனிய நடையில் கட்டுரையாக்கியுள்ளார். சுருங்கச் சொன்னால் சொல் ஆய்வுச் சுரங்கமாக இந்நூல் திகழ்கிறது. உருவாக்கம் என்ற தலைப்பில் ஆசிரியர், பதிப்பாளர், அச்சிட்டோர், கட்டமைப்புச் செய்தோர். ஆகியவர்களின் பெயர்களை திரைப்படப் பெயர்ப்பட்டியல் போல வெளியிட்டிருப்பது புதுமையாக உள்ளது.

### காலப் பறவைகள்

**ஆசிரியர்:** நா. நாகராசன்

**வெளியீடு:** மகாலெட்சுமி பதிப்பகம்
187, வெள்ளாளத் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை-84.

**விலை: 112 விலை ரூ. 5**

புதுக்கவிதை என்று சொல்லப்படும் வசன கவிதைகளின் தொகுப்பு இந்நூல். 51 தலைப்புகளில் பற்பல செய்திகள் கவிதையாக்கப் பெற்றுள்ளன. பொதுவாக வசன கவிதைகளில் காணப்பெறும் சொல்லாட்சி இந்தத் தொகுப்பில் இல்லை என்றாலும் கவிஞரின் கற்பனை வளம், பல இடங்களில் மின்னுகின்றது.

குடை, திருட்டுப் பயல்கள், சர்க்கரை வியாதி, கவிஞன், வேடிக்கை, கேள்வியும் பதிலும், குத்து விளக்கு, கீழும் மேலும், பிளாட்பாரம், அம்மா, ஆகிய நறுக்குக் கவிதைகளில் நகைச் சுவை உண்டு; ஆழ்ந்த தத்துவம் உண்டு; சிந்தனையின் நயம் உண்டு. 'தீக்குச்சி' 'என்னும் கவிதை இருமுறை உரசப்பட்டுள்ளது; இதைத் தவிர்த்திருக்கலாம். நூலாசிரியர், 'கவிஞர்களே, கவிஞர்களே வாருங்கள்' என்னும் கவிதையில் அஞ்சாமை, தன்னம்பிக்கை ஆகியவற்றை வலியுறுத்துகிறார். 'புதுமைப் பொங்கல்' என்னும் கவிதையில் உழவுக்கும் உழவர்களுக்கும் பெரும் மதிப்பை வழங்கியிருக்கிறார். 'தோல்விகள்' என்னும் கவிதையில் விடாமுயற்சியை வலியுறுத்தியிருக்கிறார்.

### கீரை வைத்தியம்

**ஆசிரியர்:** டாக்டர் திருமலை நடராசன்

**வெளியீடு:** தமிழ்ச் செல்வி நிலையம்,
43-சித்திரைக் குளம்
வடக்குத் தெரு,
மயிலாப்பூர்,
சென்னை-600 004.

**விலை: ரூ. 2.75 பக்கங்கள்: 54**

இருபதுக்கு மேற்பட்ட கீரைகளின் பெருமை குறித்து இந்நூலில் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு கீரையிலும் உள்ள சத்துக்கள் என்னென்ன, அவை எந்தெந்த விழுக்காட்டில் உள்ளன என்பதை விளக்கமாகவும் சுருக்கமாகவும் ஆசிரியர் எடுத்துக் காட்டியிருக்கிறார். உணவுப் பொருளான கீரை, நோய் நீக்கும் மருந்தாகவும் பயன்படுவதை விவரமாகத் தெரிவித்துள்ளார். ஒவ்வொரு கீரையும் பத்துக்கு மேற்பட்ட நோய்களைத் தீர்க்கின்றது என்ற செய்தியை அறிந்து கொள்ளும் போது நமக்கு வியப்பு ஏற்படுகிறது. கீரைகளை சமையலில் உபயோகிக்கும் விதமும் தெளிவுறுத்தப்பட்டுள்ளது இந்நூலில்.

கரிசிலாங்கண்ணி, சிறுகீரை, பொன்னாங்கண்ணி போன்றவற்றைக்கொண்டு தைலம் காய்ச்சும் முறையையும், தூதுவளை, வல்லாரை போன்ற கீரைகளின் உதவியால் சூரணம் செய்யும் முறையையும் விளக்கியிருப்பது பாராட்டுக்குரியது. இனிய எளிய நடை இந்நூலின் தனிச் சிறப்பாகும். **—தமிழ்ப்பித்தன்**

### பறவைகளே! பறவைகளே!

**ஆசிரியர் :** கு. ராஜாராம்

**வெளியீடு :** மீனாட்சி புத்தக நிலையம்
222, டாக்டர் நடேசன் சாலை.
சென்னை—600 005.

**விலை ரூ. 6.75 பக்கம் 139**

பன்னிறப் பறவைகள் பறந்து செல்வதைப் பார்க்கும்போது நம் மனத்தில் பரவசம் ஏற்படுகிறது. அழகிய அந்தப் பறவைகள் ஆகாயத்தில் செல்கின்ற காட்சியைக் காணுகின்றபோது, நாமும் அதைப் போல் பறந்து செல்ல முடியவில்லையே என்ற ஏக்கப் பெருமூச்சு ஏற்படுகிறது. ஆம். இந்தப் புத்தகத்தைப் படிக்கும் போதும் அந்த உணர்வே நமக்கு ஏற்படுகிறது.

இந்த நூலின் துவக்கமே நம் மனத்தைக் கவர்கிறது. இதன் முதல் வரி-'மனிதன் பார்த்துப் பொறாமைப்படும் ஒரே ஓர் உயிர்ப் பிராணி பறவையாகும்'. என்று தொடர்கிறது. ஆம். அது உண்மைதானே?

இந்நூலில் பல தகவல்களைத் தெரிந்து கொள்கிறோம். பறவையினம் தோன்றியது 15 கோடி ஆண்டுகளுக்கு முன்பு என்றும், 11,600 வகையான பறவைகள் உள்ளன என்றும், யானை அளவு பறவைகள் இருந்தன, அவற்றின் பெரிய முட்டையில் 9 லிட்டர் தண்ணீர் பிடித்து



**தேசீயம் என்பது ஒரு தனி ஜாதிக்கோ, ஒரு மொழியினருக்கோ சொந்தமல்ல, இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கின்ற அத்தனை பேருக்கும் சொந்தம்.**

வைக்கலாம் என்றும், இந்தியப் பறவைகளில் மிகப் பெரியது சாரஸ் நாரை, மிகமிகச் சிறியது தேன்சிட்டு என்றும் பல சுவையான தகவல்களைத் தெரிந்து கொள்கிறோம்.

பறவை தோன்றிய பழங்கதை, பறவை பறப்பது எப்படி- உலகத்துப் பறவைகள் தொகை இப்படி ஏராளமான செய்திகளை சிறுவர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும் பெரிதும் விரும்பிப் படிக்கும்வண்ணம் எளிய நடையில் எழுதியுள்ளார் ஆசிரியர். அருமையான அறிவியல் நூல்.

**சங்க நூல்களில் விந்தைப் பூச்சி**

**ஆசிரியர் :** பி. எல். சாமி, ஐ.ஏ.எஸ்.

**வெளியீடு:** **சேகர் பதிப்பகம்,**
66, பெரியார் தெரு,
எம். ஜி. ஆர். நகர்,
சென்னை—600 078.

**விலை:** ரூ. 5 **பக்கங்கள்: 66**

பொதுவாக, பூச்சி என்றால் சற்று அருவருப்பாகத்தான் இருக்கும். ஆனால், சில பூச்சிகளை நாம் விரும்பித் தேடி ஓடிப் பிடித்து மகிழ்கிறோம். வண்ணத்துப்பூச்சி, பொன்வண்டு தும்பி, இப்படிப் பலவற்றைச் சொல்லலாம்.

'தம்பலப்பூச்சி' என்றும் 'இந்திர கோபம்' என்றும் கூறப்படுகின்ற மென்மையான ஓர் அரிய பூச்சியைப் பார்த்திருக்கிறீர்களா? இது ஓர் மழைக் காலப் பிறவி. வெய்யிலில் இதைக் காண முடியாதாம். இந்த விந்தைப் பூச்சிக்கு நம் முன்னோர்கள் இட்ட பெயர்: மூதாய். இது கடுஞ்சிவப்பான அழகிய நிறமுடையது. இதைப் பற்றி சங்க நூல்களில் ஏராளமான செய்திகள் காணப்படுகின்றன.

நூலாசிரியர் சிறுவயதில் இதனைப் பிடித்து மகிழ்ந்திருக்கிறார். பிறகு இது குறித்து ஆராய முற்பட்டது அவரது மனம். அதன் விளைவே இந்நூல்.

சங்க நூல்களிலிருந்து விந்தைப் பூச்சியின் தன்மைகளை சிந்தை மகிழும் வண்ணம் கூறிச் செல்கிறார் நூலாசிரியர். மாணவரையும், மற்றவரையும் மகிழ்விக்கும் நூல் இது.

**உடலும் உணவும்**

**ஆசிரியர்: ஆ. கந்தசாமி**

**வெளியீடு: ஸ்டார் பிரசுரம்**
72, பெரிய தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—600 005.

**விலை:** ரூ. 5 **பக்கங்கள்: 95**

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பார்கள். நோய் நொடியின்றி, நீண்ட ஆயுளுடன் திகழ வேண்டுமானால் அதற்கேற்ப நம் உடலை நாம் பேணி வளர்க்க வேண்டும். அதனால்தான் நம் முன்னோர்கள் 'உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்றார்கள்.

நமது உடல் நல்ல நிலையில் இயங்க வேண்டுமானால், அதற்கு நல்ல உணவு வேண்டும். அதனை வலியுறுத்துகிறது இந்நூல்.

மனித உடல் அமைப்பு, உணவு அவசியம், ஜீரணமும் கிரகிப்பும், உட்கொள்ளும் உணவு, சில சமையல் குறிப்புகள் போன்ற தகவல்கள் நமக்குப் பெரிதும் பயன்படுவன. நமது உடலைப் பாதுகாத்துக் கொள்ள உறுதுணையாய் விளங்குவன. தக்க விளக்கப்படங்களும் உள்ளது. எல்லாத் திறத்தாரும் படிக்க வேண்டிய நல்ல நூல் இது.

**முதல் உதவி**

**ஆசிரியர்: கலவை மு. முபாரக்அலி**

**வெளியீடு:**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,**
41, பி சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

**விலை:** ரூ. 5 **பக்கங்கள் 91**

அவசரமான இன்றைய சூழ்நிலையில் அசாதாரணமாக விபத்துக்கள் ஏற்படலாம். வீட்டிலும் சரி, வெளியிலும் சரி எதிர்பாராத விபத்துக்களுக்கு நாம் ஆளாகிறோம். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை இவ்வாறு பாதிக்கப்படுகிறோம்.

மேலிருந்து கீழே விழுந்து எலும்பு முறிந்தால், அடிபட்டால், நீரில் மூழ்கினால், தீப்புண் கண்டால், அதிர்ச்சி ஏற்பட்டால், பூச்சிகள் கடித்தால், சாலை விபத்துக்கள் நிகழ்ந்தால் உடனடியாகச் சிகிச்சை செய்வதால், உயிரைப் பிழைக்க வைக்கலாமே!

'சரியான நேரத்தில், சரியான முதலுதவி அளிக்கப்பட்டால், பாதிக்கப்பட்டோரில் பலரின் உயிரைக் காத்திடவும், ஊனங்களைத் தவிர்த்திடவும் இயலும். இத்தகைய எண்ணத்தின் எதிரொலியே இச்சிறு நூல்' என்று இந்நூலாசிரியர் கூறுவதிலிருந்து முதலுதவியின் முக்கியத்துவத்தை உணரலாம். முதலுதவி பயிற்சி பெறுவோர்க்கு ஏற்ற நூல் இது. அதற்குத் துணை செய்கின்றன ஏராளமான விளக்கப்படங்கள்.

**கல்வி உன்னைக் காப்பாற்றும்:**

**ஆசிரியர்; ஆலந்தூர் கோ. மோகனரங்கன்**

**வெளியீடு:** வசந்தா பதிப்பகம்,
21, தருமராசாகோயில் தெரு
ஆலந்தூர்,
சென்னை—600 016.

**விலை:** ரூ. 5 **பக்கங்கள்: 104**


ஒருவனை மனிதனாக்குவது கல்வி; கல்வியே ஒருவனுக்கு நிலையான சிறப்பைத் தருகின்றது; கல்வி உடையவனையே எல்லாரும் மதிக்கிறார்கள், போற்றுகிறார்கள். சுருங்கச் சொன்னால் அறியாமை இருளைக்கிழித்து, அடையாளம் காட்டுவது கல்வி தானே?

பூங்குன்றன், உலக நம்பியின கூற்றுக்குச் சவால் விடுத்து இந்த உலகை நம்ப வைக்கிறான்— புரிய வைக்கிறான். இதேபோல கதையில் வரும் சித்தன், முத்தன், பரந்தாமர், இன்பவாணன் எல்லாரும் மனத்தில் நிற்கிறார்கள்.

கல்வியின் சிறப்பை உணர்த்தும் இந்நெடுங்கதை, மாணவர்க்குப் பெரிதும் பயன்படும்.

**—பி. வி. கிரி**

# சிமெண்ட் உற்பத்தியில் சீரிய முன்னேற்றம்



**சி. பி. இராமநாதன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)**

திருச்சிராப்பள்ளி.

வளர்ச்சியை நோக்கி எழுச்சி முரசு கொட்டும் நாட்டில் 'சிமெண்ட்' ஒரு அத்தியாவசியப் பொருளாக விளங்குகிறது. நாட்டின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த சிமெண்டின் உற்பத்தியைப் பெருக்க தமிழ்நாடுஅரசு முனைப்போடு செயலாற்றுவதை, அரியலூர், ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலைக்குச் சென்றால் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் முழுக்கட்டுப்பாட்டிற்குட்பட்ட அரசு நிறுவனமான 'தமிழ்நாடு சிமெண்ட் கழகம்' (TANCEM) 11-2-1976 அன்று அமைக்கப்பட்டது.

சுண்ணாம்புக்கல் படிவுப் பாறைகளை அதிகம் உள்ளடக்கிய அரியலூர்ப் பகுதியில் சிமெண்ட் ஆலை ஒன்று அமைப்பது என்று முடிவு செய்து, அதன் அடிப்படையில் அரியலூர் சிமெண்ட் ஆலை ரூ. 28.76 கோடி செலவில் இருபத்தி ஏழே மாதங்களில் கட்டி முடிக்கப்பட்டு

9-3-'79 அன்று இவ்வாலையின் முதல் உலை இயக்கப்பட்டு, 1-8-'79 அன்று முதல் உற்பத்தியைத் துவங்கியது.

இவ்வாலை தற்பொழுது 70 சதவீத உற்பத்தியினைச் செய்து வருகிறது. 1983-84-ல் 100 சதவீத உற்பத்தியை ஈட்டியியலும் என்கிற நிலையினை அடைந்துள்ளது.

இவ்வாலையில் பணியாற்றும் 923 பணியாளர்களில் 606 பேர் பிற்பட்ட வகுப்பினர்களும், 207 பேர் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைசாதியினரும் ஆவர்.

வேலைக்குப் பணியாளர்களைத் தேர்வு செய்யும்போது நிலம் கொடுத்தவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டு, இதன் அடிப்படையில் 377 பேர் பணி அமர்த்தப்பட்டனர்.

தொழிலாளர் நலனை முன்னிட்டு இரண்டு இணைசீருடைகள், ஒரு இணை காலணி, மூக்குப்பில்டர், கண்ணாடி, தேங்காய் எண்ணெய், சர்க்கரை, நீலத்துணி ஆகியனவும் வழங்கப்படுகின்றன.

தற்போது 140 குடியிருப்புக்களைக் கொண்ட குடியிருப்புப் பகுதி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பல குடியிருப்புகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. 20 மணமாகாத இளைஞர்கள் தங்கும் விடுதியும் அமைக்கப்பட்டுள்ளது.


அரியலூர் ஆலைப் பகுதி மக்கள் நல்வாழ்விற்கென ரூபாய் 1,27,000 செலவில் கட்டப்பட்ட மருத்துவமனைக் கட்டடத்தினைத் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவன நிர்வாக இயக்குநர் திரு. பால்ராஜ், இ. ஆ. ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் திறந்து வைத்தார்.


தமிழ்நாடு சிமெண்ட் நிறுவன நிர்வாக இயக்குநர் அவர்கள் தமது தலைமையுரையில், "தமிழகத்தில் உள்ள எட்டு சிமெண்ட் ஆலைகளின் மொத்த உற்பத்தி 41 இலட்சம் டன். ஆலங்குளம் மற்றும் அரியலூர் சிமெண்ட் ஆலைகளின் மொத்த உற்பத்தி 9 இலட்சம் டன். அரியலூர் ஆலைக்கென 1375 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டு, நிலம் கொடுத்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாலையில் 950 பேர் நேரடி வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். 35,000 கோடி மதிப்பீட்டில் ஐந்து கூட்டுறவுப் பஞ்சாலைக்குக் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 'ஆஸ்பெஸ்டாஸ் பிரஷர் பைப்' தயாரிக்கக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

அரியலூர் ஆலையில் தற்பொழுது குறைந்த பட்ச ஊதியம் ரூ.760 வழங்கப்பட்டு வருகிறது. தற்போதைய உற்பத்தி 70% இது 80 சதத்திற்கு உயருமானால் தொழிலாளர்கள் மேலும் ரூபாய் 20-ம், 90 சதத்திற்கு உயருமானால் மேலும் ரூபாய் 115-ம் 95 சதவீதத்திற்கு ரூபாய் 223-ம் கூடுதல் ஊதியமாகப் பெறலாம்" என்று கூறினார்.

தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் ஆஸ்பெஸ்டாஸ்பிரஷர் பைப் தொழிற்சாலை ரூ. 750 கோடி மூலதனத்தில் கரூர் வட்ட மாயனூரில் தொடங்கப்படும். இவ்வாலை 36,000 டன் எடையுள்ள ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் உற்பத்தி செய்யும்.

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் மருத்துவமனையைத் திறந்து வைத்து உரையாற்றும் பொழுது, "தமிழகத்தில் ஏற்பட்டுள்ள தொழில் முன்னேற்றம் மிகவும் வேகமாக உள்ளது என்பதை உணர்த்தும் வகையில், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் (IDBI) மூலம் வழங்கியுள்ள மொத்தக் கடனில் தமிழகம் 17 சதத்தை (அதாவது ரூ. 250 கோடி) பெற்றுள்ளது. மத்திய அரசு மான்யம் கடந்த நான்காண்டுகளில் அதிகரித்துள்ளது. இவ்வாலையின் உற்பத்தியினை மாதம் 42,000 டன்னுக்கு உயர்த்தத் தொழிலாளர்கள் செயலாற்ற வேண்டும். தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் தமது ஆலை என்ற எண்ணத்தில் பொறுப்புணர்ச்சியோடு முனைப்புடன் செயலாற்ற வேண்டும்" என்று குறிப்பிட்டார்.





விருத்தாசலம் முந்திரி ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொண்ட ஆராய்ச்சியிலிருந்து, நிலக்கடலையைத் தாக்கும் சுருள் பூச்சியைக் கட்டுப்படுத்த, விளக்குப் பொறிகளைப் பயன்படுத்துவது சிறந்ததெனத் தெரிய வந்துள்ளது. 1981ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சுமார் 4,500 சுருள் பூச்சிகள் வந்து விளக்குப் பொறியில் விழுந்தன. இவற்றைச் சோதித்துப் பார்த்ததில் எல்லாப் பூச்சிகளுமே இனச் சேர்க்கை ஏற்பட்டு, முட்டையிடும் தருவாயில் இருந்தது கண்டறியப்பட்டது. இந்தப் பூச்சிகளைக் கொல்லாமல் விட்டுவிட்டால், புழுக்கள் பெருமளவில் உற்பத்தியாகி, பயிர்களை நாசப்படுத்தியிருக்கும். எனவே, நிலக்கடலை விவசாயிகள் சுருள்பூச்சிகளைக் கவர்ந்து ஒழிக்க விளக்குப் பொறிகளைப் பயன்படுத்தி வெற்றி பெறலாம்.

மா மரத்தில் யூரியாவை 5 சத அளவில் தெளித்தபோது அதாவது 100 லிட்டர் தண்ணீரில் அரை கிலோ யூரியாவைக் கரைத்து தெளித்தபோது பெருமளவில் பூங்கொத்துக்கள் உருவாகியுள்ளது தெரியவந்தது. நீலம், பெங்களூரா மற்றும் மல்கோவா ரகங்களில் சத யூரியாக் கலவை தெளிக்கப்பட்டது.

இம்முறையைக் கையாண்டால், மாந்தோப்பு மூலம் உழவர்களால் அதிக லாபம் பெற முடியும். விரும்பும்போதெல்லாம் மாங்கனிகளும் கிடைக்கும்.

# வேளாண்மைச் செய்திகள்



தற்போது நெல்லில் பரவலாகப் பரவி வரும் துங்ரோ வைரஸ் நோயை எதிர்த்து வளரும் ஆற்றல் படைத்த நெல் ரகமொன்று, கோவையிலுள்ள நெல் இனப் பெருக்க நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 105 நாட்கள் வயதுடைய இந்தக் குறுகிய கால ரகத்தின் பெயர் ஐ.ஆர். 59. எக்டருக்கு 5,500 கிலோ மகசூல் தரும். இந்த ஐ.ஆர் 59 ரகத்தை துங்ரோ வைரஸ் நோயால் பாதிக்கப்படும் இடங்களில் பயிரிட்டுப் பலன் பெறலாம்.

மேட்டுப்பாளையம் வனஇயல் ஆராய்ச்சி நிலையத்தில் தைலமரத்திற்கு விதையளவு பற்றி ஒரு பரிசோதனை நடந்தது. இந்தப் பரிசோதனையிலிருந்து ஒரு சதுர மீட்டர் பாத்திக்கு 3.5 கிராம் வரை விதைகளை எடுத்து விதைத்தபோது நல்ல திடமான நாற்றுக்கள் கிடைத்ததாகத் தெரியவந்துள்ளது. இந்த ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட விதைகள் 30 சதம் முளைப்புத் தன்மையுடன் இருந்தன என்றும், இப்படி விதையின் முளைப்புத் திறனைப் பொறுத்து, விதையளவைச் சரியாகக் கணக்கிட்டு விதைத்தால் நல்ல நாற்றுக்களைப் பெற முடியுமென்றும், ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.





பயறு விதைகளைச் சேமிக்கும் போது அவற்றைத் தாக்கிச் சேதப்படுத்தும் வண்டுகளைக் கட்டுப்படுத்த ஒரு புதிய முறை உருவாக்கப்பட்டுள்ளது. 100 பங்கு பயறு விதைகளுக்கு 1 பங்கு என்ற வீதத்தில் ஊக்குவிக்கப்பட்ட களிமண்ணைக் கலந்து, 700 கேஜ் பாலிதீன் பைகளில் சேமித்து வைப்பதே அந்த முறையாகும். இதனால் ஓராண்டுக் காலத்திற்கு எந்தவிதமான பூச்சித் தாக்குதலும் ஏற்படவில்லை என்று பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் செய்த ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. எனவே, பயறு விதைகளுடன் ஊக்குவிக்கப்பட்ட களிமண்ணைக் கலந்து, நீண்ட காலத்துக்குப் பயறு விதைகளைச் சேமித்து வையுங்கள்.

மஞ்சள் பயிரிடும் உழவர்களுக்கு ஒரு புதிய சேதியைத் தோட்டக்கலை கல்லூரி உணவியல் துறையினர் தெரிவிக்கிறார்கள். மஞ்சளைப் பதப்படுத்தும்போது சாணக் கரைசலுக்குப் பதிலாக, சோடியம் கார்பொனேட் என்ற சமையல் சோடா உப்புக் கலவையில் மஞ்சள் கிழங்கை வேகவைத்தால், மஞ்சள் நல்ல கரு மஞ்சள் நிறத்தைப் பெறுவதாகக் கண்டுபிடித்துள்ளனர். இதனால் மணத்திலோ, சுவையிலோ மாற்றம் எதுவும் நேரவில்லை. 200 கிராம் சோடா உப்பை, 300 லிட்டர் தண்ணீரில் கரைத்து, 1 டன் மஞ்சள் கிழங்கை வேகவைத்து உபயோகப்படுத்தலாம். இதற்கு ஆகும் செலவு ஆறு ரூபாய் தான்.



# தஞ்சை மாவட்டத்தில் சத்துணவுத் திட்டம்

**இரெ. அண்ணாதுரை,**
மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
தஞ்சாவூர்.

மழலைக் குழந்தைக் குரல்கள், ஆசிரியையின் குரலைத் தொடர்ந்து ஒலித்தன.

தஞ்சை மாவட்டம் சீர்காழிக்கு அருகிலுள்ள சட்டனாதபுரம் ஊராட்சி மன்றக் கட்டடத்தில்-தமிழ்நாடு அரசின் புரட்சித் திட்டமான சத்துணவுத்திட்டம் செயல்படும் நிலையத்தில்தான் அந்தக் குரல்கள் ஒலித்தன என்பதை நேரில் போய்ப் பார்க்கும்போது புரிந்து கொள்ள முடிகிறது.

இதுபோன்ற ஒவ்வொரு குழந்தைகள் நல நிலையத்திற்கும் குழந்தைகள் நல அமைப்பாளர் ஒருவர், குழந்தை நல உதவியாளர்கள் இருவர் என தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. 4,700-க்கும் மேற்பட்ட சத்துணவு நிலையங்கள் உள்ள தஞ்சை மாவட்டத்தில், இதுபோன்று 5,000 பெண்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். இப்பெண்மணியாளர்கள் 25 வயது முதல் 40 வயது வரை உள்ளவர்கள். இவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது விதவைத் தாய்மார்களுக்கும், ஆதரவற்ற தாய்மார்களுக்கும், மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் உள்ளவர்களுக்கும் அரசு முன்னுரிமை அளித்துள்ளது என்பதைப் பல நிலையங்களில் நேரில் காணலாம்.

**கிராமத்து ''குக்கரும்'' குளிர் சாதனப் பெட்டியும்:**

வாரத்தில் ஏழு நாட்களுக்கும் பட்டியல் போட்டு, வகை வகையான சத்துணவைக் குழந்தைகளுக்கு வழங்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளதற்கிணங்க, சுவையான சத்துணவு அளிக்கும் அதே வேளையில், சுவை குன்றாமலும், சூடு குறையாமலும் இருக்கவேண்டும் என்பதற்கு இந்நிலையங்களில் பயன்படுத்தப்படும் எளிய சாதனங்களாகிய வைக்கோல் பெட்டி, குளிரூட்டும் மண்பாண்டம் ஆகியவற்றை, திருவெண்காட்டிலுள்ள குழந்தைகள் நல நிலையத்தில் நேரில் காட்டி, விரிவாக்க அலுவலர் விளக்கிக் கூறினார்.

''அடுப்பில் உலை கொதிக்கும்போது அரிசியை அதில் போட்டு, நன்கு கொதித்ததும் அந்தப் பாத்திரத்தை எடுத்து மரப் பலகையிலான வைக்கோல் பெட்டியின் உள்ளே வைத்து அப்பாத்திரத்தை மூடிவிடுகிறோம். சிறிது நேரத்தில் சோறும் வெந்துவிடுகிறது. இதனால் வடிகட்டும் பிரச்சினை இல்லை. சத்துள்ள கஞ்சி வீணாவதில்லை. எரிபொருளான விறகின் தேவையும் குறைகிறது. செலவும் நேரமும் மிச்சமாகின்றன. பரிமாறும் வரை சோறும் சூடாக இருக்கிறது. இதைப்போலவே இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குத் தேவையான காய்கறிகளைக் குளிரூட்டும்மண்பாண்டத்தில் வைத்து விடுகிறோம். காய்கறிகளும் வாடாமல், வதங்காமல் இருக்கும். கிராமப்புறத்துக் 'குக்கரா'கவும், குளிர் சாதனப் பெட்டியாகவும் விளங்குகின்றன. இச்சாதனங்கள் எளிமையானவை இத்திட்டத்திற்கு மிகவும் பயன் தரத்தக்கவை'' என்று அவர் கூறும்போது மகிழ்ச்சி கலந்த வியப்பு மேலிடுகிறது.

திருவெண்காடு கிராமத்திலுள்ள சத்துணவு வழங்கும் நிலையத்தில் அன்றைய சத்துணவு என்ன என்று கேட்டபோது, 'சாம்பார் சாதம்' என்று கூறி அந்நிலைய உதவியாளர் சமையல் தயாராகிக்கொண்டிருந்த ஒரு பாத்திரத்திலிருந்து கரண்டியால் அதை எடுத்துக் காண்பித்தார். கத்தரிக்காய், கொத்தவரங்காய், தக்காளி, பருப்பு போட்ட சாம்பார் தயாராகிக் கொண்டிருக்கிறது என்பதற்கான 'சாட்சியங்கள்' அதில் தெரிந்தன.

இந்த நிலையம் செயல்படும் திருவெண்காடு ஒன்றிய தொடக்கப் பள்ளியின் மற்றொரு பகுதியில் 5 வயதிற்கு மேற்பட்ட 14 வயதிற்குட்பட்ட பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவு பரிமாறப்படுவதைப்பற்றி கேட்டபொழுது அந்தப் பள்ளியின் தலைமையாசிரியர் திரு. கிருஷ்ணமூர்த்தி, ''இந்தத் தொடக்கப் பள்ளியில் மொத்த மாணவர் எண்ணிக்கை சென்ற ஆண்டு 200 ஆக இருந்தது. இந்த ஆண்டு 220 ஆக உயர்ந்துள்ளது. புதிதாகச் சேர்ந்துள்ள 20 பேர்களும் பள்ளிக்குப் புதியவர்கள் அல்ல. ஏற்கெனவே இப்பள்ளியில் சேர்ந்து வறுமையின் காரணமாகப் படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு சென்றுவிட்டவர்கள்தான், மீண்டும் வந்து சேர்ந்திருக்கிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 150 மாணவ, மாணவியர் இந்தப் பள்ளியில் இலவச துணவைத் தற்போது சாப்பிடுகிறார்கள்'' என்று பதிலளித்தபோது, கல்வி வளர்ச்சியில்

# துணிச்சலான திட்டம்

## மத்திய வேளாண்மை இணை அமைச்சர் பாராட்டு



தமிழ்நாட்டுக்குச் சுற்றுப் பயணம் வந்திருந்த மாண்புமிகு மத்திய அரசின் வேளாண்மை, ஊரக வளர்ச்சி இணை அமைச்சர் திரு. பாலேஸ்வர ராம், செங்கல்பட்டு மாவட்டத்தில் கூடுவாஞ்சேரியில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ் குழந்தைகள் மதிய சத்துணவு உண்பதைப் பார்வையிட்டார். அந்தப் பள்ளியைச் சேர்ந்த 350 பிள்ளைகள் மதிய உணவு அருந்தினார்கள் மிகவும் சுத்தமான சூழ்நிலையில், மிகவும சுகாதார முறையில் தயாரிக்கப்பட்ட உணவைப் பள்ளிக் குழந்தைகள் அருந்துவதைக் கண்ட மத்திய அமைச்சர் மகிழ்வுற்றார்.

தனது மன நெகழ்ச்சியினைக் குறிப்பிட்டு அவர் தெரிவித்த கருத்து பின்வருமாறு:

"நான் இந்தப் பள்ளியைப் பார்வையிட்டதிலும் மதிய உணவுத் திட்டம் செயல்படுவதைப் பார்வையிட்டதிலும் மகிழ்ச்சி அடைந்தேன். இது ஒரு புதிய திட்டமாகும். இதன் மூலம் குழந்தைகள் பெருமளவில் நன்மை அடைய இருக்கிறார்கள். குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் மிகவும் திருப்திகரமானதாக உள்ளது. ஆசிரியர்களும் ஊழியர்களும் இதில் மிகுந்த ஆர்வத்தோடு பணியாற்றுகிறார்கள்.

"இந்தத் துணிச்சலான திட்டத்தை மேற்கொண்டதற்காக நான் தமிழ்நாடு அரசைப் பாராட்டுகிறேன். எல்லா வகுப்பினையும் (சாதிகளையும்) சேர்ந்த மாணவர்கள் ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவதைக் காண நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்".

பின்னர் அங்குள்ள ஊராட்சி ஒன்றிய குழந்தைகள் காப்பகத்தில் 40 குழந்தைகள் மதிய சத்துணவு சாப்பிடுவதையும் மத்திய அமைச்சர் பார்வையிட்டுப் பாராட்டுதல்களைத் தெரிவித்தார்.

---

வறுமையின் தாக்கம் வேரூன்றி உள்ளதை உணர முடிந்தது.

சீர்காழி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆரம்பப் பள்ளிகளில் செயல்படும் சத்துணவு நிலையங்களில் 1-6-82இல் உணவு உட்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை 17,251 ஆக இருந்தது. 15-7-82இல் 19,081 ஆக உயர்ந்துள்ளது என்ற புள்ளி விவரம் இக்கருத்தை உறுதிப்படுத்துகிறது.

### குழந்தைகளுக்குப் பாதுகாப்பு எங்களுக்கு வேலை வாய்ப்பு

இந்த நிலையத்தில் தனது 4 வயது மகன் ஜெயசிங் சத்துணவு சாப்பிடுவதாகவும், தனது இரு மகள்கள் அருகிலுள்ள பள்ளியில் சத்துணவு சாப்பிடுவதாகவும் தெரிவித்த விவசாயக் கூலி திரு. சுப்பையன் இத்திட்டம் வந்த பிறகு அவரும், மனைவியும் நிம்மதியாக வேலைக்குச் செல்ல முடிகிறது என்பதைக் கூறினார்.


### கல்யாணச் சமையல் சாதம்

சீர்காழி ஒன்றியத்தின் எல்லையோரமாக அமைந்த கொண்டல் கிராமத்தில் ஆதிதிராவிட நலப் பள்ளி ஒன்று உள்ளது. அந்தப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் 600 பேர். தினமும் 500-க்கும் மேற்பட்டோர் இலவச சத்துணவை அங்கே சாப்பிடுகிறார்கள். பெரிய கல்யாண வீட்டுப் பந்தி போல சாப்பாடு இவ்வளவு பேருக்கு அங்கே பரிமாறுவது கண் நிறைந்த காட்சியாக இருந்தது.

### மீன் குழம்பு வேண்டாம்! ஸ்கூல் சாப்பாடு போடு!!

மயிலாடுதுறை ஒன்றியம் சேந்தங்குடி கிராமத்திலுள்ள ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த விவசாயக் கூலி திரு. சின்னப்பிள்ளை என்பவர் கூறிய செய்தி சிரிப்பையும் சிந்தனையையும் தூண்டுவதாக இருந்தது. அவ்வூரிலுள்ள சத்துணவு நிலையத்தில் அவரது மகன் சந்திரபோஸ் (வயது 4) மகள் சந்திரகலா (வயது 2.5) இலவசச் சத்துணவு சாப்பிடுகிறார்கள். ஒரு நாள் தன் மகனுக்கு ஆசையோடு மீன் குழம்பு செய்து பரிமாறச் சென்ற தாயிடம் சிறுவன் சந்திரபோஸ் பிடிவாதமாக "எனக்கு மீனு, கருவாடு வேண்டாம். ஸ்கூல்லே போட்ற மாதிரி பருப்புச் சோறு, தக்காளி சோறு போடும்மா, அப்பத்தான் சாப்பிடுவேன்" என்று கூறி, மீன் குழம்புச் சாப்பாட்டை மறுத்துவிட்டானாம்.

பொதுமக்களின் ஒத்துழைப்பும் சிறப்பாக உள்ளது என்பதை நிரூபிப்பதைப் போல, மயிலாடுதுறை ஒன்றியத்தில் ஒன்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களில் சத்துணவு அளிப்பதற்காக தங்கள் வீட்டை வாடகையின்றி இலவசமாக வீட்டின் உரிமையாளர்கள் அளித்திருக்கிறார்கள். இதைப் போன்று சீர்காழி ஒன்றியத்தில் 3 ஊர்களில் பொதுமக்கள் முன் வந்துள்ளார்கள்.



# கோவில் யானை

ரகமி

மகாகவி பாரதியாரை திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி கோவில் யானை கீழே தள்ளிவிட்டதனால் அவர் இறந்துவிட்டாரென்பது நீண்டகாலமாக நிலவி வரும் செய்தியாகும்! ஆனால் இது தவறான செய்தி. கவி பாரதிக்கு ஸ்ரீபார்த்தசாரதி சுவாமி கோவில் யானையால் விபத்து ஏற்பட்டதே தவிர, இதனால் அவர் மரணம் அடைந்து விடவில்லை. இவ்விபத்திலிருந்து அவர் தப்பிவிட்டார். இதற்குப் பின் பாரதியார் சுமார் 4 மாதங்கள் ஜீவித்திருந்து பின்னர் செப்டம்பரில் காலமானார். இது விவரமாவது;

*1921*ல் கவி பாரதியார் திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோவில் தெருவில் அப்போதைய 67ஆம் நெம்பர் வீட்டில் தன் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார். அவர் தினசரி ஸ்ரீபார்த்தசாரதி சுவாமி கோவிலுக்குச் சென்று சுவாமியை தரிசிப்பது வழக்கம். கோவில் பட்டர்களும் இவருக்குத் தேங்காய் மூடியோ, வாழைப் பழமோ பிரசாதமாகக் கொடுப்பார்கள். இதனைப் பெற்றுக் கொண்ட அவர் அதனை கோவில் யானை 'அர்ஜுன'னுக்குக் (யானையின் பெயர்) கொடுத்து விட்டுச் செல்வார்.

மே மாதம் இறுதியில் கோவில் யானைக்கு மதம் பிடித்திருப்பதாகத் தெரியவே, அதனை கோவில் வெளிமண்டபம், தெற்கு மாடவீதிப்பக்கமாகஉள்ள, இடைவெளியிலுள்ள மகிழமரத்திற்கருகாமையில் ஓர் இரும்பு வேலிக்குள் அடைத்திருந்ததோடு, அதன் கால்களையும் வலுவான இரும்புச் சங்கிலியால் பிணைத்திருந்தனர். வேடிக்கை பார்க்க வந்தவர்களிடம் எவரும் யானையின் அருகே செல்ல வேண்டாமென எச்சரிக்கப்பட்டிருந்தனர் . இது விஷயத்தை பாரதியாரிடமும் சொல்லியிருந்தனர். அப்படியிருந்தும் அவர் சில சமயம் யானையிடம்சென்று பழங்களைக் கொடுத்த போதும் அது, அவரை ஒன்றும் செய்யாமலிருக்கவே இதனை அவரும் சகஜமாக எண்ணினார்.

ஜூன் இரண்டாம் வாரம் யானைக்கு மதம் சற்று அதிகமாகியது. தும்பிக்கையை ஆட்டிக் கொண்டும், அடிக்கடி பிளிறிக் கொண்டுமிருந்தது. வழக்கம் போல பாரதியார் கோவில் பட்டர் தந்த பிரசாதத்தை யானையிடம் கொடுக்கச் சென்றபோது, அங்கிருந்தவர்கள் அவரைத் தடுத்தனர். எவர் தடுத்தும் அவர் கேட்காமல் இரும்புவேலியைத் தாண்டி உள்ளே யானையினருகே சென்றபோது, அன்று வழக்கத்திற்கு மாறாக யானை, பாரதியார் போர்த்திருந்த அங்கவஸ்திரத்தைப் பிடித்து வேகமாக இழுத்து அவரைக் கீழே தள்ளிவிட்டது. விழுந்த அதிர்ச்சியில் பாரதியார் யானையினருகே மூர்ச்சையாகி விட்டார்.

இதனைக் கண்டதும் இரும்பு வேலியைச் சுற்றி நின்று கொண்டிருந்த ஜனங்கள், "ஐயோ! யானையிடம் போக வேண்டாமென்று சொன்னோம், அவர் கேட்கவில்லையே" யெனக்கூக்குரலிடவே, கூட்டமும் அதிகமாகச் சேர்ந்துவிட்டது. கும்பலினால் கூச்சலும் அதிகரித்தது. கோவிலுக்கு அருகில் பாரதியாரின் நெருங்கிய நண்பரும் 'இந்தியா' பத்திரிகையின் உரிமையாளருமான மண்டயம் ஸ்ரீநிவாசாச்சாரியாரின் வீட்டுத்திண்ணையிலிருந்த குவளைக் கண்ணன், கூச்சலைக் கேட்டு, சரியாக விவரமறியாமல் யானை எவரையோ அடித்து விட்டதென்றெண்ணி அவரும் கூட்டத்தைத் தள்ளிக் கொண்டு உள்ளே புகுந்தார். யானையினருகே பாரதியார் மூர்ச்சையாக விழுந்து கிடப்பதைக் கண்ட குவளைக் கண்ணன் திடுக்கிட்டு, எதற்கும் அஞ்சாமல் வெகு அவசரமாக, இரும்பு வேலிக்குள் குதித்து யானையினருகே விழுந்து கிடக்கும் பாரதியாரை 'சரேல்' எனத் தன்தோளின்மீது போட்டுக்கொண்டு வெளியே ஓடி வந்துவிட்டார்.

பாரதியாரின் தலையில் பலமான அடி, யானையின் தந்தத்தால் உதட்டில் குத்திய காயங்கள், உடம்பெல்லாம் சிராய்ப்புகள் தென்பட்டன. இதனைக் கண்ட மண்டயம் ஸ்ரீநிவாசாச்சாரியார் உடனே ஒரு ஜட்காவில் பாரதியாரைப் படுக்கவைத்து சென்னை ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்கு விரைந்து சென்றார். அவருடன் குவளைக்கண்ணன், மற்றும்சிலர் சென்றனர். ஆஸ்பத்திரியில் காயங்களுக்குச் சிகிச்சை செய்யப்பட்டு அன்று மாலையே பாரதியார் வீட்டிற்கு வந்து ஓய்வு எடுத்துக் கொண்டார்.

கவி பாரதியாரை அன்று யானை கீழே தள்ளி அவர்யானையினருகே மூர்ச்சையாக விழுந்து கிடந்த காட்சியை நேரில் பார்த்தவர் ஸ்ரீமதி ரங்கநாயகி அம்மாள். இவர் மண்டயம் ஸ்ரீநிவாசாச்சாரியாரின் புதல்வி. அந்த அம்மாள் தற்போது பெங்களூரில் வாழ்ந்து வருகிறார். அவருக்கு வயது 74 நடக்கிறது. இவரும் கவிபாரதியாரின் இரண்டாவது மகள் சகுந்தலாவும் (பாப்பா) பாண்டிச்சேரியிலிருந்தே இணைபிரியா சிநேகிதிகள். ஒன்றாகவே படித்தவர்கள். இவரைத்தான் கவி பாரதியார் அடிக்கடி 'தங்கக் கிளி ரெங்காள்' என்று செல்லமாகக் கூப்பிடுவது வழக்கம். அன்று இந்த அம்மையார் நேரில் கண்ட காட்சியை சமீபத்தில் என்னிடம் கூறினார்.

கவி பாரதியாரின் காயங்கள் பூரண குணமானதும் அவர் மீண்டும் 'சுதேசமித்திரன்' வேலைக்குச் சென்றார். தன்னைக் கீழே தள்ளிய யானையைப் பற்றி பாரதியார் 1921 ஜூலையில் 'மித்திர'னில் "கோவில் யானை" என்ற தலைப்பில் வேடிக்கையான கட்டுரையும் எழுதினார்.

ஆகஸ்டில் கவி பாரதியார் தீராத வயிற்றுப் போக்கினால் அவஸ்தைப்பட்டு அலுவலகத்தில் வேலை செய்யமுடியாமல் கஷ்டப்பட்டு 23ந்தேதியிலிருந்து ஒரு வாரம் ரஜாவில் சென்றார். எவ்வளவோ வைத்தியங்கள் செய்தும் வயிற்றுப் போக்கு நின்றபாடில்லை. அவருடைய குடும்ப டாக்டரான நஞ்சுண்டராவ் தனது அலோபதி (இங்கிலீஷ்) முறையைக் கையாண்டார். பின்னர் டாக்டர் டி.ஜானகிராம் (பாரிஸ்டர் டி.பிரகாசத்தின்சகோதரர்) அழைத்து வரப்பட்டார். அவர் பாரதியாரைப் பார்த்ததும் "மிஸ்டர் பாரதி! உடம்புக்கு என்ன?" யென்று கேட்டதும், பாரதிக்கு வந்ததே கோபம்! உடனே அவர், "எனக்கா! உடம்



புக்கு ஒன்றுமில்லையே. எனக்கு உடம்பு சரியில்லையென்று யார் சொல்லி உங்களை இங்கே அழைத்துவந்தது? நான் பராசக்தியின் அருளால் நன்றாகத் தானிருக்கிறேன். என்னை சும்மா விட்டால் போதும், போங்கள்!'' என்று கத்தவே, வந்த டாக்டரும் யாதொரு சிகிச்சையும் செய்ய முடியாமல் திரும்பிப் போய்விட்டார்.

அடுத்து, பாரதியாரின் நெருங்கிய நண்பரான டாக்டர் சுரேந்திரநாத் ஆர்யாவும், இவருடைய மனைவி டாக்டர் ஒகிலி மார்த்தா அம்மையாரும் பாரதியாரின் உடல்நிலையைப்பற்றிக்கேள்விப்பட்டு இரவுபகல் பாராமல் சிகிச்சையளித்தனர். கவி பாரதியார் திருவல்லிக்கேணி துளசிங்கப்பெருமாள் கோயில் தெருவில் குடிவருவதற்குமுன் வேப்பேரி ரண்டல்ஸ் ரோடிலுள்ள ஆர்யாவின் பங்களாவில் குடியிருந்தார். அப்போதிலிருந்தே ஆர்யா தம்பதிகளுக்கு பாரதியாரின் குடும்பத்தோடு நெருங்கிய ஈடுபாடுண்டு. கவிபாரதியாரின் பெருமையை நன்கறிந்தவர்கள் அவர்கள்.

பாரதியாரின் அண்டை வீட்டுக்காரர் சின்னச்சாமி ஐயங்காரின் தாயார் பாரதியிடம் வந்து, ''என்னப்பா பாரதி! உடம்பு சரியில்லையாமே இப்போது எப்படியப்பா இருக்கு?'' என்று கேட்டதற்கு பாரதி அந்தப் பாட்டியிடம், ''யாருக்கு உடம்பு! எனக்கா உங்களுக்கா? நான் நன்றாகத்தானிருக்கிறேன். நான் பேப்பருக்கு வியாசம் எழுத வேண்டும். தொந்தரவு பண்ணாதீங்க. போயிட்டு வாங்க'' என்று கத்தியனுப்பிவிட்டார்.

செப்டம்பர் முதல் வாரத்தில், 'சுதேசமித்திரன்' பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் இரண்டு,மூன்று உதவி ஆசிரியர்கள் எதிர்பாராத விதமாக, ரஜா எடுத்துக் கொள்ளவே அலுவலகத்தின் அன்றாட வேலை சற்றுத் தடைப்பட்டது. பாரதியாரின் உடல் நிலையையும் விசாரித்து என்றைக்கு வேலைக்கு வரமுடியும், எனத் தகவல் தெரிந்து வர 'மித்திரன்' செய்தியாசிரியர் பாரதியாரின் வீட்டிற்கு செப்டம்பர் 7 (1921) புதன் கிழமை ஆள் மூலம் சீட்டு அனுப்பியதற்கு, பாரதியார் பதிலை ஒரு துண்டுக் காகிதத்தில் ''பராசக்தியின் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு திங்கட்கிழமை (12.9.21) வேலைக்கு வந்துவிடுகிறேன்'' எனத் தகவல் அனுப்பினார்.

1921 செப்டம்பர் 11ஆந் தேதி ஞாயிற்றுக் கிழமை! அன்று மாலையிலிருந்தே பாரதியாருக்கு உடம்பு சற்று அதிகமாகவே இருந்தது. டாக்டர் ஆர்யா தம்பதிகள் அவரை வந்து பார்த்த போது அங்கு தமிழ் நாட்டுப் பெரும்புரட்சிக்காரரும், திருநெல்வேலி கலெக்டர் ஆஷ் கொலை வழக்கின்முதல் குற்றவாளியுமான எருக்கூர் நீலகண்ட பிரம்மச்சாரியும்செல்லம்மாள் பாரதியும் கூடவே இருந்தார்கள். பாரதியாரின் உடல் நிலையைக் கவனித்த ஆர்யா தம்பதிகள் தங்களுக்குள் ஏதோ சமிக்ஞைசெய்துகொண்டனர். இதனைக்குறிப்பாலுணர்ந்த செல்லம்மாள் பாரதி, தன் கணவருக்குத் தெரியாமல் டாக்டர் தம்பதிகளிடம் விசாரிக்க, தம்பதிகள், ''இன்றிரவு போகட்டும்! பிறகு தான் எதையும் சொல்ல முடியும்!'' என்று சூசகமாகச் சொன்னார்களாம். (இது விஷயத்தைப் பின்னர் செல்லம்மாள் பாரதி தனது கடைசித் தங்கையான ஸ்ரீமதி சொர்ணம்மாளிடம் (ஸ்வாமினி கிருஷ்ணாநந்தா) கூறியிருக்கிறார்.

நள்ளிரவு கவி பாரதியார் தானே எழுந்துசென்று குளிர்ந்த நீரில் தன் முகம் கைகால்களெல்லாம் அலம்பிக் கொண்டு மீண்டும் வந்து படுத்தார். நள்ளிரவு தாண்டி சுமார் 1.30 மணிக்கு கவி பாரதியாரின் ஆவி பிரிந்துவிட்டது.

கவிபாரதியாரின் மரணச் செய்தியைக் கேட்டதுமே மண்டயம் ஸ்ரீநிவாசாச்சாரியர், திருமலாச்சாரி, எருக்கூர் நீலகண்ட பிரம்மச்சாரி, ஹரிஹரசர்மா, கிருஷ்ணசாமிசர்மா, சின்னச்சாமி ஐயங்கார், பரலிநெல்லையப்பர் மற்றும் சிலர் வந்தனர். பொழுதுவிடிந்ததும் 'மித்திரன்' அலுவலகத்திலிருந்து நாலைந்து பேர்கள், மற்றும் பாரதியின் உறவுக்காரர்கள் வந்தனர். பாரதியாருக்கு தங்கம்மாள் பாரதி, சகுந்தலா பாரதியென இரண்டு பெண்களே தவிர, ஆண் சந்ததியே இல்லை. இதனால் கவி பாரதியின் தம்பியான சி. விசுவநாதய்யருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அப்போது அவர் சித்தூர் மாவட்டத்தில் மதனப்பள்ளிக் கருகிலுள்ள புங்கனூரில்

பள்ளி ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். அவரால் அன்றே புறப்பட்டுச் சென்னைக்கு வரமுடியவில்லை.

எனவே பாரதியாருக்கு யார் கொள்ளியிடுவதென்று பேச்சு வரவே பாரதியாரின் ஆப்த நண்பரான எருக்கூர் நீலகண்ட பிரம்மச்சாரியைப் போடச் சொல்ல, பதிலுக்கு பிரம்மச்சாரி, ''இம்மாதிரியான சடங்குகளில் எனக்கு நம்பிக்கையில்லை! என் தகப்பனாராகவே இருந்தாலும் நான் இச்சடங்குகளைச் செய்யமாட்டேன்'' என்று கூறி விடவே, கடைசியாக, கவி பாரதியாரின் மிகவும் நெருங்கிய நண்பரான கிருஷ்ணாபுரம் ஹரிஹர சர்மாவே கொள்ளியிட முன் வந்தார்.

செய்ய வேண்டிய தகனக்கிரியைக்கான இறுதிக் காரியங்கள் தொடங்கின. ஹரிஹர சர்மா, கிருஷ்ணசாமி சர்மா, நீலகண்ட பிரம்மச்சாரி, மற்றுமொரு உறவுக்காரர் முதலானோர் பிரேதத்தைத் தூக்கிக்கொண்டு, கிருஷ்ணாம்பேட்டை இடுகாட்டிற்குச் சென்றனர். அங்கே தகனத்திற்குச் சற்று முன்னர் ஸ்ரீமான்கள் சக்கரைச்செட்டியார், டாக்டர் ஆர்யா தம்பதிகள் வந்தனர். கவி பாரதியாரைப் பற்றிச் சக்கரைச் செட்டியார், கிருஷ்ணசாமிசர்மா இராமச்சந்திர ஐயர் இவர்கள் தமிழில் பேசினர் . பிறகு சுரேந்திரநாத் ஆர்யா தெலுங்கில் பேசினார். எல்லோரும்கோஷ்டியாகச் சேர்ந்து பாரதியார் இயற்றிய கீதங்களைப் பாடிய பிறகு ஹரிஹரசர்மா, சிதைக்குத் தீமூட்டினார். கவி பாரதியாரின் ஆவி நற்கதியடையும்படி எல்லோராலும் பிரார்த்திக்கப்பட்டது.

மகாகவி பாரதியார் காலமான செய்தியை 'இந்து'வும், அவர் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய 'சுதேசமித்திரன்' பத்திரிகையும்-செய்திகளும், விசேஷ உபதலையங்கங்களும் வெளியிட்டன. 'மித்திரனில்' ''கவிபாரதியார் விண்ணவருக்கு விருந்தாகி விட்டார்'' என்ற தலைப்பில் வெளியிட்ட விசேஷ தலையங்கத்தில் ''திங்கட்கிழமை 'மித்திரன்' வேலைக்கு வந்துவிடுகிறேன் என்று சொல்லியனுப்பியவர், திங்கட்கிழமையே சாம்பராகி விட்டது என்ன கொடுமை'' என வெளியிட்டது. குறிப்பிடத்தக்கது. அவருக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், நினைவாகவும்மித்தி. ரன்' காரியாலயம் அனறு பிற்பகல் அரை தினம் விடுமுறை அநுஷ்டித்தது!

பாரதியாரின் தம்பி சி.விசுவநாதய்யர் மறுநாள் சென்னைக்கு வந்து, மேற்கொண்டு செய்ய வேண்டிய அபரகிரியைகளைச் செய்து நிறைவேற்றினார். தமது சகோதரர் சுப்பிரமணிய பாரதியார் இறந்ததை, சென்னை கார்ப்பரேஷன் அதிகாரிக்கு, தம்பி விசுவநாதய்யர் செப்டம்பர் 21ந் தேதி மரண ரிஜிஸ்தருக்காக விவரங்கள் தெரிவித்துப் பதிவு செய்தார். அவர் குறிப்பிட்டதாவது: ''பதிவு எண் 386- சி.சுப்பிரமணிய பாரதி-பிராமண சாதி-ஆண்-38வயது- பத்திரிகை உதவி ஆசிரியர்-பத்துநாட்களுக்கு மேலாக, கடுமையான வயிற்றுப் போக்குடனிருந்து -செப்டம்பர் 12ந் தேதி 1921ல்- டி.பி.கோயில் தெரு 67ம் நெம்பர் லக்கமிட்ட வீட்டில் காலமானார்- என்று அவருடைய சகோதரர் சி. விசுவநாதய்யர் தெரிவிக்கிறார்'' என்றுள்ளது. (சென்னை மாநகராட்சி மரணக் குறிப்பேட்டில் பதியப்பட்டதன் நகல் வடிவம் தமிழரசு 1.12.1982 இதழில் வெளிவந்துள்ளது)

உலகமெங்கும் மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது. நம் பாரத நாட்டு விடுதலைக்காகவும், மக்கள் சுதந்தர உணர்ச்சியடைவதற்காகவும் அக்கவி செய்த சேவைகளும், பாடின பாடல்களும் நம்மிடம் வற்றாத பொக்கிஷமாகத் திகழ்கின்றன.

வாழ்க பாரதி! வாழ்க பாரதம்!





# சம்பந்தர் போற்றிய திருத்தண்டலை

தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி-திருவாரூர் பெரு வழியில், திருத்துறைப் பூண்டியிலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள சிற்றூரே 'திருத்தண்டலை' என்று அழைக்கப்படுகிறது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் கோச்செங்கட் சோழன் எழுப்பின எழுபது மாடக் கோயில்களுள் ஒன்று, திருத்தண்டலை நீள்நெறிநாதர் கோயிலாக இங்கு அமைந்துள்ளது. இது காவிரிக்குத் தென்கரையிலுள்ள பாடல்பெற்ற தலங்களுள் ஒன்றாகும்.

''விரும்பும் திங்களும் கங்கையும் விம்மவே
சுரும்பும் தும்பியும் சூழ்சடை யார்க்கிடம்
கரும்பும் செந்நெலும் காய்க்க முகின்வளம்
நெருங்கும் தண்டலை நீள்நெறி காண்மினே''

என்று இத்தலத்தைப் பாடி மகிழும் சம்பந்தர் பெருமான் இத் திருக்கோயிலைக் கட்டிய மன்னன் கோச்செங்கட்சோழன் என்பதை,

''செருவ ருந்திய செம்பியன் கோச்செங்கண்
நிருபர் தண்டலை நீள்நெறி காண்மினே''

என்ற வரிகளால் மெய்ப்பிக்கிறார்.

கிழக்கு நோக்கிய இக்கோயிலின் எளிய கோபுரமற்ற நுழைவாயிலைக் கடந்து உள்நுழைந்ததும் காணப்படும் நிலப்பரப்பில் நடுநாயகமாக அமைந்துள்ளது நீள்நெறிநாதரின் மாடக்கோயில். இம்மாடக் கோயிலின் வெளித் திருச்சுற்றில் சந்திரன், அய்யப்பன், பைரவர், கதிரவன், பிள்ளையார், முருகன், சண்டிகேசுவரர் முதலிய உடன் கூட்டத் தெய்வங்களுக்கான சுற்றாலைக் கோயில்கள் காணப்படுகின்றன. இவற்றுள் பிள்ளையார் கோயில் தென்மேற்குப் பகுதியில் விமானத்துடனும், முன்மண்டபத்துடனும் அமைந்துள்ளது. மேற்குப் புறத் திருச்சுற்றில் தலமரமான குருந்தை மரம் காணப்படுகிறது.

இம்மாடக் கோயிலின் கிழக்கு வெளித் திருச்சுற்றின் வலப்புறம் அம்மன் கோயில் தரைமட்டத்தில் அமைந்துள்ளது. சதுர அமைப்பிலான முன்மண்டபத்தில் பலிபீடமும், நந்தியும் அம்மன் திருமுன்னை நோக்கியபடி அமைந்துள்ளன. கருவறையையும், முன்மண்டபத்தையும் சிறிய உள்ம்ண்டபம் இணைக்கிறது. கருவறையில் இறைவி ஞானாம்பிகை அம்மனாய்த் திருக்கோலம் கொண்டுள்ளார். கருவறைச் சுவரின் தெய்வப் புரைகள் வெறுமையாக உள்ளன. கருவறையின் விமானம் மூன்று அடுக்குகள் பொருந்தியதாய் அனைத்து உறுப்புக்களுடனும் அழகுற அமைந்துள்ளது. இவ்வம்மன் கோயிலின் முன்மண்டபம் செங்கல் திருப்பணி. உள் மண்டபமும், கருவறையும் கருங்கல் திருப்பணி.

**டாக்டர்**
**இரா. கலைக்கோவன்**

நடு நாயகமாக விளங்கும் மாடக்கோயிலை நோக்கியபடி கிழக்கு வெளித் திருச்சுற்றில் நந்தியும், பலிபீடமும் அமைந்துள்ளன. பலிபீடத்தில் சிறிய பிள்ளையார் சிற்பம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. மாடக் கோயில் முன்மண்டபம், மகா மண்டபம், உள் மண்டபம், கருவறை என நான்கு பகுதிகளுடன் விளங்குகின்றது. முன் மண்டபத்திற்குள் நுழைய, மண்டபத்தின் இருபுறமும் கிழக்கு நோக்கிய நிலையில் படிக்கட்டுகள் அமைந்துள்ளன. இம்முன்மண்டபத்தின் உள் சுவரில் தெற்குப் புறத்திலும் வடக்குப் புறத்திலும் இத்திருக் கோயிலில் வழிபட்டு வந்த ''அரிவாட்டாய நாயனார்'' வாழ்க்கை வரலாறு ஓவியங்களாகத் தீட்டப் பட்டுள்ளன. இச்சுவரின் மேற்குப்புறத்தில் மகா மண்டபத்திற்குள் செல்லும் வாயிலின் இரு புறங்களிலும் மனித முகமும், மிருக உடலும் உடைய மனித மிருகமும், புலி போன்ற விலங்கு ஒன்றும் இலிங்கத்திற்கு வழிபாடு

செய்வது போன்ற சிற்பங்கள் காணப்படுகின்றன.

மகாமண்டபத்தில் வடக்குப் புறத்தில் செவ்வக விமானத்துடன் கூடிய நடராசர் திருமுன் அமைந்துள்ளது. இதில் நடராசப் பெருமான் அற்புத வேலைப்பாடுகள் பொருந்திய செப்புத் திருமேனியராய்க் காட்சி அளிக்கிறார். இங்கு அகத்தியர், பதஞ்சலி முனிவர், சிவகாமி அன்னை முதலியோரின் அழகிய செப்புத் திருமேனிகளும் இடம் பெற்றுள்ளன.

மகாமண்டபத்திலிருந்து உள் மண்டபத்திற்குள் நுழையும் வாயிலின் இருபுறமும் வாயிற் காப்போர் காவல் செய்கின்றனர். இவ்வாயிற்காப்போர் சிற்பங்களுக்கு மேலே சிறிய மண்டபம் போன்ற அமைப்பில் அரிவாட்டாய நாயனார் கதை பக்கத்திற்கொன்றாக அழகிய சிற்பங்களாய்ச் செதுக்கப்பட்டுள்ளது. உள்மண்டபத்திற்குள் இருபுறமும் அழகிய செப்புத் திருமேனிகள் காட்சியளிக்கின்றன. இவற்றுள் திரிபுராந்தகர் வடிவம் அழகு கொஞ்சும் செப்புத் திருமேனியாகும். கருவறையில் நீள்நெறிநாதர் இலிங்கத் திருமேனியராய் ஆவுடையார் மீது காட்சியளிக்கிறார். கருவறைச் சுவரின் வெளிப்புறத்தில் தெற்குப், பக்கத்தில் அமைந்த தெய்வப் புரையில் தென்திசைக் கடவுள் கோயில் கொண்டுள்ளார். இது திருவைகல் மாடக்கோயிலில் உள்ளது போல் சுற்றிலும் சுவர்களுடன்படிகள் அமைக்கப்பெற்றுச் சிறு கோயிலாய் மாறியுள்ளது. வடக்குப் புறத் தெய்வப்புரையில் காணப்படும் கொற்றவைக்கும் இதுபோலவே கோயில் தகரக் கூரையுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேற்குப்புறத் தெய்வப் புரை வெறுமையாக உள்ளது.

இத்தலத்துடன் தொடர்பு உடையவராகக் கருதப்படும் அரிவாட்டாயநாயனார் இத்தலத்திற்கு அருகிலமைந்த கணமங்கலம் என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர். நாள்தோறும் தண்டலை நீள்நெறிநாதருக்கு மாவடு, கீரை, செந்நெல்லரிசி ஆகியவற்றைப் படைத்து மங்கல நீராட்டு, செய்து மகிழ்ந்து வந்தார். ஒரு நாள் வழிபாட்டுக்கான பொருட்களுடன் தண்டலைத் திருக்கோயிலை நோக்கி வருகையில், வழியில் வயல் வரப்பில் கால் இடறிக் கையிலிருந்த வழிபாட்டுப் பொருட்கள் கீழே விழுந்தன. உடன் அப்பெரியார் சிவ வழிபாட்டுக்கு இடையூறு நேர்ந்ததே என வருந்தி அரிவாள் ஒன்றினை எடுத்துத் தன் கழுத்தை அரியத் தொடங்கினார். அப்போது வயல் வரப்பிலிருந்து இறைவனின் திருக்கரம் நீண்டு நாயனாரின் கைகளைத் தடுத்துப் பிடித்துக் கொண்டது. கீழே விழுந்த படையல் பொருட்களை இறைவன் உண்டதற்கு அறிகுறியான ஒலியும் கேட்டது. நாயனார் பெருமகிழ்வெய்தினார். இருகைகளாலும் இறைவன் திருவருளைப் போற்றித் தொழுதார். உடன் சிவபெருமான் அம்மையப்பராய்த் தோன்றி, நாயனாரையும், அவரது துணைவியாரையும் தனது திருவடிப்பதத்தில் சேர்த்துக் கொண்டார் என்று சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் எடுத்துரைக்கின்றது.

வரலாற்றுச் சிறப்பும், புராணச் சிறப்புமுடைய இக்கோயில் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் கோச்செங்கட் சோழனால் செங்கல் திருப்பணியாகக் கட்டப்பட்டது. காலப் போக்கில் அழிவுற்ற இக்கோயிலைப் பிற்காலச் சோழ மன்னர்கள் கருங்கல் திருப்பணியாய் மாற்றியமைத்திருக்க வேண்டும்.

எழுபதாண்டுகளுக்கு முன் புதிய திருப்பணி நடைபெற்றதாகத் தலவரலாறு கூறுகிறது. அதுபோழ்து இக்கோயிலிலிருந்த கல்வெட்டுக்கள் அழிந்து போயின என்று தல வரலாறு வருத்தத்துடன் கூறுகிறது. திருப்பணி செய்தவர்களின் கவனக் குறைவால் இக்கோயிலுக்குச் சோழமன்னர்கள் செய்த அருஞ்செயல்களை அறிய முடியாத நிலையில் இருக்கிறோம்.


எளிய அமைப்புடன், ஆனால் அழகிய சிற்பங்களுடன் அமைந்திருக்கும் இப்பழமை நலம் பொருந்திய மாடக் கோயில் பலரும் பார்த்துப் பயன்பெற வேண்டிய திருக்கோயிலாகும்.



மனிதமுகம் கொண்ட விலங்கு சிவலிங்கத்தை வழிபடும் காட்சி.



கழுத்தை அறுத்துக்கொள்ள முனையும் அரிவாட்டாய நாயனாரை இறைவன் தடுத்தல்.



# சொல்லுங்கள் பார்ப்போம்

1) பிப்ரவரி மாதம் 28–ஆம் தேதி இரவு 7 மணிக்கு நீங்கள் படுக்கச் செல்கிறீர்கள். மறுநாள் காலை 8 மணிக்கு எழுந்திருக்க அலாரம் வைக்கிறீர்கள். பிறகு தூங்கிவிடுகிறீர்கள். அலாரம் அடித்து எழுந்து கொள்கிறீர்கள். நீங்கள் எத்தனை மணிநேரம் தூங்கியிருப்பீர்கள்?

2) 25-லிருந்து 1-ஐ எத்தனை தடவை கழிக்க முடியும் உங்களால்?

3) உங்கள் அம்மாவின் சகோதரருடைய மைத்துனர் உங்களுக்கு நெருங்கிய உறவாகத்தானே இருக்கவேண்டும்? என்ன உறவு?

4) ராஜ முருகனும் ரவியும் சகோதரர்கள். ராஜ முருகனுக்கு பின்னால் ரவி நிற்கிறான். ரவிக்குப் பின்னால் ராஜமுருகன் நிற்கிறான். ஒரே நேரத்தில் இது எப்படிச் சாத்தியமாகும்?

5) குளியலறையில் குளித்து முடித்ததும் குழாயை நிறுத்தாமல் ஞாபக மறதியாக வந்துவிடுகிறீர்கள். தண்ணீர் வழிந்து படுக்கை அறை, சமயலறை, வரவேற்பறை, தோட்டம் எங்கும் பாய்கிறது. விலையுயர்ந்த பொருள்கள் நனைந்து விடுகின்றன. உங்களுக்கு மனக்கஷ்டம் தாங்கவில்லை. அந்த நிலையில் நீங்கள் உடனடியாகச் செய்யும் முதல் காரியம் என்ன?

விடை

(1) ஒரு மணி நேரம்தான். இரவு 8 மணிக்கே அலாரம் அடித்துவிடும்.

(2) ஒரு முறைதான் கழிக்க முடியும். அதன் பிறகு 24, 23, 22....இப்படித்தான் கழிக்க முடியும்.

(3) அப்பா.

(4) இருவரும் ஒருவருக்கு ஒருவர் முதுகு காட்டி நின்றால் சாத்தியமாகும்.

(5) குழாயை நிறுத்துவது.

— மீனா

## எழுதுங்கள் !

மாணவ மணிகளே! இது உங்கள் பக்கம். இந்தப் பகுதிக்கு நீங்கள் குட்டிக்கதை, கவிதை, துணுக்குகள் முதலானவற்றை எழுதி அனுப்பலாம். அவை சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும். பள்ளியில் சிறந்து விளங்கும் மாணவன் / மாணவி பற்றிய குறிப்பும், புகைப்படத்துடன்-ஆசிரியரின் சான்றுடன் அனுப்பி வைக்கலாம். மாணவர்க்குப் பயனுள்ளவை இப்பகுதியில் வெளியிடப்படும். எழுதும்போது தங்கள் பள்ளி முகவரியைத் தெளிவாக எழுதுதல் வேண்டும்.



ஒரு சிற்பியிடம் ஒருவன் சீடனாக இருந்து சிலை வடிக்கக் கற்று வந்தான். அவன் எந்தச் சிலையை வடித்து முடித்தாலும், ''இன்னும் நீ முழுமையை எட்டவில்லை. இதில் இந்தக் குறை இருக்கிறது பார். திருத்து'' என்று சொல்வார் சிற்பி. சீலின் ஆர்வத்தோடு மேலும் முயன்று திருத்தம் செய்து அந்தக்குறையைப் போக்குவான். எது செய்தாலும் அதில் ஆசிரியர் குறை சொல்கிறாரே என்று அவன் அணுவும் வருத்தப்படமாட்டான்.

ஒருநாள் அவன் ஒரு குழந்தை தலையைச் செய்து முடித்தான். சிற்பி அதைப் பார்த்துப் பரவசமடைந்தார். சீடனைத் தட்டிக் கொடுத்தபடி, ''நீ முழுமையை எட்டிவிட்டாய். இந்தச் சிலையில் எந்தக் குறையும் என்னால் காண முடியவில்லை...'' என்றார்.

மாணவனின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

''நான் சொன்னதைக் கேட்டு மகிழ்ச்சி அடைவதைவிட்டு ஏன் அழுகிறாய்?'' என்று கேட்டார் ஆசிரியர்.

''ஐயா, நீங்கள் ஒவ்வொரு தடவை குறை சொல்கிறபோதும் அதைக் கேட்டுத் திருத்தம் செய்து நான் மேலும் கற்றுக் கொள்ள வாய்ப்பு இருந்தது. இப்பொழுது அந்த வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அதை நினைத்தால்தான் எனக்குத் துக்கம்தாளவில்லை.....''

—ராஜமுருகன்



# மழையே! மழையே! வந்திடுவாய்!

மழையே! மழையே! வந்திடுவாய்!
மடையை உடைத்துப் பாய்ந்திடுவாய்!
குடையைக் கிழித்துக் கொட்டிடுவாய்!
குடத்தை நிறைத்துப் பெய்திடுவாய்!
இடத்தைப் பசுமை செய்திடுவாய்!
படத்தைப் போட்டுப் போற்றிடுவோம்!

உன்னைக் காணா உள்ளங்கள்
உலர்ந்து போன ஊருணிகள்
தளர்ந்துபோன தாய்மார்கள்
வளர்ந்து வாடும் பயிரினங்கள்
மலர்ந்து செழிக்க மழையே வா!
கிளர்ந்து உன்னை வாழ்த்திடுவோம்!

எங்கும் அருளைப் பொழிந்திடுவாய்!
ஏரிகுளங்கள் நிறைத்திடுவாய்!
மின்னல் இடியும் துணை கொண்டு
மண்ணைப் பொன்னாய் மாற்றிடவே
இன்றே வெள்ளம் பெருக்கிடுவாய்!
நன்றே நாடு கொழித்திடுமே!

கொட்டும் மழையில் கூத்தடிக்க
பட்டுச் சிறுவர் பரிதவித்தோம்
பட்டினி போக்க அரசாங்கம்
திட்டம் போட்டு உழைக்கிறது
பலத்தைக் கொடுக்க உடனே வா!
நிலத்தைக் கொத்தி நிமிர்ந்திடுவோம்!

மு. முத்துக்காளத்தி

# உள்ளத்தில் இல்லை ஊனம்!

யாராவது உட்கார்ந்து கொண்டே வெற்றி பெற முடியுமா?

முடியும்! என்று சொல்கிற வகையிலே, ஒரு பெண்மணி போட்டியில் தங்கப் பதக்கமே பெற்றுள்ளார்.

நியூசிலாந்தைச் சேர்ந்த 38 வயதுப் பெண் கடந்த 13 ஆண்டுகளாக கால்கள் சுவாதீனமில்லாமல் சக்கர நாற்காலியில் உட்கார்ந்தபடி காலம் தள்ளி வருபவர்.

நெரோலிபோர்ஹால் என்னும் அப்பெண் அக்டோபர் 5–ஆம் தேதியன்று காமன்வெல்த் விளையாட்டு விழாவில் மகளிருக்கான வில்வித்தைப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார்.

1969-இல் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி செயலிழந்த பிறகு, வில்வித்தையில் ஈடுபட்டு 10 ஆண்டுகளில் தேசிய சாம்பியன் பட்டம் பெற்ற அவர், இப்போது காமன்வெல்த் சாம்பியனாகி விட்டார்.


முயன்றால் முடியாதது எதுவும் இல்லை.

**நெடுங்காலமாக**
**மனிதனுக்குதவிடும் மிருகம்**

மனிதனுக்கு உழைக்கும் மிருகங்களுள் நெடுங்காலமாக உதவி வரும் மிருகம் எது தெரியுமா? நாய் தான்! ஆடு, வெள்ளாடு, குதிரை முதலிய மிருகங்கள் மனிதனுக்குதவ அவனால் பின்னர் பழக்கப்படுத்தப்பட்டவை.

கடற்கரையில் இருந்து பார்த்தால் எத்தனை மைல் தூரம் வரை கப்பலை தெரியும்?

கப்பல் தெரியும் தூரம், கப்பலின் உயரத்தையும், காணும் பகுதியிலுள்ள நிலத்தின் வளைவையும் பொருத்தது. காணப்படும் பொருள் கண் ணிமட்டத்துடன் ஒரு குறைந்த அளவு கோணத்தை அடைத்துக் கொள்ள வேண்டும். கோணத்தின் அளவு குறைந்தால் பார்க்க முடிவதில்லை, எனவே, உயரமான கப்பல் அதிக தூரம் தெரியும்.



# பேசும் நூல்

**பா**ர்வையற்ற ஒரு குழந்தை எவ்வாறு தவளைக் குஞ்சு பற்றித் தெரிந்து கொள்ளும்?

இதுவரையில் பார்வையில்லாத குழந்தைகள் 18 மீட்டர் அளவுக்கு பிரெயில் எழுத்துக் கலைக் களஞ்சியத்தைக் கைகளின் விரல்களால் துழாவிக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. அது ஒரு கடினமான வேலை. அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசையே குன்றிப் போகும்.



இப்போது நிலைமையே மாறிவிட்டது. புதிய ''பேசும் உலகநூல்'' ஒன்றின் துணையுடன் தவளைக் குஞ்சு பற்றி மட்டுமல்ல; எதைப் பற்றியும் உடனே பார்வையற்ற குழந்தை தெரிந்து கொள்ள முடியும்; பார்வையுள்ள குழந்தைக்கு எவ்வளவு நேரம் பிடிக்குமோ, அவ்வளவு காலந்தான் ஆகும்.

பேசும் கலைக்களஞ்சியம் 19 தொகுதிகள் கொண்டது. இவற்றை வைக்க 5 அடி இடமே போதுமானது. ஒரு தொகுதிக்குள் 12 காஸட்டுக்கள் இருக்கும். ஒவ்வொன்றும் ஆறு மணி நேரம் ஓடிச் சேதிகள் தந்து கொண்டிருக்கும்.

தொகுதிகள், காஸட்டுகள் குறித்து பிரெய்ல் எழுத்துக்களிலும், கொட்டை எழுத்துக்களிலும் பட்டியல் உண்டு. குறித்த காஸட்டைத் தெரிவு செய்த பின்பு, ஒரு தனி வகை 'காஸட்' ஒலிக் கருவியில் அதைப் போட வேண்டும். பின்பு, கருவியிலுள்ள டயலில் தவளைக் குஞ்சு பற்றிய எண்ணைச் சுழற்றினால், அது பற்றிய விவரம் அனைத்தையும் கேட்கலாம்!

''பேசும் உலகநூல்' தயாரிக்க அமெரிக்க அரசின் கல்வித்துறையின் சிறப்புக் கல்வி-மறுவாழ்விப்புப் பணிகள் அலுவலகம் மான்யம் வழங்கியுள்ளது. பார்வையற்றவருக்கான அமெரிக்கன் பிரின்டிங் ஹவுஸ், இலினாய் நகரிலுள்ள சிக்காக்கோ, உலகக் குழந்தைகள் நூல் நிறுவனம் ஆகியவை கூட்டாக மேற்கொண்ட முயற்சியின் பலனே இந்தக் கலைக் களஞ்சியம்!



கனடா நாட்டின் ஆன்டாரியோ மாநிலத்தின் ரோட்டரி சங்க உறுப்பினர் தி. வில்பிரட் விஸ்கின்ஸன், மாண்புமிகு முதல்வர் அவர்களை 29.9.1982ல் சந்தித்தார்.




ரிசர்வ் வங்கியின் கவர்னர் டாக்டர் மன்மோஹன்சிங் அவர்கள் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை 18.10.1982ல் சந்தித்தார்.



மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களும் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்களும் ஆயிரம் விளக்குப் பகுதியில் குடி தண்ணீர் வசதிக்கான குழாய்கள் அமைப்பதை (16.10.1982) பார்வையிட்டனர்.

# படமும் செய்தியும்



தமிழ்நாட்டில் பெண்கள் பல்கலைக் கழகம் நிறுவுவது தொடர்பாக உருவாக்கப்பட்ட வல்லுநர் குழுவின் தலைவர் திரு மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் குழுவின் அறிக்கையை 27.9.1982ல் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்களிடம் அளித்தார்.

மாண்புமிகு ஆதி திராவிடர் நல அமைச்சர் திரு எம். விஜயசாரதி அவர்கள் தலைமையில் காஞ்சி ஸ்ரீ ஜயேந்திர சரசுவதி சங்கராச்சாரியார் சுவாமிகள் 4.9.1982ல் இச்சிபுத்தூரில் திருமண மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டினார்.



# கதர் தொழிலில் முதன்மை பெறும் தமிழகம்

பின்பக்க அட்டை சொல்லும் கட்டுரை

தமிழ்நாட்டில் முன்பெல்லாம் நான்கு கதிர், ஆறு கதிர் அம்பர் இராட்டைகள் ஆகியவற்றின் மூலம் நூற்போர் நாளொன்றுக்கு ஒன்றரை ரூபாயிலிருந்து இரண்டு ரூபாய் வரை ஊதியம் பெற்றனர். மேலும் நூற்போரின் உற்பத்தித் திறனை அதிகரித்து நூற்போரின் வருவாயை அதிகரிக்க முற்றிலும் உலோகத்தால் அமைக்கப்பட்ட ஆறு கதிர், 12 கதிர் இராட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றின் விளைவாக இப்பொழுது நூற்போர் நாளொன்றுக்கு ஐந்து ரூபாயிலிருந்து ஏழு ரூபாய் வரை ஊதியம் பெறுகின்றனர்.

இத்தகைய இராட்டைகள் 30 ஐக் கொண்ட கிராமிய நூற்புக் கூடங்கள் 416 கதர் கிராமத் தொழில் வாரியத்தின் நேரடிப் பார்வையின் கீழ் இயங்கி வருகின்றன. இந்நிலையம் ஒன்று நிறுவிட ரூ.90,000 தேவைப்படுகிறது. இவை ஒவ்வொன்றிலும் முப்பது நபர்களுக்கு, பெரும்பாலும் பெண்களுக்கு நிலையான வேலை கிடைக்கின்றது.

இந்தக் குறைந்த மூலதனத்தில் இத்தகையோருக்கு, வேறு எந்தத் தொழிலிலும் வேலை வாய்ப்பு அளிக்க இயலாது. திக்கற்ற பெண்களும், விதவைகளும் கிராமிய நூற்புக் கூடத்தில் சேர்க்கப்பட்டு வாழ்வளிக்கப்படுகிறார்கள்.

இவ்வாரியத்தின் கீழ் 26,345 நூற்பாளர்கள் உள்ளனர். இவர்கள் 1981 - 82 ஆம் ஆண்டில் 355.72 இலட்சம் சிட்ட நூலை உற்பத்தி செய்து, ரூ.119.25 லட்சம் ஊதியமாகப் பெற்றனர். 1982-83ல் மேலும் 186 கிராமிய நூற்புக் கூடங்கள் புதிதாகத் துவக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 5,886 பேருக்கு நிலையான வேலை வாய்ப்புக் கிடைத்திடும்.

## நெசவு

நூல் உற்பத்திக்கு ஏற்றவாறு துணி உற்பத்தி செய்வதற்கும், நெசவாளர்களின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கும், கிராமப் புறங்களில் படித்த, வேலை வாய்ப்பு அற்ற இளைஞர்களை நெசவுத் தொழிலில் ஈடுபடுத்துவதற்கும் நேபாள மாதிரித் தறிகளைத் தமிழ்நாட்டில் புகுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி 1983-84 ஆம் ஆண்டில் 640 நேபாளத் தறிகள் இயக்கி வைக்கப்படும்.

1980-81-ஆம் ஆண்டு 5,832 நெசவாளர்கள் மூலம் 657.78 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 51 இலட்சம் மீட்டர் துணி உற்பத்தி செய்யப்பட்டது.

நெசவாளர்கள் ரூ. 137.45 இலட்சம் ஊதியமாகப் பெற்றனர். 1980-81-ஐ விட 1981-82ல் 11 லட்சம் மீட்டர் துணி கூடுதலாக உற்பத்தியாகியுள்ளது. 1982-83ல் ரூ.700 லட்சம் மதிப்புள்ள கதர்த் துணி உற்பத்தி செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## கதர்ப்பட்டு உற்பத்தி

வாரியம் தனது 13 உற்பத்தி அலகுகள் மூலம் ரூ.257 இலட்சம் மதிப்புள்ள கதர்ப் பட்டினை 1981-82 ஆம் ஆண்டு உற்பத்தி செய்தது. கதர்ப்பட்டு வகைகளுக்கு நல்ல வரவேற்பு என்றுமே உள்ளது. இதனால் 1982-83 ஆம் ஆண்டில் மேற்கொண்ட அதிகமாகப் பட்டுத் துணி உற்பத்தி செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. ரூ. 30 இலட்சம் பெறுமானமுள்ள கதர்ப் பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கென உற்பத்தி செய்யப்படுகிறது.

## ஆராய்ச்சி

கதரின் தரத்தை ஆராயவும் வடிவமைப்பு செய்யவும் ஓர் ஆராய்ச்சிக்கூடம் பவானிசாகரில் கட்டப்பட்டு வருகிறது. இவ்வாண்டில் அது செயல்படத் துவங்கும்.

## ஆதிதிராவிடர் முன்னேற்றத் திட்டம்

கதர்த் தொழிலில் பல்லாயிரக்கணக்கான நபர்களுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்பை ஏற்படுத்தித்தர வாய்ப்புள்ளது. ஆதிதிராவிட மக்களை இத்தொழிலில் ஈடுபடுத்தி, அவர்களுடைய வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கருதி, அவர்களுக்காக 20 கிராமிய நூற்புக் கூடங்களும், 8 நேபாள மாதிரி தறிகளும் துவக்கிட, 1981-82ல் சிறப்புத் திட்டத்தின் கீழ் அரசு, ரூபாய் 84.84 லட்சம் ஒப்புதல் அளித்துள்ளது. இதில் 1000 நபர்கள் பயனடைவர். 1982-83ல் மேற்கொண்டு 20 கிராமிய நூற்புக் கூடங்கள், 8 நேபாள மாதிரித் தறி அலகுகள், 2 பட்டு நூல் முறுக்காலைகள், 3 மெத்தை, தலையணை தயாரிக்கப் பயன்படும் இலவம் பஞ்சு உடைக்கும் அலகுகள், 3 சாயச்சலவை அச்சுக் கூடங்கள், ஜெக்காடு துணி நெசவியல் கூடம் ஒன்று இவைகளை ரூ.147.05 இலட்சம் மதிப்பில் அமைத்திடும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது. இதனால் 1,365 பேர் பயனடைவர். ஏழை எளிய ஆதிதிராவிட மக்களின் வருவாயைப் பெருக்கச் செயல்படும் இத்திட்டங்கள் அவர்களது வாழ்க்கையில் மலர்ச்சியை ஏற்படுத்துகின்றது. இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரில் பெரும்பான்மையோர் பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துகிறது இத்திட்டம்.

கதர் உற்பத்தியிலும், விற்பனையிலும் தமிழகம் இந்தியாவிலேயே முதன்மையில் இருப்பது பெருமிதத்திற்குரியதாகும். இதில் வாரியத்தின் பணி அரும் பணியாகும். மேலும் இந்நிலை தொடர்ந்து நீடிக்கும் என்பதில் ஐயமில்லை. வாரியம் விவசாயப் பருவம் தவறிய காலத்தில் கதர் உற்பத்தியில் முன்னின்று பல்லாயிரக்கணக்கான விவசாயப் பெருமக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும்.

# ஆதிதிராவிடர் நல்வாழ்வுக்கு ஆக்கமிகு திட்டங்கள்!

ஆதிதிராவிடர்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தை, ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் (தாட்கோ) கடந்த 10-10-81-ஆம் நாள் முதல் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது.

ஊரக ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்துடன் இணைந்து, ஆதிதிராவிடர்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் 1981-82ல் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

கிராமப்புறங்களில் வறுமை கோட்டுக்குக் கீழே வாழும் ஆதிதிராவிட குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து, அக்குடும்பங்கள் வறுமையின் பிடியிலிருந்து மீண்டு, 'வளமான ஒளிமிக்க நல்வாழ்வைப் பெற்றிடக் கறவை மாடுகள் வளர்க்க ஆட்டுப்பண்ணைகள் அமைக்க உழவுமாடுகள் வண்டிமாடுகள் வாங்க, கோழிப்பண்ணைகள் அமைக்க மற்றும் கிராமப்புற கைவினைஞர்களுக்குத் தொழில் நடத்த வங்கிகள்மூலம் குறைந்தவட்டியில் கடன் உதவி ஏற்பாடுகள் செய்து அதற்கு அரசு மான்யமாக 33 சதவீதமும் தாட்கோ மூலம் 25 சதவீதம் குறியீட்டுக் கடன் உதவியும் செய்து கொடுக்கப்படுகிறது.

இத்திட்டங்கள் தவிர ஆதிதிராவிட மக்களுக்கு நிரந்தரமான தொழில்களை ஏற்படுத்தி அதன் மூலம் நிரந்தரமான மாத வருமானம்கிடைக்கப் பல்வேறு வகையானதொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.


மதுரைமாவட்டத்தில் 1981 82ல் ஆதிதிராவிடர்களுக்கான இரண்டு நவீன செங்கற் சூளைகளை உருவாக்கத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் தென்னை நாரிலிருந்து தும்பு, வடகயிறு உற்பத்தி செய்ய 3 தென்னை நார் நூற்புத் தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. அந்த விவரங்கள் வருமாறு :

பெரியகுளம் ஒன்றியம் பங்களாபட்டியில் நவீன செங்கல் சூளை ரூ. 8 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் வேலை வாய்ப்பு பெறக்கூடியவர்களின் எண்ணிக்கை 100. இதற்கு அரசு அளித்துள்ள மானியம் ரூபாய் 2.66 இலட்சம், தாட்கோ அளித்துள்ள கடன் உதவி ரூ. 2 லட்சம்.

விட்டல் நாய்க்கன் பட்டியில் நவீன செங்கல் சூளை ரூ 8 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் வேலைவாய்ப்பு பெறக்கூடியவர்களின் எண்ணிக்கை 100 ஆகும். அரசின் மானியம் ரூ. 2·66 இலட்சம்.

தேனீ ஒன்றியத்தைச் சேர்ந்த கோட்டூரில் தென்னை நாரிலிருந்து தும்பு வடகயிறு உற்பத்தி செய்யும் தொழில் கூடம் ரூ 3.60 இலட்சம் செலவில் அமைக்கப்படும். இதில் பணிபுரிவோர் எண்ணிக்கை 90 ஆகும். அரசு மானியம் ரூ. 1.20 இலட்சம் தாட்கோ கடன் உதவி ரூ. 90,000 ஆகும்






திருப்பரங்குன்றம் ஒன்றியத்தைச் சேர்ந்த விரதனூரில் ரூ. 3.60 இலட்சம் முதலீட்டில் தென்னை நாரிலிருந்து தும்பு, வடகயிறு தயாரிக்கும் தொழில் கூடத்தில் 90பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இதற்கு அரசின் மான்யம் ரூ. 1.20 இலட்சம். தாட்கோ கடன் உதவி ரூ. 90,000 ஆகும்.

கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பொட்டப்பட்டியில் தென்னை நாரிலிருந்து கயிறு தயாரிக்கும் தொழில்கூடம் ரூ 3.60 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் பயனடைவோர் 90 பேர் அரசு மானியம் ரூ 1.20 இலட்சம். தாட்கோ கடன் உதவி ரூ. 90,000 ஆகும்.

கோட்டம்பட்டி தோல் பதனிடுவோர் தொழிலியல் கூட்டுறவுச் சங்கம் (கதர்—கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டம்) மூலம் தோல் பதனீடு செய்யப்படும். இதற்குமுதலீடு ரூ. 10.42 இலட்சமாகும். இங்கு 100 பேர் வேலைவாய்ப்பு பெறுவார்கள். அரசு மானியம் ரூ. 5.21 இலட்சம். தாட்கோ அளித்துள்ள உதவி ரூ 2.55 இலட்சம்.

நகர்ப்புறங்களில் காலணி தைக்கும் தொழிலாளர்கள் பங்க் கடை வைத்து தொழில் நடத்த ஒவ்வொருவருக்கும் ரூ. 7,000 வீதம் 25 பேருக்கு முழு மான்யமாக ரூ. 1.75 இலட்சம் நிதி வசதி அளிக்கப்பட்டுள்ளது.

தேனி கூட்டுறவு நூற்பாலையிலும், ஜக்கம்பட்டி விசைத்தறி தொழிலியல் கூட்டுறவுச் சங்கத்திலும் வேலைவாய்ப்பு பெறும் ஆதிதிராவிடர்கள் உறுப்பினராக அரசு வழங்கிய உதவித் தொகை ரூ. 33.75 இலட்சமாகும். தாட்கோ கடன் உதவியாக ரூ. 5 இலட்சம் வழங்கியுள்ளது.

குஜிலியம் பாறை ஒன்றியத்தைச் சேர்ந்த வேடப்பட்டி ஆதிதிராவிடர் பாய் பின்னும் தொழிலியல் கூட்டுறவு சங்கத்தின் மூலம் 500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இத்திட்டத்திற்கு தாட்கோ ரூ. 37,500 கடன் உதவி வழங்கியுள்ளது.

இவை தவிர நிலமில்லாத 50 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு நிலஉச்சவரம்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பாப்பம்பட்டி அருகில் உள்ள ஆண்டிபட்டி கிராமம் சர்வே எண் 248-இல் 100 ஏக்கர் நிலத்தை மேம்பாடு செய்து 10 சமுதாய கிணறுகள் அமைத்து பாசன வசதி செய்து கொடுக்கவும் வேளாண்மைத் துணைத் தொழில்கள் செய்து வரவும் பாம்பம்பட்டி நிலமேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கு மொத்த முதலீடு ரூ. 16 இலட்சமாகும். இதில் மேயர் டிரஸ்ட் பங்க் ரூ. 9 இலட்சம், அரசுமான்யம் தாட்கோ கடன் ரூபாய் 3 இலட்சம் ஆகும்.

மதுரை மாவட்டத்தில் 1981-82 இல் ஊரக ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் மூலம் தாட்கோ கடன் உதவியுடன் பயன் பெற்ற ஆதிதிராவிடர்களின் எண்ணிக்கை 18,764 ஆகும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஏனைய சிறப்புத் திட்டங்கள் மூலம் கடந்த ஆண்டு வழங்கப்பட்ட மொத்த மான்யம் ரூ. 121.03 இலட்சம் ஆகும். தாட்கோ கடன் உதவி மட்டும் ரூ.54.82 இலட்சமாகும்.

இவ்வாண்டு வேடசந்தூர் ஒன்றியத்தில் 1,000 ஆதிதிராவிட குடும்பங்களுக்கும் மற்றும் நகரப்பகுதிகளில் உள்ள 5,000 ஆதிதிராவிட குடும்பங்களுக்கும் மேம்பாட்டு திட்டப்பணிகளை மேற்கொள்ள தாட்கோவின்மதுரை மாவட்ட வளர்ச்சி அலுவலர் திரு டி. எஸ். சுப்பிரமணியம் பணிகளை திட்டங்களை வகுத்துள்ளார்.

ஆதிதிராவிட மக்களின் நல்வாழ்வுக்கு ஆக்கம் தரும் இத்திட்டங்கள் தொடர்ச்சியாக மதுரை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்

**மாமூலன்**

## குயூலே செடி சாகுபடி

இராமநாதபுரம் மாவட்டத்தில், ரப்பருக்கு மாற்றுப் பொருளாக 'குயூலே செடி' சாகுபடியை மேற்கொள்ள மத்திய விஞ்ஞானம்-தொழில் நுட்பத் துறை முடிவு செய்துள்ளது.

குஜராத் மாநிலத்திலும் இத்திட்டம் மேற்கொள்ளப்படும். தமிழ்நாட்டில் 'குயூலே' சாகுபடியை மேற்கொள்ளும் பொறுப்பு மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்திற்குச் சுமார் 10,000 கன்றுகள் வழங்கப்படும். மதுரை மாவட்டத்திலும் இத்தகைய முன்னோடித் திட்டம் மேற்கொள்ளப்படும்.

சாகுபடிச் சோதனைகள் வெற்றிகரமாக முடிந்தால், ரப்பருக்கு மாற்றாக இதைப் பெருவாரியாக உற்பத்தி செய்ய இயலும்.

# கொம்புத்தூக்கி பழங்குடியினர்

தமிழ்நாட்டின் சேலம் மாவட்டத்தில் உள்ள ஏர்க்காடு மலையில் உள்ளது கொம்புத்தூக்கி என்னும் குக் கிராமம்.

இங்கு தங்குவதற்கான வசதியுடன் கூடிய பள்ளிக்கூடம் 1981 ஆம் ஆண்டு அக்டோபரிலிருந்து செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியில் 50 குழந்தைகளுக்குக் கல்வி அறிவு புகட்டுவதுடன் உணவும் இலவசமாக அளிக்கப்படுகிறது. இக்கிராமத்தில் குழந்தைகள் காப்பகம் ஒன்றும் உள்ளது. இக்காப்பகத்தில் 2 வயது முதல் 5 வயது வரையிலான 50 குழந்தைகள் இருக்கின்றனர்.

கொம்புத்தூக்கி மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதியிலுள்ள 60 பழங்குடியினர் குடும்பத்தினர் இதனால் பயன்பெறுகின்றனர். இக்கிராமத்திற்கு விரைவில் ஒரு மகப்பேறு மருத்துவ மையமும் வர இருக்கிறது. வாழவந்தியிலுள்ள ஆரம்பச் சுகாதார மையம் தற்போது இக்கிராம மக்களுக்கு மருத்துவ வசதி அளித்து வருகிறது. இக்கிராமத்திற்கு வாரம் ஒருமுறை ஆரம்பச் சுகாதார மையத்தின் மருத்துவர் வந்து மருத்துவ உதவி அளித்து வருகிறார்.

32 இலட்ச ரூபாய் செலவில் கிரிதாமன் கோயிலையும் மாரமங்களத்தையும் இணைக்கும் எட்டு கிலோ மீட்டர் நீள சாலை போடும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியில் உள்ளூர் மக்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். விரைவில் இச் சாலையில் பேருந்துகளும், இதர வாகனங்களும் செல்லக்கூடும். இதுவரை இவர்கள் வாழவந்தி கிராமத்திலுள்ள மருத்துவ மனைக்கு நோயாளிகளைக் கட்டிலில் எடுத்துச்சென்றார்கள். தங்களது உற்பத்திப் பொருட்களை ஒற்றையடிப் பாதை மூலம் எடுத்துச் சென்று சந்தைகளில் விற்று வந்தார்கள். இப்போது பேருந்துகள் இவர்களது சுமையைக் குறைக்கும். விரைவில் இக்கிராமத்திற்கு மின்சாரமும் வர இருக்கிறது.

சேலம் மாவட்டத்தில் பழங்குடியினருக்கான துணைத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகள் ஐந்து இருக்கின்றன.

ஏர்க்காட்டில் உள்ள 67 கிராமங்களில் 16,823 பழங்குடியினர் வசிக்கின்றனர் கொல்லிமலை, கல்ராயன்மலை, பச்சைமலை, அறுநூற்றுமலை ஆகிய பகுதிகளிலும் பழங்குடியினர் வசிக்கின்றனர். இந்நான்கு மலைகளிலும் 50,000 பழங்குடியினர் இருக்கின்றார்கள். இவர்கள் மலையாளிகள் என அழைக்கப்படுகின்றார்கள். இவர்களில் பெரும்பாலோர் விவசாயிகளாகவும், விவசாயத் தொழிலாளர்களாகவும் இருக்கின்றார்கள். சிறிய காட்டுப் பொருட்களையும் இவர்கள் சேகரிக்கிறார்கள். ஏர்க்காடு, கொல்லிமலை, கல்ராயன்மலை, அரநூற்றுமலை ஆகிய இடங்களில் அதிக அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நான்கு இருக்கின்றன. இச்சங்கங்கள் குறைந்த கால, நடுத்தரக்கால, நீண்டகால, கடன்களைப் பழங்குடியினருக்கு அளிக்கின்றன. பழங்குடியினரிடமிருந்து காட்டுப் பொருட்களை இச்சங்கங்கள் கொள்முதல் செய்கின்றன. அவ்சியப் பொருட்களை இச்சங்கங்கள் கிராமக் கடைகள் மூலம் பழங்குடியினருக்கு விநியோகிக்கின்றன.

இச்சங்கங்களில் உள்ள உறுப்பினர்களுக்குக் கறவை மாடுகள் வாங்கவும், கோழிப் பண்ணை நடத்தவும், பன்றி வளர்க்கவும் மானியத்துடன் கூடிய கடன்களை வழங்குகின்றன. ஏர்க்காட்டில் மட்டும் இத்திட்டத்தின் கீழ் 815 குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன.

மகப்பேறு மருத்துவ வசதி அளிப்பதற்காக பச்சைமலையில் 13 பழங்குடிப் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைக்கப்பட்ட பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படும் ஐந்து பகுதிகளிலும் தங்கும் வசதியுடன் கூடிய பள்ளிகள் 18 இருக்கின்றன. ஏர்க்காடு, கொல்லிமலை, கல்ராயன்மலைகளிலுள்ள தையல் மற்றும் பூவேலைப்பாடு பயிற்சி மையங்கள் உள்ளன.

புதிய இருபது அம்சத் திட்டத்தின் கீழ் கிராமப்புற மின்வசதிக் கழகம் கடன் அளிக்கும். ஒருங்கிணைக்கப்பட்ட பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்ட நிதியிலிருந்து மின் வசதிக்கான மானியம் பெறலாம். இத்திட்டத்தின் கீழ் 1982-83ல் 7.6 இலட்ச ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் பச்சைமலையிலுள்ள 5 கிராமங்களுக்கும் அருநூற்றுமலையில் உள்ள கிராமங்களுக்கும் மின்வசதி அளிக்கப்படும்.

தேனீ வளர்ப்பதற்கான தீவிரப் பயிற்சி 20 குடும்பங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. 2,650 தேனீப் பெட்டிகள் பழங்குடியினருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டத்தின் பழங்குடியினர் பகுதிகளில் சூழ்நிலை நவீன கால மாற்றங்களுக்கு ஏற்ப மெதுவாக மாறி வருகிறது.

## 200 வட்டாரங்களில் ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம்

**1982**ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டப் பணிகளைத் துவங்குவதற்காக, 200 வட்டாரங்களைக் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு தெரிந்தெடுத்துள்ளது. 1983ஆம் ஆண்டில் இது சுமார் 500 வட்டாரங்களாக அதிகரிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் திட்டம் தவிர, ஆறாவது திட்டத்தில் தனக்கு அளிக்கப்பட்ட அனைத்துத் திட்டங்களையும் ஆணைக்குழு நிறைவேற்றி வருகின்றது. தற்போது திட்டத்தின் மூன்றாவது ஆண்டு இறுதியில் கூடுதலாக 8.75 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்க ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது. முதல் இரண்டு ஆண்டுகளில் மட்டும் 5.5. இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பருவமல்லாத சமயங்களில், கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க தேசியக் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தினையும் கிராமப்புற வளர்ச்சி அமைச்சகம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1980–81ல் ரூ. 345.85 கோடி ரூபாய் வழங்கப்பட்டு, 42.08 கோடி மனித நாட்கள் உருவாக்கப்பட்டன. 1981-82லிருந்து மத்திய/மாநில அரசுகள் சரிபங்கு நிதி வழங்கி இத்திட்டத்தினை அமல் நடத்துகின்றன. 1981-82ல் உருவாக்கப்பட்ட மனித நாட்கள் 35.80 கோடி. 1982-83ல் ரூ. 380 கோடி செலவிடப்படும்.

## இந்தியாவில் புலிகள் பாதுகாப்புத் திட்டம்

இந்தியாவில் புலிகள் பாதுகாப்புத் திட்டம் 1973-74-இல் துவக்கப்பட்டது. மத்திய அரசு நியமித்த பணிக்குழு அளித்த பரிந்துரைகளின்படி இத்திட்டம் துவக்கப்பட்டது.

இயற்கைச் சுற்றுப்புறச் சூழ்நிலையில் புலிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது, அவைகளைப் பாதுகாப்பது, பிற்காலச் சந்ததியினர் பலனடையவும் குதூகலமாக இருப்பதற்காகவும் இத்திட்டம் துவக்கப்பட்டது.

அசாம், பீகார், ஒரிசா, உத்திரப்பிரதேசம், இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், கர்நாடகம், கேரளம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் மத்திய அரசின் புலிகள் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான காட்டின் பரப்பு குறைந்த பட்சம் 300 சதுர கிலோ மீட்டர் இருக்க வேண்டும். இப்பகுதி[illegible] முக்கிய பகுதியாகப் பராமரிக்கப்பட்டு, அப்பகுதியில் மக்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.



தற்போதுள்ள காடுகளில் புலிகள் வாழும் மொத்த பகுதி 15,800 சதுர கிலோமீட்டர் ஆகும். இதில் 5,142 சதுர கிலோமீட்டர் பகுதி மக்கள் அனுமதிக்கப்படாத புலிகள் பாதுகாப்புப் பகுதியாகும்.

உலக வனவிலங்கு நிதியமைப்பு இத்திட்டத்திற்காக ஒரு மில்லியன் அமெரிக்க டாலர்களை அளிப்பதென்று உறுதியளித்துள்ளது. இதில் 0.76 மிலியன் டாலர்கள் மதிப்புள்ள கருவிகள், அந்நிய நாட்டு ஆலோசனை, பயிற்சி, ஆய்வுப் பயணங்கள், புத்தகங்கள் போன்றவற்றை ஏற்கெனவே இவ்வமைப்பு அளித்து உதவியுள்ளது.


1972-ஆம் ஆண்டில் 9 காடுகளில் 268 புலிகள்தான் இருந்தன. 1981-இல் தற்போதுள்ள 11 காடுகளில் 757 புலிகள் இருக்கின்றன. இந்தியாவில் 1972-ஆம் ஆண்டில் 1827 புலிகள்தான் இருந்தன. 1979-இல் 3015 புலிகளாக அதிகரித்துள்ளன என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் புலிகளைத் தவிர இதர விலங்கினங்களும் பயனடைந்துள்ளன.

## இலக்கண மரபுக் கருத்தரங்கு

தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பில், இந்திய இலக்கண மரபு என்னும் பொருளில் மொழியியல் துறையின் சார்பாக செப்டம்பர் மாதம் 27, 28 ஆகிய இரு நாட்களிலும் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் பல அறிஞர்கள் உரையாற்றினார்கள்.

இரண்டு நாட்களிலும் நடந்த நான்கு அமர்வுகளிலும் ஒன்பது கட்டுரைகள் படிக்கப்பட்டன. தொல்காபபியருக்கும் பாணினிக்கும் இடையே உள்ள ஒற்றுமைகளைவிட வேற்றுமைகளை ஊன்றிக் கவனிப்பது நல்லது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. வேற்றுமைகளைக் கவனிப்பதன் மூலம் இலக்கணச் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட வெவ்வேறான மரபுகளை அறியலாம். தமிழ் இலக்கணங்களை மற்றைய இந்திய மொழிகளின் மரபு இலக்கணங்களோடு ஒப்பிடுவதும் நல்லது என்ற கருத்து ஆய்வாளர்களால் வெளியிடப்பட்டது.



ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
கண்ணைக் கவ்ரும் கைத்தறித் துணிகள்
வ்ண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்... அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!

பதிவு எண் : M. 8676

